வவுனியா மாவட்ட முஸ்லிம்கள்
வரலாறும் பண்பாடும்
வரலாற்று ஆய்வு நூல்

DONATED
by
S.H.M. JAMEEL

# தேசிய மீலாதுன் நபி விழா
# வன்னி - 2005

வெளியீடு
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கொழும்பு - 10

008537

LIBRARY
25 NOV 2011
*SEUSL*

வவுனியா மாவட்ட முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும்
வரலாற்று ஆய்வுநூல்

பக்கங்கள் : 128

அளவு : A5

பிரதிகள் : 1000

தேசிய மீலாத் விழா - (வன்னி 2005)வையொட்டி
வெளியிடப்படுகிறது (30.09.2005)

பதிப்பாசிரியர் : எம்.ஐ. அமீர்

தொகுப்பாசிரியர் : கலைவாதி கலீல்

ஆக்கம் : நூலாக்கக் குழு

வெளியீடு :
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு 10.

அனுசரணை :
வன்னி புனர்வாழ்வளிப்பு மாவட்ட அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 03.

# வன்னி புனர்வாழ்வு
# வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர்
# அல்ஹாஜ் றிஷாட் பதியுதீனின் செய்தி

**தே**சிய மீலாத் விழாவையொட்டி வெளியிடப்படும் இவ்வாய்வு நூாலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த 24 வருடங்களாக இலங்கை அரசு நாட்டின் நாலாபுறமும் தேசிய மீலாத் விழாக்களை நடாத்தி வருகிறது. இது அரசே முன்னின்று நடாத்தும் விழா என்பதால் விழா நடைபெறும் பிரதேசங்களில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்கிறது.

ஆனால், இதுகாலவரை வடபுலத்தில் இத்தேசிய மீலாத் விழாக்கள் நடைபெற்றதே இல்லை. வடபுலம் புறக்கணிக்கப்பட்டே வந்தது இதனைக் கருத்தில்கொண்ட நான் அதிமேதகு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தேன். அவ்வேண்டுகோளுக்கு மதிப்பளித்து இவ்வாண்டு இவ்விழாவை வன்னியில் நடாத்துவதற்கு அனுமதி வழங்கினார். அத்தோடு விழாவையொட்டிய அபிவிருத்திகளின் பொருட்டு 75 மில்லியன் ரூபாய்களையும் வழங்கினார். இவ்வரிய வாய்ப்பை வன்னிக்கு வழங்கியதற்காக முதற்கண் ஜனாதிபதிக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய முப்பெரும் மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் பாரிய

அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. உள்நாட்டு யுத்தத்தினால் இம்மாவட்டங்கள் சின்னாபின்னப்பட்டு பலத்த பின்னடைவுடன் காணப்பட்டன. எனவே இன்றைய சமாதானச் சூழலைப் பயன்படுத்தி மீள்கட்டுமாணமும் முஸ்லிம் மக்களுடைய மீள் குடியேற்றமும் நடைமுறைப்படுத்தப்பட்ட வேண்டியிருந்தது. அதற்கு வாய்ப்பாய் இவ்விழா அமைந்தது.

மீலாத் - கிராமங்கள் அமைத்தல், கலாசார நிலையங்களை நிர்மாணித்தல், வீதி புனருத்தாரணம், மின்சாரம் வழங்குதல் போன்ற இன்னோரன்ன அபிவிருத்தித் திட்டங்களுடன் இருநாள் பெருவிழாவாக மன்னார் முசலியிலும் வவுனியா, சூடுவெந்தபுலத்திலும் விழாவை நடாத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

வடபுலத்து முஸ்லிம்களின் புராதன வரலாற்றையும் கலை கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் சித்தரிக்கும் மாவட்ட ரீதியிலான ஆய்வு நூற்கள் நான்கு வெளியிடத் திட்டமிடப்பட்டது. அதன் அறுவடையே உங்கள் கரங்களில் தவழ்கின்ற இந்த மன்னார், வவுனியா வரலாற்று ஆய்வுநூலாகும்.

எனது தேர்தல் மாவட்டத்தைச் சாராதவர்களாக இருப்பினும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களையும் நான் மறந்து விடவில்லை. அவர்களின் இன்ப துன்பங்களில் பங்குகொள்ள வேண்டியது எனது கடன். எனவே இவர்களது வரலாறும் நூலுரு பெற வேண்டும். ஆவணமாகப் பதியப்பட வேண்டுமென்று விரும்பினேன். எனவே யாழ்ப்பாண, கிளிநொச்சி மக்களுக்காகவும் ஒரு நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூல்கள் வெளிவர, உறுதுணை நின்ற அனைவருக்கும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்ட நூலாக்க குழுவுக்கும் மனப்பூர்வமான எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

றிஷாட் பதியுதீன்.

# மதிப்புரை

மக்கள் யாவரும் ஒன்றே குலம் எனும் மார்க்கத்தைப் போதித்து அதனைச் செயற்படுத்திக் காட்டிய மகான் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்தநாளை நினைவுபடுத்தும் இந்நன்நாளில் வடபுலத்து முஸ்லிம்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் ஆவணப்படுத்தும் நோக்குடன் வெளியிடப்படும் வரலாற்று நூல்களுக்கு மதிப்புரை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்துக்களும் கிறிஸ்தவர்களும் பெரும்பான்மையாக வாழும் வடபுலத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராயினும் அவர்களுடைய கலாசாரம் அடையாளம் காணடிக்கூடிய அளவுக்கு தனித்துவமானவை. அவற்றைப் படம்பிடித்துக் காட்டுவதே இவ்வெளியீடுகளின் நோக்கம்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக மீலாதுந்நபி விழா இந்நாட்டில் தேசிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது. பிரதான விழா நடைபெறும் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள முஸ்லிம்களின் வரலாற்றையும் பாரம்பரியத்தையும் உள்ளடக்கிதான வரலாற்று நூல்களை வெளியிடுவது முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்றிட்டங்களில் ஒன்றாகும். அதனடிப்படையில் ஏற்கனவே களுத்துறை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை, மாத்தறை, அம்பாறை, கம்பஹா, புத்தளம், பொலநறுவை போன்ற மாவட்ட முஸ்லிம்களினதும் அக்குறணை, பாத்ததும்பறை முதலான பிரதேச முஸ்லிம்களினதும் வரலாற்றுப் பாரம்பரியங்கள் நூலாக்கம பெற்றிருக்கின்றன.

வடபுலத்தில் இவ்வாறானதொரு முயற்சியை தற்சமயம் மேற்கொள்வது சிரமமான ஒன்றாயினும் கிடைக்கப் பெற்ற ஆகக்கூடிய தகவல்களைக்கொண்டு இந்நூற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

புனர்வாழ்வளிப்பு, வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் கௌரவ றிஷாட் பதியுதீன் அவர்களின் முயற்சியினதும் எழுத்தாளர்களுக்கும் ஏனையோருக்கும் அவர் வழங்கிய உற்சாகத்தினதும் வெளிப்பாடே இந்நூல்.

வாசகர்கள், மேலும் உட்படுத்தப்பட வேண்டுமெனக் கருதும் முக்கிய விடயங்கள் இருப்பின் அவற்றைத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தும்போது மற்றுமொரு குறைநிரப்பு நூலை வெளியிடக்கூடிய சாத்தியக்கூறுகள் கவனத்திற்கொள்ளப்படும்.

இந்நூலாக்க முயற்சியில் ஈடுபட்ட ஆய்வாளர்களையும் எழுத்தாளர்களையும் தகவல்கள் தந்துதவிய பெரியோர்களையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்ட விரும்புகின்றேன்.

திணைக்களத்தின் இவ்வாறான முயற்சிகள் தொடர வேண்டுமெனவும் ஆசைப்படுகின்றேன்.

ஏ.சீ.எம். றாஸீக்,

செயலாளர்,

புனர்வாழ்வளிப்பு, மாவட்ட அபிவிருத்தி (வன்னி) அமைச்சு.

# மதிப்புரை

வருடந்தோறும் நடைபெற்றுவரும் தேசிய மீலாதுந்நபி விழா இம்முறை வன்னியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளமையும் அதனையொட்டி வன்னியின் மாவட்டங்களில் பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் செயற்பட்டு வருவதும் இன்றைய சூழலில் முக்கியத்துவம் கொண்டதொன்றாகும்.

வன்னியில் — மன்னார், வவுனியா, முல்லைத்தீவு எனும் மாவட்டங்களில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த முஸ்லிம்கள் மாவட்டங்களின் பெரும்பான்மை இனத்தவர்களுடன் சௌஜன்யமாக வாழ்ந்து வந்தபோதும் குறிப்பிட்ட காலகட்டமொன்றில் அவர்கள் அனைவரும் வடக்கினின்றும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இது நடந்து பதினைந்து வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் இன்று இவ்வகதி முஸ்லிம்கள் மீண்டும் தமது தாயகம் செல்ல ஏதுவான சூழல் உருவாகியுள்ளது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

நூற்றாண்டுகாலம் வாழ்ந்த முஸ்லிம்கள் வெளியேறியபோதும் அவர்களின் பாரம்பரியம், வாழ்வுமுறை, கலை, கலாசாரம் போன்றவை அம்மண்ணின் மறக்க முடியாத வரலாறுகளாகும். இன்று நடைபெறும் தேசிய மீலாத் விழாவையொட்டி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இம்மாவட்டங்களின் முஸ்லிம் வரலாற்றுச் சுவடுகளை நூலுருவில் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதன் வெற்றிக்குப் பணிபுரிந்த அனைத்து எழுத்தாளர்களும் அவர்களது ஆக்கங்களும் எதிர்கால சந்ததியினருக்கு நல்லதொரு ஆதனத்தை விட்டுச் செல்பவர்களாக ஆகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்குமாக ஆக்கப்படும் இந்நூல்கள், அந்தந்த மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு, பாரம்பரியம், கலை, கலாசாரம், மார்க்கச் செயற்பாடுகள் என்பவற்றை எடுத்தியம்புபவையாக அமைகின்றது. விட்டுப்போன பதினைந்து வருட வனவாச வரலாறுகூட இதனுள் அடக்கமே. எனவே, எதிர்காலப் பதிவாக இது மிளிருமென்பதில் ஐயமில்லை.

இந்நூலின் ஆக்கத்திற்குப் பெரிதும் பங்களித்த கலைவாதி கலீல், திணைக்களத்தின் பணிப்பாளர், மற்றைய உத்தியோகத்தர்கள், வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் உத்தியோகத்தர்கள் சமூகத்தின் பாராட்டுக்குரியவர்களாவர்.

இந்நூல் முஸ்லிம்களின் மத்தியில் பொக்கிசமாகப் பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும்.

ஏ. காலிதீன்,

# பணிப்பாளர் ஆசி உரை

""நிச்சயமாக உம்மை நாம் அகில உலகத்தார்க்கு அருட்கொடையாகவே அனுப்பி வைத்தோம்"" என்று அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்களின் வருகை பற்றிக் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு அல்லாஹ்வினால் புகழப்படுகின்ற நபி (ஸல்) அவர்களை நாமும் புகழ வேண்டும். அவர்கள் காட்டிய வழியில் வாழ வேண்டும் என்ற நோக்கிலேயே இலங்கையில் வருடா வருடம் மீலாத் விழாவினை அரச அங்கீகாரத்துடன் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் விமர்சையாக கொண்டாடி வருகின்றது. இவ்வாண்டின் தேசிய மீலாத் விழா கௌரவ மேல் மாகாண ஆளுநரும் முஸ்லிம் சமய விவகாரங் களுக்கான ஜனாதிபதி ஆலோசகருமான அல்ஹாஜ் அஸ் ஸெய்யித் அலவி மௌலானா அவர்களின் வழிகாட்டலில் வன்னிப் புனர்வாழ்வு மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் கௌரவ அல்ஹாஜ் றிஷாட் பதியுத்தீன் அவர்களின் தலைமையில் வரலாற்றுப் புகழ்மிக்க வன்னி மாவட்டத்தில் பெரு விழாவாக நடை பெறுகின்றது.

இவ்விழாவினை முன்னிட்டு அபிவிருத்திப் பணிகளுக்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க அவர்களின் உத்தரவுக்கிணங்க இலங்கை அரசாங்கம் திணைக்களத்திற்கு வழங்கிய ஏழரைக்கோடி ரூபாவும் வன்னிப் புனர்வாழ்வ அமைச்சினால் சுமார் 20 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டு சமூக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விழா

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட முஸ்லிம் அகதிகளின் சமூக அபிவிருத்திக்கு வழிவகுத்திருப்பது வடமாகாண அகதி முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும்.

எமது திணைக்களத்தினால் கொண்டாடப்படும் வருடாந்த மீலாத் விழாவின் முக்கிய அம்சமாக அமைவது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை ஆவனப்படுத்தும் முயற்சியாகும். இந்தவகையில் இவ்வருடம் வடக்கு முஸ்லிம்களின் வரலாறு தொகுக்கப்படுவது பாரியதொரு பணியாகும். கடந்த காலங்களிலும் எமது திணைக்களம் வருடாந்தம் மீலாத் நடைபெறும் மாவட்ட வரலாற்று நூல் வெளியிடுவது பாரம்பரியமாகும். இத்தொடரில் இம்முறை வடக்கு முஸ்லிம்களின் வரலாற்றைக் கூறும் யாழ் - கிளிநொச்சி மாவட்ட வரலாறு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் வரலாறுகள் தொகுக்கப்பட்டிருப்பது முக்கிய நிகழ்வாகும்.

இம்முறை தொகுக்கப்பட்டுள்ள வட முஸ்லிம்களது வரலாற்றுத் தொகுப்புகளும் எதிர்கால சந்ததியினருக்கு வடக்கு முஸ்லிம்களது வரலாற்றை அறிந்துகொள்வதற்காக பெரிதும் உதவும் என கருதுகிறேன். இந்தவகையில் இதனை நூலுருப்படுத்துவதில் பல்வேறு வகைகளிலும் உதவிய வடக்கு மாகாண அறிஞர்கள், ஆய்வாளர்கள், நூலாக்க குழுவினர், நூலைத் தொகுத்தளித்த சகோதரர் கலைவாதி கலீல் அவர்களுக்கும் இந்நூலை அச்சிட்டு வெளியிட உதவிய பதிப்பகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம்.ஐ. அமீர்,
பணிப்பாளர்,
மு.ச.ப.அ. திணைக்களம்.

## வவுனியா மாவட்ட தேசிய மீலாத் மலர் குழுத் தலைவரின் ஆசிச் செய்தி

வன்னித் தேர்தல் தொகுதியில் தேசிய மீலாத் விழா 2005ம் வருடம் கொண்டாடுவதற்கு பெரும் முயற்சியும் ஆர்வமும் கொண்ட வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வளிப்பு மாவட்ட அபிவிருத்தி அமைச்சருமான அல்ஹாஜ் றிசாத் பதியுதீன் அவர்களுக்கு வன்னிமாவட்ட மக்கள் சார்பாக முதலில் நன்றி கூறுகிறேன்.

இவ்விழாவை முன்னிட்டு இம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மாவட்ட முஸ்லிம் மக்களின் வளர்ச்சிக்கு பெரும் உதவியாக அமையவுள்ளன.

தேசிய மீலாத் விழாவை முன்னிட்டு வவுனியா மாவட்ட முஸ்லிம் கிராமங்களின் வரலாற்றுத் தொகுப்பை நூல் வடிவில் வெளியிட கௌரவ அமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சிகள் பாராட்டுக்குறியது.

இந்த வரலாற்றுத் தொகுப்பை ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மூலம் தொகுத்து எடுத்துள்ளேன். இத்தொகுப்பு வவுனியாமாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றையும், இருப்பையும், அவர்களின் கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு வரலாற்று ஆவணமாக திகழும் என்பதில் சந்தேகம் இல்லை.

இத்தொகுப்பை கிராமங்களில் தகவல் திரட்டி வரலாற்றுத் தொகுப்பாக வெளியிட உதவிய மலர் குழுவினருக்கும் நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன்.

இடம்பெயர்ந்த நிலையில் வாழும் மக்களுக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் இத்தொகுப்பு தங்கள் மாவட்டத்தையும் கிராமத்தின் வரலாற்றையும் அறியக் கூடிய ஆவணமாக திகழும் என்பதில் சந்தேகமில்லை.

தேசிய மீலாத் விழா வெற்றியடையவும் அபிவிருத்தி திட்டங்கள் நிறைவு பெறவும் வாழ்த்துகின்றேன்.

வஸ்ஸலாம்

அல்ஹாஜ் **M.I.** முத்து முகம்மது, **JP** (அதிபர்)
மாவட்ட சமுர்த்தி இணைப்பு அலுவளர்.
(தலைவர்) மாவட்ட தேசிய மீலாத் மலர் குழு.

# உள்ளே ...........


வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீக வரலாறும்

சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களும் 16

சூடுவெந்த புலவு கிராமத்தின் வரலாறு 39

ஹிஜ்ரா புரம் வரலாறு 51

மதீனா நகர் கிராமத்தின் வரலாறு : 57

வவுனியா நகர முஸ்லிம்களின் வரலாறு 60

பட்டாணிச்சூர் வரலாறும்
வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் பாரம்பரியங்களும் 72

ஆண்டியாபுளியங்குளம் வாழவைத்தகுளம் வரலாறு 81

சின்னச்சிப்பிக்குளம் கிராமமும் அதன் பின்னணியும் 89

ஆனைவிழுந்தான் கிராமத்தின் வரலாறு 100

பாவற்குளம் கிராமத்தின் வரலாறு 105

வவுனியா (வன்னி) கலாசாரம் -
முஸ்லிம்கள் ஒரு நோக்கு 120

# வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீக வரலாறும் சமூக, பொருளாதார, கலாசார அம்சங்களும்

- முஹம்மது ஹனீபா ராசிக் -
அபிவிருத்தி உத்தியோகத்தர்

## *வவுனியா மாவட்டமும் முஸ்லிம்களும்*

வவுனியா மாவட்டம் பொதுவான அடிப்படையிலும், அதில் முக்கியமாக முஸ்லிம்கள் தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது. இதில் வவுனியா மாவட்டத்தின் அமைவிடம் அதனோடு இம்மாவட்டத்தின் வரலாறு, குடித்தொகைப் பரம்பல் என்பன பொதுவான அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது.

அடுத்து வவுனியா மாவட்டத்தில் முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு, முஸ்லிம்களின் குடியிருப்புக்கள், அதனோடு பிரதான முஸ்லிம் கிராமங்கள், அவர்களின் சமூக, பொருளாதார, அரசியல் அம்சங்கள் என்பன உள்ளடக்கப்பட்டதாக இவ்வத்தியாயம் அமைகிறது.

# வவுனியா மாவட்டம்
# ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

வட மாகாணத்தின் முக்கிய கேந்திர நிலையமாக அமைந்துள்ள வவுனியா மாவட்டமானது ''வடக்கே முல்லைத் தீவு, தெற்கே அனுராதபுரம், கிழக்கே திருகோணமலையும் - அனுராதபுரமும், மேற்கே மன்னாரும் - முல்லைத் தீவும் ஆகிய பிரதேசங்களை எல்லைகளாகக் கொண்டு காணப்படுகிறது. இம்மாவட்டத்தின் விஸ்தீரனம் 1966.9 ச.கி.மீ. ஆகும். இது ஏறக்குறைய 196690.96 ஹெக்டெயர் நிலப்பரப்பையும் கொண்டுள்ளது. இங்கு மொத்த சனத்தொகை 2001ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி 14394 பேர் உள்ளனர். இதில் வவுனியா வடக்குப் பிரதேச செயலகம் உள்ளடக்கப்படவில்லை. ஆனால் 2002-12-31ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தகவல்படி வவுனியா மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 144220 பேர் உள்ளனர்.''(1) என்று வவுனியா மாவட்ட புள்ளிவிபரத் தகவல் கூறுகின்றது.

அடுத்து வவுனியா மாவட்டத்தின் வரலாறு பற்றி நோக்கவரும் பட்சத்தில் முதலில் வவுனியா என்ற பெயர் எவ்வாறு வந்தது என்பதை அறிய முற்படும்போது அது தொடர்பா:க பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. ''ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாண ஆட்சிக்கும் அனுராதபுர ஆட்சிக்கும் அடங்காமல் இருந்ததால் 'அடங்காப்பற்று' என்று அழைக்கப்பட்டதாக ரெனென்ட் (Renent) என்ற ஆங்கிலேயர் கூறியுள்ளார்''(2)

இந்தியாவிலிருந்து வந்த வன்னியர் வாழ்ந்ததால் வன்னி என்றும், வனம் சார்ந்த பகுதி வன்னி என்றும் அழைக்கப்பட்டு வரலாயிற்று. இருந்தும் 'வவுனியா' என்ற பெயர் ''1750ஆம் ஆண்டளவில் அங்கு வாழ்ந்த ஒரு கோயில் முகாமையாளர் வவுனியர் என்று அழைக்கப்பட்டார். எனவே இது வன்னியன் ஒருவன் பெயரிலிருந்து தோன்றியதாகும்.''(3) என்று ஜே. பி. லூயிஸ் என்பவர் 1895ஆம் ஆண்டு வெளியிட்ட Manual of the Vanni District என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

'வவுனியா' என்ற பெயர் வருவதற்கு பின்வரும் நிகழ்வு காரணமாக இருக்கலாம் என்று எண்ணப்பட்டுகிறது. ''ஆங்கிலேயர் 1804ஆம் ஆண்டு பண்டார வன்னியன் கற்சிலைமடு என்ற இடத்தில் வைத்து தோற்கடிக்கப்பட்டதால் அதன் ஞாபகார்த்தமாக அவ்விடத்திலுள்ள நடுகல்லில் 'பண்டார வவுனியன்'( Bandara Wavuniyan) என்று குறிப்பிட்டிருப்பதால் அதிலிருந்து வவுனியா என்ற பெயர் வந்திருக்கலாம் என்று சிலர் குறிப்பிடுகின்றனர்.''[4] வவுனியா நகரப்பகுதியிலுள்ள குளமானது ஆரம்ப காலங்களில் விலாங்குளம் என்று அழைக்கப்பட்டது. வவுனியா என்ற பெயர் வந்தவுடன் அக்குளம் வவுனியாக் குளம் என்று கூறப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தின் சமூக நிலை பற்றி நோக்கும்போது இங்கு பல்லின சமூகத்தைச் சார்ந்தவர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். இதில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தைச் சார்ந்தவர்கள் 1950இற்கு முற்பட்ட காலப்பகுதியில் எவ்விதப் பிரச்சினையும் இன்றி ஒற்றுமையாக வாழ்ந்னர். அதில் தமிழர்களின் திருமண நிகழ்வு, விசேட நாட்களுக்கு முஸ்லிம்கள் கலந்து சிறப்பிப்பதும் அதே போன்று முஸ்லிம்களின் பெருநாள், திருமண நிகழ்வுகளுக்கு தமிழர்கள் கலந்துகொள்வதும் சிறப்பம்சமாக இருந்தது.

அதேபோன்று வவுனியாவைப் பொறுத்தவரை ஊர்களின் பெயர்களை வைத்து அதில் எந்த இனச் சமூகம் வாழ்கின்றனர் என்று கூறமுடியாது. ஏனெனில் ஊர்களின் பெயர்களானது மோட்டை, மடு, குளம் என்றே பெரும்பாலும் அழைக்கப்பட்டது. இதனால் இப்பெயரை வைத்து இது ஒரு வன்னி கிராமம் என்று கூறமுடியுமே தவிர எந்தச் சமூகம் வாழ்கின்றனர் என்று கூறமுடியாது. உதாரணம் சாளம்பைக்குளம் முஸ்லிம்கள் வாழும் பகுதி நெளுக்குளம், பூவரசங்குளம் இங்கு தமிழர்கள் வாழும் பகுதி மாமடு இங்கு சிங்களவர் வாழும் பகுதி இதில் தனி இனத்தைக் குறிக்கும் பெயர்கள் கூறப்படவில்லை. எனவே இதிலிருந்து வவுனியா மாவட்டத்தில் சகல சமூகங்களும் இணக்கப்பாட்டுடன் வாழ்ந்துள்ளதை அவதானிக்கலாம்.

ஆனால் 1956, 1977, 1983 இனக் கலவரத்தின் பின்பு

இங்கு சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் ஒரு கசப்புத்தன்மை ஏற்பட்டது. தவிர இம்மாவட்டத்தில் கிழக்கு மாகாணத்தைப் போன்று இன மோதல்கள் பாரதூரமாக இடம்பெறவில்லை எனலாம். இதே போன்று 1990 இல் வடமாகாணத்திலிருந்து முழுமையாக முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள். அப்போதும் முஸ்லிம்- தமிழர்களுக்கிடையில் இனமோதல்கள் ஏற்படவில்லை. தற்போதைய சூழ்நிலையிலும் வவுனியா மாவட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்கள் ஒரு அச்சம் கலந்த உணர்வுகளுடன் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

''இம்மாவட்டத்தின் பொருளாதார நிலையில் விவசாயமே பிரதான தொழிலாக இருந்ததனால் வவுனியா நகரப்பகுதியை தவிர்த்து குளங்கள், நீர் வசதியுள்ள இடங்களைப் பார்த்து குடியேறினர். இங்கு ஓலை, வைக்கோல்களால் மேயப்பட்ட வீடுகளை அமைத்தனர். உணவுக்குத் தேவையான அனைத்துப் பொருட் களையும் தாங்களே உற்பத்தி செய்தனர். இது தவிர மண்ணெண்ணை, புடைவைகள், மணிக்கடைப் பொருட்கள், விவசாய உபகரணங்கள் கிராமங்களிலே பெற்றுக்கொள்ளும் வகையில் வீடு வீடாக விற்பனைக்கு வந்தன.''[(5)] அவர்கள் இதனால் இக்கிராமத்தவர்கள் நகரத்தை நாடவேண்டிய தேவை ஏற்படவில்லை.

இதன் காரணமாக வவுனியா நகரப்பகுதியில் முதன் முதலில் மன்னார் முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காரைநகர், புங்குடு தீவு பிரதேசத்தவர்களும் சிறுசிறு கடைகளை ஆரம்பித்து வியாபாரம் நடாத்தி வந்தனர். அது பிற்பட்ட காலப்பகுதியில் நகரமானது இன்றைய காலப்பகுயில் விவசாயத்திற்கு அடுத்த அம்சமாக பொருளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு அநேக மானோர் வர்த்தகத்துறையில் இடம்பிடித்துள்ளனர். ஏனெனில் வவுனியா நகரமானது இன்று வர்த்தக வியாபாரத்திற்குரிய கேந்திர நிலையமாக உள்ளது எனலாம்.

அரசியல் நிலையானது 1960 காலப்பகுதி வரை வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் என்பன ஒரே தேர்தல் தொகுதியாகக்

காணப்பட்டது. இது 1970இல் வவுனியா, முல்லைத்தீவு ஒரு தொகுதியாகவும், மன்னார் தனித் தொகுதியாகவும் மாற்றப்பட்டது. பின்னர் 1977 தேர்தலில் வவுனியா மாவட்டம் மனித் தேர்தல் தொகுதியாக கொண்டு வரப்பட்டது. எனவே 1977இல் நடைபெற்ற தேர்தலில் வவுனியா தொகுதி சார்பாக சிவசிதம்பரம் என்பவர் தெரிவு செய்யப்பட்டார். 1978இல் விகிதாசார முறை அறிமுகம் செய்யப்பட்டதால் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மூன்றும் சேர்ந்து வன்னி மாவட்டம் என்று அழைக்கப்பட்டது. இதில் வவுனியா மாவட்டம் ஒரு தேர்தல் தொகுதியாக உள்ளதோடு வன்னி மாவட்டத்தில் 100185 வாக்காளர்களைக் கொண்ட பெரிய தொகுதியாகவும் வவுனியா மாவட்டம் காணப்படுகிறது.

கல்வியைப் பொருத்தமட்டில் குறிப்பிடும் அளவிற்கு ஆரம்ப காலங்களில் பெரிதாக இல்லை. ஏனெனில் நகருக்கு வெளியே நான்கு ஐந்து மைல்களுக்கு அப்பால் கிராமங்களில் மக்கள் வாழ்ந்ததால் கல்வியின் தேவை உணரப்படவில்லை. இங்கு முதன்முதலில் கட்டப்பட்ட பாடசாலை சீ. சீ. ரி. எம். எஸ் பாடசாலையேயாகும். வவுனியா மாவட்டத்தில் 1970 வரை க. பொ. த. (சா/தர)ம் வரையே காணப்பட்டது. இதனால் உயர்கல்விக்காக மன்னார், யாழ்ப்பாணம் சென்று வவுனியா மாவட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். 1970 இற்கு பின்னரே க. பொ. த. (உ/தர)ம் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் கல்வித்துறையில் வவுனியா மாவட்டம் வளர்ச்சியடைந்தது.

கலை, கலாச்சாரம் என்னும் போது மன்னார், யாழ்ப்பாணத் தைப் போன்று ''கலைகள் பெரிதாக இங்கு வளர்ச்சியடைந்ததாக பெருமை பேச முடியாது இருந்த்போதிலும் முஸ்லிம்கள் மத்தியில் கோலாட்டம் ஒரு கலை அம்சமாக காணப்பட்டது.''[6] கலாச்சாரத்தைப் பொறுத்தவரையில் இங்கு வாழ்ந்த மக்கள் தங்களுக்கென்று தனித்துவமான கலாச்சாரத்தைக் கொண்டு வாழ்ந்தனர். அதில் எவ்வித பிரச்சினைகளும் இடம் பெற்றதாக வரலாறுகள் கூறவில்லை.

வவுனியா மாவட்ட குடித்தொகைப்பரம்பலும், கட்டமைப்பும் :

இலங்கையில் பெரிய நிலப்பரப்பையும் குறைவான சனத்தொகையையும் கொண்ட மாவட்டங்களுள் வவுனியா மாவட்டமும் ஒன்றாகும். ''இங்கு மூவின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதில் தமிழர்கள் 85.64 வீதமும், சிங்களவர்கள் 8.45 வீதமும், முஸ்லிம்கள் 5.89 வீதமும் உள்ளனர். 2002 கணக்கெடுப்பின்படி இனரீதியாக இம்மாவட்டத்தில் சனத்தொகைக் கட்டமைப்பில் தமிழர் பெரும்பான்மையாகவும் காணப்படுகின்றனர்.''[6] இதனை பின்வரும் வரைபடம் தெளிவாகக் காட்டுகின்றது.




Source : Divisional Secretariats.

இம்மாவட்டத்தின் ''சனத்தொகைப்பரம்பலை மத ரீதியாக பார்க்கும்போது இங்கு இந்து, பௌத்தம், கத்தோலிக்கம், இஸ்லாம் ஆகிய மதங்கள் காணப்படுகின்றது. இதில் இந்துக்கள் பெரும்பான்மையாக 112133 பேர் உள்ளனர்'' பௌத்தர்கள் 13151, கத்தோலிக்கர்கள் 9534, இஸ்லாமியர் 9402 ஆக உள்ளனர்.''[7] இவர்கள் பிரதேச அடிப்படையில் காணப்படுகின்றனர். என்பதை பின்வரும் அட்டவணை 1 மூலம் காணலாம்.

அட்டவணை

மத ரீதியான குடித்தொகைப் பரம்பல் 31-12-2002.

| பிரதேச செயலகம | இந்து | பௌத்த | கத்தோ | இஸ்லாம் |
|---|---|---|---|---|
| வவுனியா | 86,590 | 847 | 7,550 | 4,454 |
| வவுனியா தெற்கு | 22 | 12,304 | 30 | - |
| வவுனியா வடக்கு | 13,115 | - | 110 | 01 |
| வெங்கள செட்டிக்குளம் | 12,406 | - | 1,844 | 4,947 |
| மொத்தம் | 112,133 | 13,151 | 9,534 | 9,404 |

Source : Divisional Secretariats.-2002

இம்மாவட்டத்தின் ''குடித்தொகை பரம்பலை பால், வயதடிப்படையில் நோக்கும் போது பால் அடிப்படையில் ஆண்கள் 70,660, பெண்கள் 73,560 ஆக உள்ளனர். இதில் பெண்களே பெரும்பான்மையாக காணப்படுகின்றனர். வயதடிப்படையில் 19-37 வயதிற்குபட்ட இளைஞர்கள் 35,811 பேர் உள்ளனர் இதற்கு அடுத்தகட்டத்தில் 38-60 வயதிற்குட்பட்டவர்கள் 29,486 பேர் உள்ளனர்.''(8)

வவுனியா மாவட்டத்தில் குடித்தொகைப் பரம்பல் நகர, கிராம ரீதியாக எவ்வாறு காணப்படுகின்றது என்பதை நோக்கும் போது இங்கு நகரப்பகுதியை விட கிராமப்பகுதிகளிலே கூடுதலானோர் காணப்படுகின்றனர். ஏனெனில் இவர்கள் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்டுள்ளதால் நகரப்பகுதியை விரும்பாது கிராமப்பகுதிகளில் கூடுதலாக வாழ்கின்றனர் எனலாம். இதில் ''வவுனியா நகரப்பகுதியில் 53,237 பேரும் கிராமப்பகுதியில் 90,703 பேரும் வாழ்கின்றனர்.''(9)

வவுனியா மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் குடித்தொகைப் பரம்பல் எவ்வாறு உள்ளது. என்பதை நோக்கும்போது இங்குள்ள நான்கு பிரதேசப் பிரிவுகளில் ''வவுனியா பிரதேச செயலகப்

பிரிவுக்குற்பட்ட பகுதியில் 99447 பேர் உள்ளனர். இது 2002ஆம் ஆண்டு பிரதேச செயலகத்தின் கணக்கெடுப்பின் படி அமைந்தது"[10] அத்தோடு பிரதேச அடிப்படையில் தமிழ், சிங்கள, முஸ்லிம்களின் குடித்தொகைப்பரம்பலையும் நோக்கும் போது அதில் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழர்கள் பெரும்பான்மையாகவும் ஒரு பிரதேச செயலகப்பிரிவில் அதாவது வவுனியா தெற்கு பகுதியில் சிங்களவர்கள் பெரும்பான்மையாகவும் வாழ்கின்றனர். ஆனால் வெங்களச் செட்டிக்குளம், வவுனியா வடக்குப்பகுதியில் ஒரு சிங்களவர் கூட இல்லை. இதேபோன்று முஸ்லிம்களைப் பொருத்தவரையில் வவுனியா, வெங்கள செட்டிக்குளம் ஆகிய பிரதேச செயலகப்பிரிவில் பெரும்பாலானோர் வாழ்கின்றனர். ஏனைய இரு பரதேச செயலகப் பிரிவிலும் ஒருவர் உள்ளார் என்பது குறிப்படத்தக்கது. தமிழர்கள் நான்கு பகுதியிலும் வாழ்கின்றனர். இதனை விபரமாக அட்டவணை காட்டுகிறது.

அட்டவணை

2002-12-31 இன்
பிரதேச அடிப்படையில் சனத்தொகை விபரம்.

| பிரதேச செயலகம் | மொத்த சனத்தொகை | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம்கள் |
|---|---|---|---|---|
| வவுனியா | 99,441 | 881 | 94,119 | 4,441 |
| வவுனியா தெற்கு | 12,356 | 12,315 | 41 | - |
| வெங்கற செட்டிக்குளம் | 19,197 | - | 14,250 | 4,947 |
| வவுனியா வடக்கு | 13,226 | - | 13,225 | 01 |
| மொத்தம் | 144,220 | 13,196 | 121,635 | 9,389 |

Source : Divisional Secretariat - 2004

வவுனியா மாவட்டத்தின் சனத்தொகை வளர்ச்சி வீதமானது அதிகரித்துக் கொண்டே வந்திருக்கின்றது. இதில் ''இலங்கையில் முதலாவது சனத்தொகை கணிப்பீடு 1881ம் ஆண்டு மேற்கொள்ளப் பட்டது. அன்றிலிருந்து இறுதியாக மேற்கொள்ளப்பட்ட 2001ஆம் ஆண்டு வரையில் வவுனியா மாவட்டத்தில் சனத்தொகை வளர்ச்சி

வீதத்தை நோக்கும் போது அதிகரித்துக் கொண்டே வந்திருப்பதை அவதானிக்கலாம்"[11] அதிலும் சிங்களவரின் சனத்தொகை வளர்ச்சி வீதமானது 1921இன் பின்னர் கூடுதலாக அதிகரித்துக் கொண்டு வந்திருப்பதையும் தமிழர்களின் வளர்ச்சி வீதம் குறைந்திருப்பதை முஸ்லிம்கள் சாதாரணமாக வளர்ச்சி பெற்று வந்திருப்பதையும் அதிலும் சிங்களவர்கள் 1981 இன் பின்னர் 16.55மு இலிருந்து 8.45மு மாக குறைந்திருப்பதும் அவர்களின் வளர்ச்சியில் வீழ்ச்சி காணப்படுவதையும் கீழ்வரும் அட்டவணை 2.3 தெளிவாகக் காட்டுகிறது.

அட்டவணை

வவுனியா மாவட்ட சனத்தொகை வளர்ச்சி 1981 - 2001

| ஆண்டு | சிங் | % | தமிழர் | % | முஸ்லிம் | % |
|---|---|---|---|---|---|---|
| 1881 | 1157 | 7.43 | 13164 | 84.55 | 1133 | 7.28 |
| 1891 | 1199 | 7.73 | 13030 | 84.06 | 1139 | 7.35 |
| 1901 | 1128 | 7.44 | 12726 | 83.95 | 1069 | 7.05 |
| 1911 | 1848 | 10.66 | 14059 | 81.1 | 1241 | 7.16 |
| 1921 | 2215 | 11.84 | 14978 | 80.07 | 1345 | 7.19 |
| 1946 | 3870 | 16.65 | 17071 | 73.44 | 2153 | 9.26 |
| 1963 | 12020 | 17.55 | 51410 | 75.05 | 4990 | 7.15 |
| 1971 | 15541 | 16.27 | 73010 | 76.42 | 6665 | 6.98 |
| 1981 | 15749 | 16.55 | 72893 | 76.38 | 6505 | 6.82 |
| 2001 | 12159 | 8.45 | 123268 | 85.64 | 8471 | 5.88 |

Source : Census and Statistical Department - Colombo.

## வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு :

அறிவியல் துறையில் பூர்வீகமானது ஒரு சமூகத்தின் வரலாற்று இருப்புடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. ''ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு சமூகம் எத்தனை கால இருப்பைக் கொண்டுள்ளது, அச்சூழலுடன் குறிப்பிட்ட சமூகம் எத்தகைய இடையீட்டுத்

தொடர்புகளை பேணி வருகின்றது போன்றவற்றை மதிப்பிடுகின்ற அளவுகோலாக பூர்வீகம் விளங்குகிறது."[12] பொதுவான நிலையில் ஒரு சமூகம் தனது பூர்வீகம் குறித்து பெருமிதம் கொண்டிருக்கும். அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் வசித்து வருகின்ற முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் தமக்குள் பெருமைப்படக்கூடிய வரலாற்றுப் பாரம்பரியங்களை கொண்டிருக்கின்றார்கள் என்றால் மிகையாகாது.

வவுனியா மாவட்டத்தில் தனித்துவம் கொண்ட மக்கள் குழுவாக இவர்கள் மற்றவர்களால் மதிக்கப்படுகின்றனர். எண்ணிக்கை ரீதியாக குறைவாகக் காணப்படுகின்ற இம்மக்களுக்கு வரலாறுகளில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இம்மக்களைப் பற்றி கிடைக்கக்கூடியதாக இருந்த நம்பத்தகுந்த வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு இவர்களின் பூர்வீகத்தை அறிந்து கொள்ளலாம்.

இதனடிப்படையில் "கி.பி. 1600 காலப்பகுதியில் புத்தளத்திற்கும் முல்லைத்தீவுக்கும் இடையே உள்ள பிரதேசத்தில் மாநில சுயாட்சி உரிமையுடன் முஸ்லிம்கள் பதரிபாலனம் செய்துள்ளனர். அதிலும் 'குமார வன்னியன்' எனும் பதவிப் பெயர் தாங்கிய ஒரு முஸ்லிம் இப்பிரதேசமொன்றில் தலைவராக இருந்துள்ளார்"[13] எனவே இக்கூற்றை வைத்துப் பார்க்கும் போது குமார வன்னியன் என்பதில் வவுனியா, முல்லைத்தீவு உட்படுவதால் இக்காலப்பகுதியில் வவுனியாவில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கக் கூடுமென்ற நிலைப்பாட்டுக்கு வரலாம்.

அடுத்து "இலங்கை முழுவதுமான குடிசன மதிப்பீடு 1871 இல் முதன்முதலாக மேற்கொள்ளப்பட்டது. அக்குடிசன மதிப்பீட்டில் வன்னியில் 330 (3%) பேர் முஸ்லிம்கள் இருந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது."[14] இதேபோன்று 1881ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டில் வவுனியா மாவட்டத்தில் முஸ்லிம்கள் 1133 பேரும் விகிதாசார அடிப்படையில் 7.28% மும் இருந்துள்ளனர். எனவே இதனை வைத்துப் பார்க்கும்போது வவுனியா மாவட்டத்தில் 1881ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திலும் முஸ்லிம்கள் வாழ்ந்துள்ளனர் எனலாம்.

ஆண்டியா புளியங்குளம் ஒரு பெரிய கிராமமாகும். அப்போது 76 முஸ்லிம் குடும்பங்கள் இருந்தன என்று குறிப்பிட்டுள்ளார்"[15] அது மட்டுமன்றி சூடுவெந்தபுலவு, சாளம்பைக்குளம் ஆகிய பகுதிகளிலும் முஸ்லிம்கள் செறிவாக அக்காலப்பகுதியில் காணப் பட்டதாக சில நம்பகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு முஸ்லிம்கள் 1871இற்கு முற்பட்ட காலம்முதல் இன்று வரை தங்குதடையற்ற வரலாற்றுத் தொடர்பினைக் கொண்டுள்ளனர். அதற்கு 1881-2001ஆம் ஆண்டு வரையான குடிசனக் கணிப்பீடுகளில் முஸ்லிம்களின் விகிதாசார அளவு குறிப்பிட்டுள்ளமை ஒரு சான்றாகும்.

வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் வரலாறானது 19ம் நூற்றாண்டிலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் இப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்துள்ளமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக ''19ம் நூற்றாண்டின் பிரித்தானிய காலணித்துவ ஆட்சியாளர்களின் குறிப்பேடுகளும், நிர்வாக அறிக்கைகளும் வவுனியா மாவட்டத்தில் முஸ்லிம்களின் நீண்ட கால வரலாற்றை மேலும் உறுதிப்படுத்தும் வரலாற்று ஆதாரங்களாகும்''[16] இதற்கு Manual of the Vanni District என்ற வரலாற்று நூலை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட நூலானது 1800ஆம் ஆண்டிலிருந்து 1895ஆம் ஆண்டு வரையான பிரித்தானிய அரசாங்க குறிப்பேடுகள், நிருவாக அறிக்கைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இதில் வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் 19ம் நூற்றாண்டு கால வரலாற்றை மிகத் தொட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அத்தோடு இந்நூல் சூடுவெந்தபுலவு, ஆண்டியா புளியங்குளம் கிராமத்திலும் அதனை அண்டிய பகுதியலும் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். என்பதை அடையாளப்படுத்துகின்றது. மேலும் ''வவுனியா மாவட்டத்தில் முஸ்லிம்கள் சிறப்பாக வர்த்தகத்துறையில் ஈடுபட்டதோடு வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங் களுக்கிடையிலான மாட்டு வண்டித்தொகுதி முறையான வர்த்தக நடவடிக்கைகள் 'தவளம்' (Tawalam) அன்று வாழ்ந்த முஸ்லிம்களில் நடாத்தப்பட்டது என்பதையும் இந்நூல் எடுத்துக்காட்டுகின்றது.''[17]

இந்த வகையில் மேற்குறித்த ஆதாரங்கள் 19ம் நூற்றாண்டிலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் வவுனியா மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை தெட்டத்தெளிவாக காட்டுகின்றது. இருந்த போதிலும் முஸ்லிம்களின் வரலாறுபற்றி மட்டுமல்ல இப்பிரதேச தமிழ், சிங்கள இன மக்களின் வரலாற்று ஆதாரங்களை பொறுத்தவரையிலும் தொகுக்கப்பட்ட ஆய்வுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் இம்மாவட்டத்தின் வரலாற்றை அறிந்து கொள்ள முடியாது.

## வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் குடியிருப்புக்கள்

இலங்கையின் குடிசன மதிப்பீட்டின் வரலாற்றில் வவுனியா மாவட்டத்தில் 1881-2002 ஆம் ஆண்டு வரையில் முஸ்லிம்கள் மூன்றாவது சிறுபான்மை இனமாக வாழ்ந்து வருகின்றனர். இதில் 2002ஆம் ஆண்டு வவுனியா மாவட்ட பிரதேச செயலகப்பிரிவால் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டில் முஸ்லிம்கள் 9389 நபர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் நான்கு பிரதேச செயலகப்பிரிவில் வெங்களச்செட்டிக்குளம், வவுனியா ஆகிய இரண்டு பிரதேச செயலகப்பிரிவில் மட்டுமே பரவலாக வாழ்கின்றனர். அப்பிரதேசங் களில் முஸ்லிம்கள் செறிவாக வாழும் பகுதி ‘முஸ்லிம் குடியிருப்புக் கள்‘ என்று அழைக்கப்படுகிறது. இதில் ஒன்பது கிராம சேவகர் பிரிவில் பத்துப் பிரதான கிராமங்களுடன் சில குக்கிராமங்களையும் சேர்த்து மொத்தமாக 16 முஸ்லிம் கிராமங்கள் காணப்படுகின்றன. அவற்றை வரைபடம் -02 தெளிவாக காட்டுகின்றது.

01. ஆண்டியா புளியங்குளம்.
02. புதுக்குளம்.
03. வாழவைக்குளம்.
04. முதலியார் குளம்.
05. சின்னச் சிப்பிக்குளம்.
06. ஆணை விழுந்தான்.
07. மாங்குளம்.
08. சூடு வெந்தபுலவு.
09. பாவற்குளம்.
10. சாளம்பைக்குளம்.
11. பட்டாணிச்சூர்.
12. வேப்பங்குளம்.
13. பட்ட காடு.
14. புளிதரித்த புளியங்குளம்.
15. அறபா நகர்.
16. மதீனா நகர்.

மேற்கூறபட்ட 16 கிராமங்களில் முஸ்லிம் குடியிருப்புக்களாக காணப்படும் பிரதான குடியிருப்புக்களின் வரலாறுகளையும் அக்குடியிருப்புக்களின் அமைவிடங்களையும் நோக்குவோமானால்

1. ஆண்டியா புளியங்குளம்:

''இக்கிராமமானது சுமார் மூன்று நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த கிராமமாகும். அதாவது 1881ம் ஆண்டில் 76 குடும்பங்கள் இங்கு இருந்ததாக கூறப்படுகின்றது. இது சுமார் 4 ச.கி.மி. பரப்பளவு கொண்ட கிராமமாக வெங்களச் செட்டிக்குள பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ளது. இங்குள்ளவர்கள் மன்னார், கண்டி, கடுகஸ்தோட்ட பகுதிகளில் இருந்து வியாபார நோக்கமாக வந்து குடியேறியதாக கூறுகின்றனர். இங்கு இரண்டு சிறிய கிராமங்களான புதுக்குளம், வாழவைத்தகுளம் ஆகிய இரு கிர்ாமங்களையும் சேர்த்து 200 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். அத்தோடு இங்கு முஸ்லிம்களே பெரும்பான்மையாகவும் வாழ்கின்றர் எனலாம்.

2. சூடுவெந்தபுலவு :

''வவுனியா மாவட்டத்தில் மிகவும் பழமை வாய்ந்த முஸ்லிம் கிராமங்களில் இதுவும் ஒன்றாகும். அதில் 1839ஆம் ஆண்டு இங்கு வாழ்ந்த மக்களின் சனத்தொகை 183 பேருக்கும் அதிகமானவர்கள் என்று கூறப்படுகிறது.''(18) இக்கிராமமானது செட்டிக்குளப் பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ளது. மேலும் இங்கு ஆரம்பகாலத்தில் பயிர்ச்செய்கைக்காக காடுகளை வெட்டி எரித்ததினால் அது சாம்பல் மேடாக காணப்பட அதனை அவதானித்த வெளிநாட்டவர்கள் 'சூடுவெந்தபுலவு' என்று பெயர் வைத்ததாக அவ்வூர்மக்கள் குறிப்பிட்டுள்ளனர். இக்கிராமமானது புதுக்குடிமனை, பழைய குடிமனை என்று இரண்டாகப் பிரிந்து காணப்படுகிறது. இங்கு முஸ்லிம்கள் 500 குடும்பங்கள் வரையில் உள்ளனர். இதில் 2500யிற்கு மேற்பட்டவர்கள் காணப்படுகின்றனர். அத்தோடு இது தனியே முஸ்லிம்கள் செறிவாக வாழும் பிரதேசமாகும்.

3. சின்னச் சிப்பிக்குளம் :

இக்கிராமம் வெங்கலச் செட்டிக்குளப் பிரதேச செலயகப் பிரிவில் அமைந்த மிகப் பழைமை வாய்ந்த மற்றுமொரு முஸ்லிம் கிராமமாகும். சின்னச் சிப்பிக்குளம் என்று பெயர் வரப் பின்வரும் காரணம் கூறப்படுகிறது. அதாவது இங்குள்ள குளத்தில் சிறிய சிறிய சிப்பிகள் காணப்பட்டதால் அதனை மையமாக வைத்து இப்பெயர் வந்தது என்கின்றனர். இங்கு முதன் முதலில் குடியேறிய வர்கள் அனுராதபுர மாவட்டத்திலுள்ள பேய் கூப்பிட்டான் பகுதியைச் சேர்ந்த சின்ன பக்கீர் என்பவருடைய குடும்பமாகும் என்று கூறுப்படுகிறது. அத்தோடு 1918இல் இந்தியாவிலிருந்து வந்த சாஹுல் ஹமீது இக்கிராமத்திற்கு வரும்போது 40 குடும்பங்கள் இங்கு வாழ்ந்ததாகவும் இவ்வூர் மூதாதையோர் குறிப்பிடுகின்றனர். இங்கு ஆனை விழுந்தான் என்ற குக்கிராமம் ஒன்று உள்ளது. எனவே இவ்விரு கிராமங்களிலும் 200க்கு மேற்பட்ட முஸ்லிம் குடுபங்கள் பெரும்பான்மையினராக தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

4. பாவற்குளம் :

இக்கிராமம் வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலகத் திற்குட்பட்ட பகுதியாகும். பாவற்குளம் என்ற பெயரில் ஐ-ஐஓ வரையான யுனிட்கள் காணப்படுகின்றன. இதில் யுனிட்-ஐஐ என்ற பகுதியில் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். 1956ஆம் ஆண்டு சூடுவெந்தபுலவு, சாளம்பைக்குளம், பட்டாணிச்சூர் ஆகிய கிராமத்திலிருந்து பாவற்குளத்திற்கு மக்கள் அரசாங்கத்தினால் குடியேற்றப்பட்டனர். பவற்குளம் என்ற பெயர் இங்குள்ள பெரிய குளத்தில் பாவற்கொடி கூடுதலாக படர்ந்து காணப்படுவதால் அதிலிருந்து திரிபடைந்து வந்திருக்கின்றது என்று இவ்வூர் மக்கள் கூறுகின்றனர். அத்தோடு இக்கிராமத்தில் தற்போது 400 முஸ்லிம் குடும்பங்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர்.


5. முதலியார் குளம் :

இக்கிராமம் வெங்கலச் செட்டிக்குளப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ளது. இங்குள்ளவர்கள் குடியேற்றத் திட்டத்தில் 1993 காலப்பகுதியில் குடிடயமர்த்தப்பட்டனர். ஆனால் இங்கு தமிழர்களே பெரும்பான்மையினராக காணப்படுகின்றனர். இங்குள்ள


முஸ்லிம்கள் ஆண்டியா புளியங்குளம், மாங்குளப் பகுதியிலிருந்து 1994 காலப்பகுதியில் குடியேறியவர்களாகும். தற்போது 50 குடும்பங்களும் இதில் 150 பேர் வரையில் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர்.

6. மாங்குளம் :

இக்கிராமம் வெங்கலச் செட்டிக்குளப் பிரதேச செயலகப் பிரிவில் சின்னச் சிப்பிக்குள கிராம சேவகர் பிரிவுக்குட்டதாகும். மாங்குளம் என்ற பெயர் இங்குள்ள குளத்தைச் சூழ ஆரம்ப காலத்தில் காடுகள் காணப்பட்டதால் அங்கு மான்கள் கூட்டம் அக்குளத்திற்கு நீரருந்துவதற்காக வருகின்ற நிலையிருந்ததால் இப்பெயர் திரிபடைந்து மாங்குளம் என்று வந்ததாக கூறப்படுகிறது. இதை விட இப்பகுதியில் மாமரங்கள் கூடுதலாக காணப்பட்டதாலும் இப்பெயர் வந்திருக்கலாம் என்றும் கருத்து கூறப்படுகிறது. இக்கிராமத்திற்கு 1910ம் ஆண்டு முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து முஸ்லிம்கள் வந்து குடியேறியதாக கருதப்படுகிறது. தற்போது இங்கு 244 முஸ்லிம் குடும்பங்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.



மாங்குளம் ஜும்ஆபள்ளி.



அல்ஹம்றா மு.ம.வி. மாங்குளம்.

7. சாளம்பைக்குளம்

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மிகப்பழமை வாய்ந்த கிராமமாகும். இது சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்ட ஒரு கிராமமாகும். இதற்கு இங்குள்ளவர்களின் வயற்காணிகள், குளங்கள் என்பன சான்றாகும். இக்கிராமத்திலுள்ளவர்கள் எங்கிருந்து


வந்தார்கள் என்பதற்கு சான்றுகள் இல்லை. இக்கிராமம் தற்போது 350 குடும்பங்களையும் 3000 உறுப்பினர்களையும் கொண்ட முஸ்லிம் கிராமமாக காணப்படுகிறது.

8. புளிதரித்த புளியங்குளம்:-

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் செக்கடிப்புலவு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்டதாக இக்கிராமம் காணப்படுகிறது. 1956ம் ஆண்டு முஸ்லிம்களுக்கென்று இப்பகுதியில் 100 வீட்டுத்திட்டம் ஒன்று அமைத்து அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. இதற்கு அறபா நகர் என்று பெயரும் சூட்டப்பட்டது. எனவே இப்பகுதியில் சுமார் 190 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

9. பட்டாணிச்சூர் புளியங்குளம்:-

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தனிக் கிராமசேவகர் பிரிவைக் கொண்ட முஸ்லிம் கிராமமாகும். இங்கு ஆரம்பத்தில் மன்னார், பெரியமடு பகுதிகளிலிருந்து வந்த 18 குடும்பங்கள் காணப்பட்டதாக கூறப்படுகிறது. இவ்வூரின் பெயர்வர பின்வரும் காரணம் கூறப்படுகின்றது. பொட்டனி வியாபாரி பெண் ஒருவர் இங்கு மரணமடைந்ததால் இங்கேயே நல்லடக்கம் செய்ததாலும் அப்பகுதியில் புளியமரங்கள் கூடுதலாக காணப்பட்டதாலும், 'பொட்டனி ஊர்' என்று இருந்து திரிபடைந்து பட்டாணிச்சூர் புளியங்குளம் என்று பெயர்வந்ததாக கூறப்படுகிறது. இக்கிராமத்தை அன்மித்த



ஜும்ஆப்பள்ளி
பட்டாணிச்சூர்.

வவுனியா முஸ்லிம் ம.வி.
தேசியபாடசாலை
பட்டாணிச்சூர்—புளியங்குளம்.



008537

வேப்பங்குளம், பட்டகாடு என்று இரு முஸ்லிம் கிராமங்களும் காணப்படுகின்றன. இங்கு தற்போது மூன்று கிராமங்களையும் சேர்த்து 450 குடும்பங்களும் 3000 மேற்பட்ட முஸ்லிம்களும் இப்பகுதியில் பெரும்பாண்மையினராக வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர்.

10. மதீனா நகர்

இக்கிராமம் வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் மகாரம்பைக் குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்டது. இது ஆரம்பத்தில் பூந்தோட்டம் என்று அழைக்கப்பட்டது. தற்போது ''மதீனா நகர்'' தனியொரு கிராமமாக உள்ளது. இங்குள்ளவர்கள் 1970 காலப்பகுதியில் மத்திய மலை நாட்டுப் பகுதியில் இருந்து வந்து குடியேறினார்கள் என்று கூறப்படுகிறது. தற்போது 80க்கு மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் மதீனா நகர் என்ற பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் மகாரம்பை குளம் என்ற கிராம சேவகர் பிரிவில் தமிழர்களே அதிகமாக வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் சமூக, பொருளாதார, அரசியல், அம்சங்கள், சமூக நடவடிக்கைகள்

வவுனியா மாவட்டத்தில் இலங்கையில் வாழும் பிரதான மூவின சமூகமும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் முஸ்லிம்களின் சமூக அடிப்படைகளை நோக்கும் போது. தனித்துவமான பல பாரம்பரியங்களை அடையாளம் காணக் கூடியதாக இருக்கின்றது. மத ரீதியாக இஸ்லாமியர்களான இவர்கள் தங்களுக்கென மதவழிபாட்டுக்கு தனித்துவமான மதஸ்தலங்களை அமைத்து சமயக் கிரியை மேற்கொள்கின்றமை, அத்தோடு கிதாப்மத்ரஸா, குர்ஆன் மத்ரஸாக்களை அமைத்து இஸ்லாமிய அறிவுகளை வளர்த்து வருகின்றமை என்பன தனித்துவமான சமூக அடிப்படைகளாகும்.

இது போல முஸ்லிம்களின் மத்தியில் நடைமுறையில் இருக்கும் திருமணம், பிறப்பு, இறப்பு சடங்குகளில் பின்பற்றப்பட்ட கலாசார நிகழ்வுகள் ஏனைய சமூகத்தின் நடவடிக்கைகளிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டன. அதுமட்டுமின்றி விருந்தோம்பல்

முறையிலும் முஸ்லிம்களுக்குரிய தனித்துவத்தைக் கொண்டிருந்தனர். கல்வி நடவடிக்கைகளிலும் பல முஸ்லிம் பாடசாலைகள் தனியாக நிறுவப்பட்டு முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவ்வாறான தனித்துவமான சில செயற்பாடுகளால் வவுனியா மாவட்ட முஸ்லிம்கள் ஏனைய சமூகத்தவர்களால் கௌரவப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்களின் ஏனைய சமூகங்களுடனான உறவுகளை நோக்கும் போது இன்றுவரையில் எவ்வித இன விரிசல்களும் இன்றி வாழ்ந்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக தமிழர்களின் விசேட தினங்கள், திருமணங்களுக்கு முஸ்லிம்கள் செல்வதும் தமிழர்கள் முஸ்லிம்களின் பெருநாள், திருமணங்களுக்கு வருவதும் குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் குடியிருப்புக்களில் தமிழர்கள் குடியிருப்பதும், அதே போன்று தமிழர் குடியிருப்புக்களில் முஸ்லிம்கள் குடியிருப்புக்கள் அமைந்திருப்பதும் அதில் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். மேலும் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் சில கலப்புத் திருமணங்கள் இன்று வரையில் இடம்பெற்று வருவதும், இது தவிர இரு சமூகங்களுக்கிடையிலான சில பொது நிகழ்வுகளுக்கு இரு மதத்தலைவர்களும் சென்று சிறப்புரையாற்றுவதும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. இவ்வாறு சிங்கள சமூகத்துடனும் முஸ்லிம் சமூகம் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர் என்றால் மிகையாகாது.

### பொருளாதார நடவடிக்கைகள்

வவுனியா மாவட்டத்தில் பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் தாம் வாழும் பகுதிகளில் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை விட இங்கு கூடுதலான குளங்கள் இருப்பதால் நன்னீர் மீன்பிடித்துறையிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதில் குறிப்பாக பாவற்குளம் என்பது வவுனியா மாவட்டத்தில் பெரிய குளம் என்பதால் இங்கு எக்காலத்திலும் மீன்பிடிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதால் இங்குள்ள முஸ்லிம்களும் இதனை அண்மித்த சூடுவெந்தபுலவு முஸ்லிம்களும் இக்குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயம் எனும் போது நெற்செய்கையிலே கூடுதலானோர் ஈடுபடுகின்றனர். அதுவும் ஒரு போக நெற்செய்கையே மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு இக்காலப்பகுதியில் மேட்டு நிலங்களில் உழுந்து, கௌபி, சோளம், பயறு, போன்ற தானிய வகைகளை பயிரிடுகின்றனர். இவை தவிர சில கிராமப் பகுதிகளில் கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் சிலர் செங்கல் அறுத்தல், வீட்டுத்தோட்டம் போன்ற தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா நகரத்தை அண்டி வாழும் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் வர்த்தகத் துறையில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வவுனியா நகரத்தில் 50சத வீதத்திற்கு மேற்பட்டடோர்களின் விற்பனை வியாபாரம் முஸ்லிம்களின் கைவசமுள்ளது. இதில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கூடுதலாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை விட இம்மாவட்டத்தின் முஸ்லிம்களில் சிலர் அரச உத்தியோகத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். அதே போன்று அரச சார்பற்ற நிறுவனங்களிலும் குறிப்பிட்ட சிலர் தொழில் புரிந்து வருகின்றனர். இவ்வாறு வவுனியா மாவட்டத்தில் முஸ்லிம்களின் பொருளாதாரம் எல்லாத்துறைகளிலும் மேலோங்கி காணப்படுகின்றது.

## அரசியல் நடவடிக்கைகள்

வவுனியா மாவட்டத்தில் முஸ்லிம்கள் அரசியல் ஈடுபாட்டிலும் நடவடிக்கையிலும் பல தனித்துவ அம்சங்களைக் காணலாம். அதில் முக்கியமானது முஸ்லிம்கள் தாம் வாழ்ந்து வந்த பிரதேசத்தின் அரசியல் பாரம்பரியத்துடன் தமது அரசியல் அபிலாசைகளை இணைத்துக் கொண்டிருந்தமையாகும். சுதந்திர காலகட்டத்தில் இப்பகுதியில் பிரபல்யம் பெற்றிருந்த சீ. சுந்தரலிங்கத்தின் தமிழரசுக் கட்சியை வவுனியா மாவட்ட முஸ்லிம்கள் ஆதரித்தனர். 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக போட்டியிட்ட சிவசிதம்பரம் அவர்களை ஆதரித்தனர். இதற்கு பிற்பட்ட காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக போட்டியிட்ட புலேந்திரன் அவர்களை ஆதரித்து வந்தனர்.

இதே போன்று வவுனியா மாவட்டத்தின் உள்ளூர் அரசியலிலும் செல்வாக்குச் செலுத்தி வந்தனர். அதில் பட்டினக் கிராமசபை மட்டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் முஸ்லிம் அங்கத்தவர்கள் போட்டியிடும் வழமை காணப்பட்டது. ''1952 பட்டாணிச்சூர் கிராம சபை உறுப்பினராக ஏ. உதுமான் தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் இக்கிராம சபை உறுப்பினர்களாக 1962இல் முகைதீன் மீறாசாஹீப் என்பவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதே காலப்பகுதியில் சூடுவெந்த புலவு கிராம சபைக்கு நாகூர்கனி, எம்.சஹாப்தீன் போன்றவர்கள் தெரிவு செய்யப்பட்டனர், குருக்கல் புதுக்குளம் கிராம சபைக்கு சேர்மன் (தவிசாளர்) ஆக கபீர் முஹம்மது அவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் ஏ.சுலைமான், ஐ.எம். தாவூத்கணி உறுப்பினர்களாக அங்கம் வகித்தனர்''[19]

இதற்கு பிற்பட்ட காலத்தில் வவுனியா நகர சபை உறுப்பினர்களாக சுலைமான் அசனார், மீறாமொகிதீன் போன்றவர்கள் அங்கம் வகித்தனர். 1981ம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தலில் தமிழர் கூட்டணி சார்பாக ப.ஜமால்தீன் என்பவர் தெரிவானார். அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சி சார்பாக எம். சஹாப்தீன் அவர்கள் தெரிவானார். 1994இல் இடம் பெற்ற வவுனியா நகர சபைத் தேர்தலில் முஸ்லிம்கள் பல கட்சி சார்பாக போட்டியிட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக போட்டியிட்ட எம்.எஸ். ஆரிப் என்பவர் மட்டுமே நகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவ்வாறு உள்ளூர் அரசியலில் முஸ்லிம்கள் செல்வாக்கு செலுத்தி வந்தனர்.

1978ம் ஆண்டு விகிதாசார பிரதி நிதித்துவ தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது. வன்னித் தேர்தல் மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களுக்கு ஒரு வரப்பிரசாதம் எனலாம். ஏனெனில் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் இடம் பெற்ற ''1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் இருந்து முதன் முறையாக பாராளுமன்றத்திற்கு முஸ்லிம்கள் சார்பாக எஸ்.எஸ்.எம். அபூபக்கர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.''[20] இவர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பாக போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் வவுனியா தொகுதியில் 1600 வாக்குகளை இக்கட்சி பெற்றது.

''1994இல் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் முஸ்லிம்கள் பலர் போட்டியிட்டனர். இதில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக பி.எஸ். அப்துல்லாஹ் அவர்கள் போட்டியிட்டு 1125 வாக்குகளை பெற்ற போதிலும் தெரிவாகவில்லை''[21] ஆனால் ''முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக வன்னி மாவட்டத்தில் மீண்டும் எஸ்.எஸ்.எம். அபூபக்கர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.''[22] இக்கட்சி 8142 வாக்குகளைப் பெற்றிருந்தது. இதில் வவுனியா சார்பாக 1412 வாக்குகளைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

2000ம் ஆண்டு பொதுத் தேர்தலைப் பொறுத்தவரையிலும் ''வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் சார்பாக பலர் பல கட்சி சார்பாக போட்டியிட்டனர். எஸ்.ஏ. நசார், எம்.எஸ்.ஆரிப், கே.எம். ஆப்தீன், போன்றோர்களைக் குறிப்பிடலாம்.''[23] இருந்தும் இத்தேர்தலில் ''நுஆ கட்சி சார்பாக வன்னி தேர்தல் மாவட்டத் திலிருந்து நூர்தீன் மசூர் அவர்கள் 12283 விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.''[24] வவுனியா தொகுதி சார்பாக 2294 வாக்குளை இக்கட்சி பெற்றிருந்தது.

2001ம் ஆண்டு தேர்தலில் வன்னி மாவட்டத்தில் பல முஸ்லிம் அங்கத்தவர்கள் பல கட்சி சார்பாக போட்டியிட்டனர். இதில் வவுனியா தொகுதி முஸ்லிம்கள் சார்பாகவும் பலர் போட்டியிட்டனர். ஆனால் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த முஸ்லிம்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை இருந்த போதிலும் ''வன்னி மாவட்டத்தில் இத்தேர்தலில் ஶ்ரீடுஆஊஇ ருநீ கட்சியுடன் இணைந்து போட்டியிட்டது. இதில் இக்கட்சி சார்பாக இருவர் தெரிவு செய்யப்பட்டனர். அவ்விருவரும் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நூர்தீன் மசூர், இவர் 12000 விருப்பு வாக்குகளையும், றிசாட் பதியுதீன் 9000 விருப்பு வாக்குகளையும் பெற்று தெரிவானார்கள்''[25] இது இம்மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் இருவர் ஒரே தடவையில் தெரிவு செய்யப்பட்டது. ஒரு சாதனையாகும். அத்தோடு இம்மாவட்டத்தில் முஸ்லிம்கள் அரசியலில் விழிப்புணர்ச்சி

அடைந்துள்ளனர் என்று கூறலாம்.

2004ம் ஆண்டு பொதுத் தேர்தலை பொருத்தவரையில் முஸ்லிம்கள் பல கட்சிகளில் போட்டியிட்டாலும் இத்தேர்தலில் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரஸையே ஆதரித்தனர். ஏனெனில் இத்தேர்தலில் ''ஞடுஆஊ ருநே யுடன் கூட்டுச் சேர்ந்தே போட்டியிட்டு இக்கட்சி 33621 வாக்குகளைப் பெற்றது. வவுனியா மாவட்ட முஸ்லிம்களில் 90 வீதமான மக்கள் இக்கட்சியையே ஆதரித்தனர். இதனால் இக்கட்சி, சார்பாக போட்டியிட்ட றிசாட் பதியுத்தீன் - 15981 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்." எனவே வவுனியா மாவட்டத்திலுள்ள முஸ்லிம்கள் காலத்துக்கு காலம் தேசிய அரசியலிலும், உள்ளூர் அரசியலிலும் தங்களுக்கென்று ஒரு பிரதிநிதியை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் செயட்பட்டு வந்துள்ளனர் என்பதை மேற் கூறப்பட்ட விடயங்கள் மூலம் கண்டு கொள்ளலாம்.

அடிக்குறிப்புக்கள் (Foot Note)

01. *Statistical Hand Book*, (2003), District planning secretariat, District Secretariat, Vavuniya. P – 01

02. Luwis. J.P, (1985), "*Menual of the Vanni District*, Northen province Ceylon Govt, Sri Lanka. P – 51

03. நடராசா, கே.எஸ், (1996) ''*ஒய்ந்து பார்க்கையிலே ஆய்வுக் கட்டுரையின் தொகுப்பு*' கொழும்பு தமிழ் சங்கம், கொழும்பு பக் - 46

04. *மருத நில வட கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர்*, (1996), அகளங்கள் கட்டுரை ''வன்னிப் பிரதேச வயற்பண்பாடு", வடகிழக்கு மாகாண கல்வி, கலாச்சார, விளையாட்டுத் துறை அமைச்சு - பக் - 72

05. மேலது - 29

06. Statistical Hand Book, Ebit - 17

07. Ebit – 23

08. Ebit – 23

09. Ebit – 23

10. Ebit – 23

11. Ebit – 17

12. விக்டர், (2001), "*முஸ்லிம் தேசமும் எதிர் காலமும்*", (இலங்கை முஸ்லிம்கள் குறித்த ஓர் அரசியல், கலாசார, புவியியல் ஆய்வு), அடையாளம், சென்னை 04. பக் - 13

13. அமீன், எம்.ஐ.எம். (2000) "*இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்*", அல் ஹஸனாத் பதிப்பகம், ஹெம்மாதகம. பக் - 23

14. மேலது - 37

15. Lluwis. J.P. NkyJ - 5

16. பதிக்கப்படாத ஆய்வு, (2003), "*வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் சமூக, கலாசார, பண்பாடுகள்*" பேராதனை பல்கலைக்கழகம், பேராதனை பக் - 10

17. மேலது - 09

18. மேலது - 32

19. மாவட்ட செயலகம். வவுனியா

20. புன்னியாமீன், (2002), "*2000ம் ஆண்டு பொதுத் தேர்தலும் சிறுபான்மை சமூகத்தவரும*" (ஓர் ஆய்வு), சிந்தனை வட்டம் உடத்தலவின்னை, இலங்கை. பக் - 63

21. காதர் எம்.எல்.ஏ. (1999), "*இலங்கையின் பத்தாவது பொதுத் தேர்தலும் முஸ்லிம்களும*" இலங்கை அரசியல் ஆய்வுக் கழகம், பேராதனை பக் - 126

22. மேலது - 30

23. புன்னியாமின் மேலது - 65

24. மேலது - 67

25. மாவட்ட செயலகம், வவுனியா

# சூடுவெந்த புலவு கிராமத்தின் வரலாறு

## கிராமத்தின் அமைவிடம்

வவுனியா நகருக்கு தெற்கே வவுனியா, செட்டிக்குளம் பிரதான விதியில் நகரிலிருந்து 10 Km தொலைவில் அமைந்திருப்பதுதான் இக்கிராமம்.

## கிராமத்தில் மக்கள் குடியேறிய காலம்

பழமை வாய்ந்த இக்கிராமம் 1767ற்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது. வேட்டைத் தொழில், விவசாயம், வியாபாரம், போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் ஆதியிலே குடியமர்ந்ததாக சரித்திரம் காண்பவர்களால் சங்கமம் செய்யப்படுகின்றது.


## இக்கிராமத்தில் குடியமைந்தமைக்கான காரணங்கள்

தென் இந்தியாவில் இருந்து வந்த (ஜாவா) முஸ்லிம்கள் மரக்கலம் ஊடாக இலங்கையின் சிலாப இறங்குதுறையை மையப்படுத்தி நாட்டின் பல பகுதிகளையும் சென்றடைந்ததாகவும் அதில் ஒரு பகுதியினர் ஆண்டியாபுளியங்குளம் வந்தடைந்ததாகவும் பின்னர்

வவுனியா நகரை நோக்கிய நகர்விற்கு இவ்விடம் பொருத்தமாக இருந்ததாகவும் தங்களுடைய வேட்டைத் தொழிலுக்கும் வாழ்வின் ஆதாரத்திற்கும் நீர் காணப்பட்டதனாலும் அந்நியரைக்கவரும் யானைத்தந்தம், புலித்தோல் போன்ற பொருட்களை தேடும் வேட்டைக்கும் இவ்விடம் பொருத்தமாக இருந்ததாலும் இவ்விடத்தை தெரிவு செய்ய உதவியாக இருந்ததாம். பின்னர் 1915 அளவிலே வெள்ளையரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு காப்பிலியன் படை மூலம் ஊரை பாதுகாக்கும் முறை ஏற்படவே அவர்களுக்கு பயந்து எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து தமது வாழ்வாதாரத்தை அமைத்ததாகவும் வரலாறு கூறுகிறது.

## இக்கிராமத்திற்கு பெயரிட்ட வரலாறும் காரணிகளும்

வன்னி விளாங்குளமாம் வவுனியாவின் எழில் கொஞ்சும் எம்மூரைப் பற்றியும் வெள்ளையர்கள் விலாசம் இட்டுத்தான் இருக்கிறார்கள். அவர்களால் இடப்பட்ட பெயர்தான் "சூடுவெந்தபுலவு".



சூடுவெந்தபுலம் பழைய குடிமனை ஜும்ஆபள்ளி.

ஆரம்பத்திலே வேட்டைத் தொழிலை வழக்கமாக்கிக் கொண்டவர்கள் பிற்பகுதியிலே விவசாயத்தையும் தமது அடிப்படையாக்கிக் கொண்டார்கள். அக்காலத்திலே இன்றைய யுகத்தை போன்றல்லாது வேறுபட்ட வரலாற்றையும் தொட்டுணர்த்துகிறது. தானிய வகைகளில் முதன்மை பெறும் நெல் மணியைப புலவுகளில் விதைத்து அதனை வட்ட வடிவிலே கோபுரம் போன்று உயர்த்தி கதிரை அடுக்கி வைப்பார்கள். அதனை அன்றும் இன்றும் சூடு வைத்தல் என்றுதான் கூறுவார்கள்.

பின்னர் குறிப்பிட்ட நாட்கள் கழிந்த பின் அவற்றினை அகற்றி மாட்டுதவியுடன் கதிர்களிலிருந்து மணியை வேறாக்குவது வழக்கமாம். ஆவ்வாறு கொஞ்சமாக (புடிபுடியாக) கதிரை எடுக்கும் போது அதிலிருந்து ஆவி வெளியேறும். அந்த சூட்டின் மேலே நிறபதும் கஷ்டம். இதனாலேதான் சூடு வெந்துள்ளது என்று கருத்து அக்காலத்தே மேலோங்கியது என்றும் அதுவே, இன்று சூடுவெந்தபுலவு என்ற பெயரை கொண்டு அழைக்கப்படுவதையும் அது நாடு பூராவும் பரிநாமம் பெற்றிருப்பதையும் எடுத்துக் கூறலாம்.

## *கிராமம் அமைவதற்கு மன்னர் மக்கள் வாழ்ந்த பிரதேசம்*

ஆரம்ப காலத்திலே அதாவது 1700ம் ஆண்டுகளிலே இந்தியாவி லிருந்து இரண்டு, மூன்று மரக்கலங்களிலே குடும்பங்கள் சகிதம் மன்னாரின் கிழக்குத் திசையான சிலாபம் இறங்குதுறையை மையப் படுத்தி வந்து இறங்கி பின்னர் மன்னார், அனுராதபுரம் வழியாக ஆண்டிய புளியங்குளம் வந்து ஓரிரு குடும்பமும், இன்னும் சிலர் பொலனறுவை நோக்கியும் அதிலே ஓரிரு குடும்பமே வவுனியா நோக்கி நகர்ந்ததாகவும் அதிலே தரித்து பின்னர் தமது வாழ்வாதாரத்தை அமைப்பதற்கு இக்கிராமம் ஏதுவாக அமைந்திருந் ததனால் அவர்கள் தொட்டே இக்கிராமத்தின் தோற்றம் இடம் பெற்றதாகவும் மேலும் மன்னாரின் தெற்கே அமைந்த பெரிய மடுவிலிருந்து சிலர் காக்கயன் குளம் ஊடாக இக்கிராமத்திற்கும் வருகை தந்து பின்னர் குடும்பங்கள் சிதறி திருமண பந்தத்தின் மூலம் உருவானதாகவும் வரலாறு காண்கிறது.

## கிராமத்தின் எல்லைகள்

சூடுவெந்தபுலவு கிராமமானது வடக்கே புளிதறித்த புளியங் குளத்தையும், கிழக்கே இராசேந்திரன்குளத்தையும் தெற்கே ஆறுகள் புல் வெளியையும், மேற்கே பாவற்குளத்தையும் மையமாகக் கொண்டு நடுவிலே அமைந்திருப்பதுதான் சூடுவெந்த புலவு.

## தொழிலும் பண்பாடும்

ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரையும் மனிதர்களின் உயிர் நாடியான நெல்விதைப்பு முதன்மை பெறுகிறது. ஆகவே விவசாயம், மீன்பிடி, தச்சுத் தொழில், சிறுகைத் தொழில், வியாபாரம் என பெயர் கண்டு இன்று குறிப்பிட்ட சிலர் அரச தொழிலும், அரச சார்பற்ற தொழிலும் புரிவதில் ஈடுபடுவதையும் எம்மூர் எடுத்துச் சொல்கிறது. ஆதியிலே மக்கள் பரத்தை போட்டு தமது வேலைகளைச் செய்வது வழக்கம். இன்று இவருடைய வேலையைச் செய்வோம். நாளை எமது வேலையைச் செய்வோம் என பண்பு உள்ளம் கொண்டு பண்பாட்டைச் சொல்லித் தந்தவர்கள் எம்முதாதையர்.

இன்று பண்பாடுகளோ பலனில்லையெனக் கூறி நிற்கிறது.

## கலாச்சாரமும் பாரம்பரிய விழுமியங்களும்

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் இப்படித்தான் வாழவேண்டு மென்றும் எமது ஒழுக்கம், பண்பாடு விழுமியங்கள் இஸ்லாத்தின் வரையறைக்குட்பட்டே இருக்க வேண்டும் என்பதும் உண்மை. மாறாக ஆரம்ப காலங்களிலே முஸ்லிம்கள் வெறும் பெயரைக் கொண்டே தமது வாழ்க்கையை நடாத்தினார்கள். 1650களிலே முஹம்மது காஸிம் தலைமையில் இந்தியா கைப்பற்றப்பட்ட போது இஸ்லாம் வேகமாக பரவிய காலமது. பின்னர் இந்தியாவிலிருந்து பல்வேறு இடங்களையும் சென்றடையலாயினர். இதற்கு முன்னர் மக்கள் இஸ்லாத்திற்கு மாற்றமான மதத்தையுடையவர்கள் பின்பற்றுகின்ற மதஸ்டானங்கள், கூட்டங்கள், திருமண சம்பிரதாய சடங்குகள் போன்றவற்றிற்கு இஸ்லாமியர்களின் நகர்வு சென்று கலாச்சாரம், பாரம்பரிய விழுமியங்கள் அற்றுப் போகும் நிலையில் இருக்கும்

போது மௌலூது என்கிற சம்பிரதாயம் தோற்றம் பெற்றது. இதனால் எமது சகோதரர்கள் அந்நிய கலாச்சாரத்தில் நின்றும் விலகிச் செல்ல வழியேற்பட்டது. இந்தத் தோரணையிலே திருமண கலாச்சார பாரம்பரியங்களும் இதனுல் புகுந்து இஸ்லாத்திற்கு மாற்றமான விழுமியங்களை ஏற்படுத்தின. ஆனால் இன்று பாரம்பரியங்கள் நலிவடைந்து சென்று இஸ்லாமிய உயிரோட்டம் பெற்று நிற்கின்றது.

## சனத்தொகை

முல்லை நிலமாகத் திகழும் இக்கிராமத்தில் 1750களின் ஆரம்பத்திலே ஒரு காணிக்குள் 15க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்துள்ளதாகவும் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருந்ததாகவும் பேசப்படுகின்றன.

இக்காலத்தே 2005ம் ஆண்டிலே மூன்று கிராமங்களைப் போல் மூன்று பகுதியாக சூ/பழையகுடிமனை, சு/புதுக்குடிமனை, சூ/றஹ்மத்நகர் மொத்தமாக 600 குடும்பங்களுக்கும் மேலாக இக்கிராமத்திலே செறிந்து வாழ்ந்துவருகிறார்கள். வவுனியா மாவட்டத்திலே முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரே ஒரு கிராமம் இந்த சூடு வெந்தபுலவுதான்.

சூடுவெந்தபுலம் புதிய குடிமனை ஜும்ஆபள்ளி.

## பாடசாலை வரலாறு

சூடு வெந்தபுலவுக் கிராமத்தின் தோற்றத்தின் பிற்பகுதியிலே, 1929ம் ஆண்டேட அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என பெயர் சூட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. தலைமை ஆசிரியராக திரு. சீவரத்தினம் (Sir) இருக்க ஒரு கட்டடத்தில் 75 மாணவந் தொகையில் இரண்டு ஆசிரியர்களுடன் இயங்கிவந்தது. அப்போது 1 - 8 வரையான வகுப்புக்களே இருந்தன. இந்தப்பாசாலைக்கு மூன்று அயல் கிராமபிள்ளைகளும் வந்து போவர்.

இராசேந்திரன் குளம்
புளிதறித்த புளியங்குளம்
சின்னக்குளம்

ஆகவே அப்போது 1 ஏக்கர் காணியுடன் தமது கல்விப்பயணத்தை ஆரம்பித்த அ.த.க. பாடசாலை இன்று வ/அல் இக்பால் மு.வித்தியால யம் எனவும், அதிபராக எஸ்.எச்.எம். காசீம் (JP) (Sir) இருக்க 04 கட்டடங்களுடனும், 440 பிள்ளைகளையும், 24 மொத்த ஆசிரியர்களை யும் உள்ளடக்கி தமது இலக்கை நோக்கி நகர்ந்து செல்கிறது.

மொத்தமாக 5 ½ ஏக்கர் நிலப்பரப்புடன், 1 - 11 வரை வகுப்புக்கள் இங்கு செயற்படுகின்றன. இப்பாடசாலை அதிபர்விடுதியையும், வளமான உள்ளீடுகளையும் கொண்டிருக்கின்றது. சூடுவெந்தபுலவு கிராமமானது எழில் தரும் என்பதில் ஐயமில்லை.

## இக்கிராமத்தின் பாடசாலை, மதரஸா, பள்ளிவாசல்

### மதரஸா :

சூடுவெந்தபுலவு கிராமத்தின் பெயரினை நாட்டின் நாலாபுறமும் பேசும் அளவிற்கு எமது கிராமம் அயல் கிராம மாணவர்கள் மார்க்கக் கல்வி கற்கும் வண்ணம் அல் கரிமிய்யா அறபுக் கல்லூரி அமைந்திருப்பது பெருமை தேடித்தருகின்றது.

## பள்ளிவாசல் :

சூடு வெந்தபுலவு கிராமத்தின் தாயகமான பழைய குடிமனையில் அமைந்துள்ள ஜும்ஆப்பள்ளியே பழமை வாய்ந்தது. இது கிட்டத்தட்ட 1 ½ நூற்றாண்டு வரலாற்றைக் கொண்டது. ஆரம்பத்திலே சிறிய ஓலையில் வேயப்பட்ட கொட்டகை அமைப்பை கொண்டது. தற்போது அழகு தரும் அமைப்போடு இருப்பதனையும் காணலாம்.

## புதுக்குடிமனை :

மஸ்ஜிதுல் அஷ்லா ஜும்மாப்பள்ளியானது பிரதான வீதியில் அமைந்திருப்பதனால் அதன் தோற்றமும் வடிவமைப்பும் இடம் பெயர்விற்கு (1990) பின்னர் மாற்றம் பெற்று தற்போது அழகுற காட்சிதருவதையும் காணலாம்.

றஹ்மத் நகர் : மஸ்ஜிதுல் ஹுதா

1995 ம் ஆண்டு மாதிரிக் கிராமமாக அமைக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை சிறு கட்டட அமைப்புடன் இருந்தாலும் வளர்ச்சிப் பாதையின் விளிம்பில் நிற்பதையும் காணலாம்.

## கல்வி நிலை

தற்போது இக்கிராமம் கல்வியிலே ஓரளவு தன்னிறைவு காண்கிறது எனலாம். ஆடுத்தவருக்காக கற்க வேண்டும் என்கிற நிலைக்கு தள்ளப்படும் போதுதான் கல்வியில் மாற்றமுடைய சமுகத்தைக் காணலாம். இந்த அடிப்படையில் கல்விச் சமுகம் என்ற வகையில் 2005ம் ஆண்டு தரவு

**ஆசிரியர்களாக**

1. ஜனாப் K.M.M. ஐயூப் (SPTR)
2. ஜனாப் K.M.M. அனீஸ் (BBA)
3. ஜனாப் U. உபைதுல்லா (SP/TR)

4. ஜனாப் K.M. பைஸர் (BA)
5. ஜனாப் A.K. நிஹார் (SP/TR)
6. ஜனாப் S. இப்றாகிம் (SP/TR)
7. ஜனாபா M. கைருன் நிஸா (SP/TR)

கல்வியற் கல்லூரிகளில்

1. ஜனாப் A.K. மன்சிய
2. ஜனாபட K.F. பஸ்மியா

சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள்

1. ஜனாப் J. பரீத்
2. ஜனாப் A. ஜெம்சீத்
3. கலீல்

தபாலக உத்தியோகத்தர்கள்

1. ஜனாப் A.M. நஹார்

க.பொ.த உ/தரம், தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றவற்றிலும் அதிகமாணவர்கள் தமது உயர் கல்வியை தொடர்கிறார்கள்.

கிராமத்தை சூழவுள்ள காணிகள் குளங்கள் விவசாயத்தை மையப்படுத்தி வாழ்ந்தவர்கள் விட்டுச்சென்ற செல்வங்களை தொட்டுணர்ந்து சந்தர்ப்பம் என்ற வகையிலே குளங்கள் காணிகள் முதலிடம் பெறுகின்றது.

| குளங்கள் பெயர்கள் | காணிவிஸ்தீரணம் |
|---|---|
| சூடுவெந்தபுலவு | 80ஏ |
| புதூர் | 18ஏ |
| குஞ்சுக்குளம் | 30ஏ |
| மரட்டையார்குளம் | 45ஏ |

| | |
|---|---|
| மேற்குளம் | 35ஏ |
| குரட்டையார்குளம் | 40ஏ |
| கருங்காலிக்குளம் | 20ஏ |
| கூழ்காச்சியகுளம் | 25ஏ |
| மறவன்குளம் | 30ஏ |
| கருஞாஞ்சிக்குளம் | 20ஏ |
| கற்குளம் | 15ஏ |
| மணல்குளம் | 15ஏ |
| சின்னக்குளம் | 30ஏ |

## பொருளாதார நிலை

அப்போது வாழ்ந்தவர்கள் எதிர்காலத்தை எண்ணாது அன்றுண்டால் அவ்வளவும் போதும் என வாழ்ந்ததால் அன்றைய பொருளாதாரம் அவர்களுக்கு போதுமானதாக இருந்தது. பின்னர் நாளடைவில் சனத்தொகை பெருக்கம் கூட மக்களின் தேவைகளும் விருப்பங்களும் அதிகரிக்கவே பொருளாதார முயற்சி தேவைப்பட்டது. ஆகவே விவசாயக் காணிகளை செய்வதினூடாகவும், வேறு இடங்களுக்கு சென்று தொழில்களை செய்வதன் மூலமாகவும் சிறு வியாபாரங்களை மேற்கொள்வதனூடாகவும் தமது பொருளாதார சுமையில் நின்றும் ஓரளவு விடுபட்டார்கள்.

மாறாக இன்றைய 21ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே ஏனைய நாடுகளுடன் போட்டி போட்டு வாழப்பழகிக் கொண்டதனால் பொருளாதாரம் மேலும் பல சுமைகளையும், தடங்கல்களையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, சுமாராக 13 குளக்காணிகள் 450 ஏக்கர் நெற்காணிகள் மூலம் பொருளாதாரம் திரட்டப்படுவதோடு மீன்பிடி தொழிலும் பல்வேறு தொழில் நுட்பத்துடன் செய்வதனாலும் சிலர் வெளிநாடுகளுக்கு சென்று அந்நிய செலாவணியை பெற்றுத் தருவதினூடாகவும், வீட்டுத் தோட்டத்தில் தமக்கு தேவையான காய்கறிகளை உற்பத்தி செய்து தமது பொருளாதார நிலையை உயர்த்தவும் முற்படுகின்றார்கள்.

மேலும் எமது கிராமத்தில் இருக்கின்றவர்கள் வெளி இடங்களிலும் தமது விவசாயக்காணிகள் மூலம் பொருளாதார நிலையை வளப்படுத்துகின்றார்கள். அவ்வகையிலே மவ்ளங்குளம், பாவற்குளம், புளியங்குளம் போன்றவற்றையும் குறிப்பிட்டு காட்டலாம்.

## அயல் கிராமங்களுடனான தொடர்பு

ஆரம்ப காலங்களிலும் சரி இவ்வூரின் இடைக்காலம் எனக் குறிப்பிடுகின்ற 1920ன் பிற்பாடு அயல் கிராமங்களுடனான தொடர்புகள் உறவுகள் மிகவும் வலுப்பெற்று மரபு தொடர்பானதும் உண்மை. சூடுவெந்தபுலவில்தான் மைய இடமாக முதல் முதல் ஓலையால் வேயப்பட்ட பள்ளி இருந்ததாகவும் இப்பள்ளிக்கு தமது ஜும்மாக் கடமை இதர ஆஷூரா கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு மக்கள் அணிதிரண்டு வந்ததாகவும் ஜும்மா நாள் வந்து விட்டால் வியாழக் கிழமை பின்னேரம் எல்லாக் கிராமங்களிலிருந்தும் (பொக்கிரவன்னி, காக்கயன் குளம், சாலம்பைக் குளம், ஆண்டியா புளியங்குளம், சம்மளங்குளம், சிப்பிக்குளம், பட்டானிச்சூர்) ஆண்கள் தமது குடும்பங்களோடு வந்து தங்கி கடமையை நிறைவு செய்து வீடு திரும்புவார்களாம். இந்த தொடர்புகளினூடாகவே திருமண விரிவுகளும் இடம் பெற்றதாக கூறப்படுகின்றது. அப்பொழுது சூடுவெந்த புலவுகளில் இருந்த ஜாவா குடும்பத்தவர்களில் சிலர் பட்டானிச்சூரில் வாழ்ந்ததாகவும் அவர்களை இங்கிருந்து வண்டில் கட்டி குடும்பங்களுடன் சென்று தங்கி அவர்களுடன் தமது உறவு முறைகளை பேணியதாகவும் கூறப்படுகின்றது.

## இடப்பெயர்வு – 1990

மொழி ரீதியில் ஒன்றுபட்டவர்கள் என்ற ரீதியில் ஓரளவு உயிர் சேதமின்றி, உடமைகளை விட்டு 24 மணித்தியாலங்களுக்குள் எமது இருப்பிடத்தை விட்டு வெளியேற்றப்பட்டோம். அந்தவகையிலே எமது சூடுவெந்தபுலவு கிராமமும் ஒன்றுதான்.

1990 வெளியேற்றப்பட்டவுடன் எங்கு செல்வது என தவித்து இறுதியில்

இக்கிரிகொல்லாவ, கனவல்பொல, குருனாகல், புத்தளம் எனப் பெயர் காணாது ஊர்சென்றோம். அகதி என்ற போர்வைக்குள் வெறும் அரிசுண்டு அவலப்பட்ட நாங்கள் அன்றைய சிறிலங்கா அரசாங்கத்தால் 1993 – 06ம் மாதத்திற்கு பின் எமது கிராமத்திற்கு காலடி எடுத்து வைக்க முடிந்தது.


துரதிஷ்ட வசம், இன்னும் பல கிராமத்தவர்கள் தமது மண்ணை நுகர முடியால் வாழ்கின்றார்கள். அந்த வடிவத்திற்குள் இருந்து விடுபட்டவர்கள் என்ற வகையிலே முதலிலே இறைவனுக்கு நன்றி சொல்லி மீண்டும் இப்படி ஒரு பெயர் எம்முதுசுடப்பட்ட எம்மீது சூட்டப்படக் கூடாது என்ற பணிவுடன் வாழ்ந்து வருகிறோம்.

தொகுப்பு

U. உபைதுல்லா -ஆசிரியர்
K.M.M. அனீஸ் - ஆசிரியர்

வ/அல் இக்பால் மு.வி., சூடுவெந்தபுலம்.

# சாளம்பைக்குளம்



பழைய நூலகம்.

பழையபள்ளி.



வ/அல்
அக்ஸா ம.வி.
சாளம்பைக்குளம்.

# ஹிஜ்ரா புரம் வரலாறு

ஹிஜ்ரா புரம் வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒரு சிறிய கிராமமாகும். இது செக்கட்டிப்பிலவு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டது.

இங்கு சுமார் 60 குடும்பங்கள் வரை வாழ்ந்துவருகின்றன. ஆரம்பத்தில் புளிதறித்த புளியங்குளம் கிராமத்தில் ஒரு பகுதியாக காணப்பட்டது.



ஹிஜ்ராபுரம் தைக்காபள்ளி.

காலப்போக்கில் இக்கிராமத்திற்கும் புளிதறித்த புளியங்குளம் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 1 கிலோ மீட்டராகும். இதனைக் கருத்தில் கொண்டு இங்கு தக்கியா பள்ளி ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. எனினும் ஜும்ஆப்பள்ளியாக புளிதறித்த பள்ளியே உபயோகிக்கின்றனர்.

இக்கிராமத்தில் 1970ம் வருடத்திலிருந்து மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ளமக்களில் பெரும் பாலானவர்கள் 1990ம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் மீள்குடியேறியவர்கள். இங்குள்ள மாணவர்கள் புளிதறித்த புளியங்குளம், அறபா முஸ்லிம் வித்தியால யத்திலே கல்வி கற்கின்றனர். இக்கிராமத்தில் பாலர் பாடசாலை ஒன்று இயங்கிவருகின்றது. அத்துடன் விளையாட்டுக் கழகம், கிராம அபிவிருத்தி சங்கம் பள்ளிவாசல் பரிபாலன சபை என்பன ஒன்றிணைந்து இக்கிராம வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி வருகின்றன.

இங்குள்ள மக்களின் பிரதான தொழில் கூலித் தொழிலும் விவசாயமுமாகும். சாதாரண மக்களாக இருந்தாலும் விருந்தோம்பல் இங்கு சிறந்து காணப்படுகின்றது. முற்றிலும் முஸ்லிம்களைக் கொண்ட இக்கிராமம் அந்நிய சமூகத்தினரோடு சகோதரர்களாக நெருங்கிப்பழகி வருகின்றனர். இக்கிராமத்தில் குளங்கள் எதுவுமில்லை. கிணற்று நீரில் விவசாயம் மேற்கொண்டும் மழையை நம்பியும் விவசாயம் செய்துவருகின்றனர்.

இக்கிராமத்தின் உருவாக்கத்தில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக் கொண்ட இழைப்பாறிய அதிபர் ஜனாப் M.I. சாபி அவர்களின் பாராட்டத்தக்கவர்.


## *அறபா நகர் வரலாறு :*

இக்கிராமம் வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஒரு குடியேற்றத்திட்ட கிராமமாகும். இது செக்கடிப்பிலவு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டது.

இக்குடியேற்றத்திட்டம் 1995ம் வருடம் முன்னாள் சமூக சேவைகள் பிரதி அமைச்சரும் வன்னி பாராளுமன்ற பிரதிநிதியுமான அல்ஹாஜ் S.S. அபூபக்கர் அவர்களால் இங்கு 100 வீடுகள், மின்சாரம், பாதை அமைப்பு, குடி நீர் என்பன ஏற்படுத்தப்பட்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அறபா நகர் குடியேற்றத்திட்டத்தில் ஆண்டியா புளியங்குளம் ஆகிய கிராமங்களில் வீடில்லாதோருக்கு வழங்கப்பட்டிருந்தது. புளிதறித்தபுளியங்குளம் கிராமத்திற்கும் சூடுவெந்தபுலம் பழைய குடிமனைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இக்கிராமம் அமைக்கப்பட்டுள்ளது. இது மேட்டுப்பாங்கான பிரதேசமாக இருப்பதால் குடிநீருக்கு கோடை காலங்களில் தட்டுப்பாடு ஏற்படுவது வழக்கம். மழையை நம்பியே விவசாயம் செய்கின்றனர்.

இங்குள்ள மாணவர்கள் புளித்தறித்தபுளியங்குளம் அறபா வித்தியாளயத்திற்கும் சூடு வெந்த புலம் அல் இக்பால் முஸ்லிம் வித்தியாலயத்திற்கும் கல்வி கற்கச் செல்லுகின்றனர்.



அறபா நகர் ஜும்மா பள்ளி

வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட இக்கிராமம் செங்கடிப்பிலவு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட முற்றிலும் முஸ்லிம்கள் வசித்துவரும் பழைமை வாய்ந்த ஒரு கிராமம்.

மக்கள் இக்கிராமத்தில் குடியேறிய போது புளிய மரங்கள் அதிகமாக காணப்பட்டதால் அம்மரங்களை தறித்துத் துப்பரவு செய்தபின்னரே இங்கு குடியேறியதாக மூத்தவர்கள் மூலம் அறியக்கிடைக்கின்றது. இங்கு மக்கள் சூடுவெந்தபுலம் கிராமத்திலிருந்தே இடம்பெயர்ந்து இங்கு படிப்படியாக குடியேறியதாக அறிய முடிகின்றது. கிராமிய சூழலைக் கொண்ட அழகான அமைப்பும் மந்தை வளர்ப்புக்கு பொருத் தமான இடவசதியையும் கொண்ட ஒரு விவசாயக் கிராமமாகும்.

இக்கிராமம் வவுனியா நகரத்திலிருந்து மன்னார் பிரதான வீதி வழியாக 8 கிலோமீட்டரில் தெற்கு பக்கமாகச் செல்லும் கிரவல்




புளித்தறித்த புளியங்குளம் ஜூம்ஆபள்ளி.

பாதையால் 1 ½ கிலோ மீட்டர் சென்றால் இக்கிராமத்தை அடையலாம்.

இம்மக்களின் பிரதான தொழில் விவசாயம். புளிதறித்தபுளியங்குளம், ஆசிக்குளம், ஆலன்குளம், துவரங்குளம், கிடாகற்குளம், குருந்தங் குளம், கருங்காக்குளம் போன்ற சிறு குளங்கள் காணப்படுகின்றன. மழையை நம்பிய விவசாயமே மேற்கொள்ளப்படுகின்றன.

இக்கிராமத்தின் மத்தியில் மிகப்பழமை வாய்ந்த ஜும்ஆப்பள்ளிவாசல் காணப்படுகின்றது. புனரமைக்கப்பட வேண்டிய அவசியத் தேவைகளில் முக்கியமான தேவையாகும். இப்பள்ளிவாசலின் ஒரு பகுதியில் குர்ஆன் மதுரஸாவும் நடைபெறுகின்றன.

1955ஆம் ஆண்டு இக்கிராமத்தில் அரசினர் முஸ்லிம் கலவன் என்னும் பெயரில் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. வெளியூர் ஆசிரியர்களே இங்கு சேவையாற்றி இருக்கின்றர். மக்கள் கல்வியில் நாட்டம் கொள்ளாமை, வறுமை, கவலையீனம், விவசாயத்தில் பிள்ளைகளை ஈடுபடுத்தல் போன்ற காரணிகளால் கல்வி வளர்ச்சி



அறபா மு.வி. புளித்தறித்த புளியங்குளம்.

மந்தகதியில் காணப்பட்டது. படிப்படியாக தற்போது இப்பாடசாலை வளர்ச்சியடைந்து க.பொ.த சாதார தரம்வரை மாணவர்கள் கற்கும் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. தற்போது இப்பாடசாலையின் பெயர் வ/அறபா முஸ்லிம் வித்தியாலயம். இங்கு சுமார் 300 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். அதிபர் அல்ஹாஜ் யு. அப்துல் நாஸர் அவர்களின் அயராத முயற்சியாலும் ஊரவர்களின் ஒத்துழைப்புடன் பல நிரந்தரக் கட்டிடங்களைக் கொண்ட ஒரு அழகான அமைப்பில் இயங்கி வருகின்றது.

இக்கிராமத்தில் அரச உத்தியோகத்தர்கள் குறைவு. காலம் சென்ற அகமது இஸ்மாயில் கிராமசேவையாளர் அவர்களும் காலம் சென்ற கோசுமுகம்மது அகமது கபீர் கிராம சேவையாளர் அவர்களும் இக்கிராம வளர்ச்சிக்கும் பாடசாலை வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாற்றியுள்ளதை இவ்வேளையில் இக் கிராம மக்கள் நினைவு கூருகின்றனர்.

அத்தோடு இக்கிராமத்திலுள்ள உலமாக்களும் இம்மக்களின் வளர்ச்சிக்கு தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது.

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் இக்கிராமத்தின் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்த வெளிநாட்டு இராணுவ வீரர் (காப்பிலி) ஒருவரை இக்கிராமத்தைச் செர்ந்த வீரர் ஒருவர் துணிவுடன் சுட்டுக்கொன்ற நம்பவம் இப்பிரதேசத்தில் இருந்தவர்களின் வீரத்தையும் துணிச்சலையும் தன்மானமாக வாழ்ந்ததையும் நினைவு படுத்துகின்றது.


இக்கிராம மக்கள் செக்கடிப்பிலவு, பம்பைமடு, நெளுக்குளம் ஆகிய தமிழ் கிராம மக்களுடன் நீண்டகாலமாக சகோதரர்களைப் போல் மிக அன்னியோன்யமாக வழகி வருகின்றனர். திருமணம் மரணவீடு போன்றவற்றில் இரண்டறக் கலந்து பங்குபற்றுவதை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

# மதீனா நகர் கிராமத்தின் வரலாறு :

இக்கிராமம் வவுனியா நகருக்கு வடக்கே 2 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இங்கு முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். ஆரம்பத்தில் இக்கிராமம் மகாறம்பைக்குளம் என அழைக்கப்பட்டது. காலக் கிரமத்தில் "மதீனா நகர்" என மாற்றப்பட்டது.

1965ம் ஆண்டு காலப்பகுதியில் மலை நட்டிலிருந்து வவுனியா நகருக்கு வியாபாரிகளாக வந்த முஸ்லிம்கள் இக்கிராமத்தில் குடியேறினர். இவர்களது பிரதான தொழில் வியாபாரம், கூலித் தொழில், தண்ணீர்வளம் குன்றிய பிரதேசமாக இருப்பதால் விவசாயத் தொழில் மிகக் குறைவு.

1970ம் அண்டு இக்கிராமத்தில் ஜனாப் S.P. அப்துல் மஜுது அவர்களின் காணியில் இறையில்லம் அமைக்கப்பட்டு மக்கள் தொழுது வந்தனர். 1990ம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் பள்ளிவாசலுக்கென காணியைப் பெற்று புதிய பள்ளிவாசல் அமைத்துள்ளனர். மக்கள் தொகை அதிகரிக்க இடப்பற்றாக்குறை காரணமாக தற்போது பள்ளிவாசல் இருமாடிகளாக அழகான இஸ்லாமிய கட்டிடக்கலையைப் பிரதிபலிக்கும் வகையில்



வ/மதீனா வித்தியாலயம் மதீனா நகர்.

அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இதன் கீழ்மாடி வேலை பூர்தியடையும் நிலையில் . உள்ளது.

இங்குள்ளவர்கள் மார்க்கப்பற்றும் மக்களை உபசரிக்கும் நற்பழக்கமும் நிறைந்தவர்கள். அயல் கிராமமக்களான தமிழ் சகோதரர்களுடன் மிக அன்னியோன்யமாக சகோதரர்களாக வாழ்ந்து வருவது வவுனியா மாவட்டத்தில் பலராலும் போற்றப்பட்டுவருகின்றது.

இக்கிராமத்தில் சுமார் 145 குடும்பங்கள் ஒரு பள்ளிவாசல் நிருவாகத்தின் கீழ் கிராமியக் கட்டுப்பட்டுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்தின் கல்வியை நோக்கும் போது இங்கு 1990.03.05ம் திகதி மகாரம்பைக்குளம் அரசினர் முஸ்லிம் பாடசாலை என்ற பெயரில் 2 ஆசிரியர்களுடன் M.S. றம்ஸீன் அதிபர் அவர்களின் தலைமையில் 17 மாணவர்களுடன் பள்ளிவாசல் காணியில் தற்காலிக கொட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை மூன்று மாதகாலம் மாத்திரம் இயங்கியது. 1990ம் வருடம் ஜூன் மாத கலவரத்தின் காரணமாக இயங்கவில்லை.

பின்னர் 1992.09.15ம் திகதி மீண்டும் பள்ளிவாசல் காணியில் தற்காலிக கொட்டிலில் அதிபர் அல்ஹாஜ் M.I. முத்து முகம்மது அவர்களின் முயற்சியால் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதன்பின்னர் அதிபரின் முயற்சியினால் பாடசாலைக்கென 2 ½ ஏக்கர் காணி ஊர்மக்களின் முயற்சியுடன் விலைக்கு வாங்கப்பட்டது. பின்னர் தற்போதைய நிரந்தரக்

கட்டிடங்கள் யாவும் அதிபரின் முயற்சியினால் கட்டப்பட்டது. உலக வங்கியின உதவியுடன் இப்பாடசாலையில் அழகான அமைப்பில் நூலகம் அமைக்கப் பட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் உதவியாக உள்ளது.

பின்னர் இப்பாடசாலை வ/மதீனா வித்தியாலயமாக பெயர் மாற்றப் பட்டுள்ளது. ஆரம்பப்பாடசாலையாக அனுமதிக்கப்பட்டுஅதிபரின் விடா முயற்சியினால் க.பொ.த. சாதாரண தரம்வரை மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இங்கு சுமார் 20க்கு மேற்பட்ட மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்தும் உள்ளனர். பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ துறையில் இப்பாடசாலையின் பழைய மாணவன் ஒருவர் கற்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இக்கிராமத்தின் வளர்ச்சியில் பள்ளிவாசல் பரிபாலன சபையினரும், விளையாட்டு கழகங்கள், கிராம அபிவிருத்தி சங்கம், ஏனைய அமைப்புக்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டு மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு அயராது உழைத்து வருகின்றனர்.


தொகுப்பு M.S. றம்ஸீன் (அதிபர்)
M.I. முத்துமுகம்மது (அதிபர்)

# வவுனியா நகர முஸ்லிம்களின் வரலாறு

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசமாகும். இந்நகரத்தில் முஸ்லிம்கள் கணிசமான அளவு வியாபாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

வவுனியாவின் ஆரம்ப காலப்பெயர் விளாங்குளம் என அழைக்கப் பட்டதாக மூத்தவர்கள் மூலம் அறிய முடிகிறது. இங்கு முஸ்லிம்கள் 1865 ஆம் ஆண்டு தொடக்கம் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பது வெளிப்படையான உண்மை.

வவுனியா நகரம் யாழ்ப்பாணம் பிரதானபாதையையும், மன்னார் பிரதான பாதையையும், திருகோணமலை பிரதான பாதையையும், கண்டி பிரதானபாதையையும் இணைக்கும் முக்கிய கேந்திரஸ்தானமாக விளங்கும் பிரதான நகரமாகும்.



வவுனியா இஸ்லாமிய கலாசார நிலையம்.

இந்நகரத்தில் தமிழ் மக்களும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் நல்லுறவுடன் நீண்ட காலம் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் முஸ்லிம்களில் அதிகமானவர்கள் மன்னார் மாவட்டம், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களைவிட கண்டி, மட்டக்களப்பு போன்ற ஏனைய மாவட்ட முஸ்லிம்களும் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். நிரந்தரக் கடைகளிலும் சந்தை வியாபாரத்திலும் அங்காடி வியாபாரிகளாகவும் உள்ளனர்.

1990ம். ஆண்டு இடம் பெயர்வின் பின்னர் இந்நகரம் பொலிவுறத் தொடங்கியது. வடமாகாணத்தின் மத்திய நகரமாக வவுனியா நகரம் வர்த்தகத் துறையில் மிளிரத் தொடங்கியது. காணிகளின் பெறுமதியும் விலையும் தடீரென அதிகரித்தன. இதனால் முஸ்லிம்களுக்குச் சொந்தமான மிகப் பழைய வரத்தக நிலையங்கள் அயலவர்களுக்கு விறகப்பட்டுள்ளன.
வவுனியா நகரத்தின் மத்தியில் காட்சியளிக்கும் பள்ளிவாசல் ஆரம்ப காலத்தில் சிறிய பள்ளியாக இருந்தது. 1990ம் ஆண்டுக்குப் பின்னர் மக்களின் தொகை அதிகரிப்பினாலும் வெளியூர் வியாபாரிகள், சாதாரண மக்களின் வருகை காரணமாக இடநெருக்கடி ஏற்பட்ட தினால் தற்போதைய பள்ளிவாசல் புனர்நிரமாணம் செய்யப்பட் டிருக்கிறது. இதன் கீழ் மாடி வேலை ஆரம்பிக்கப்பட்ட நிலையிலும் உள்ளது. இஸ்லாமிய கட்டிடக் கலையைப் பிரதிபலிக்கும் வகையில் அழகான அமைப்பினால் கவர்ச்சியாக வவுனியா நகர மத்தியில் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பள்ளிவாயலுக்குச் சொந்தமான காணியில் கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதன் வருமானம் மூலம் இப்பள்ளிவாசல் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

கௌரவ அல்ஹாஜ் S.S. அபூபக்கர் அவர்கள் பிரதியமைச்சராக இருந்த வேளையில் நகரப்பள்ளி வாசலுக்கு மிக அண்மையில் ஹொரவப்பொத்தானை வீதியில் இஸ்லாமிய கலாச்சார நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வேளையில் கௌரவ அமைச்சர் அவர்களுக்கு வவுனியா மாவட்ட முஸ்லிம்கள் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளார்கள். இருமாடிகளைக் கொண்ட இக்கலாசார

நிலையத்தின் மேல் மாடியில் பொது மண்டபமும் கீழ் மாடியில் நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது.

வவுனிய நகரத்திற்கு வெளியே கோயிற்குளம், வெளிக்குளம், தோணிக் கல், மூன்று முறிப்பு போன்ற இடங்களில் மிகக் குறைவான தொகை முஸ்லிம்கள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## சோனக சாளம்பைக்குளத்தின் வரலாறு

வவுனியா மாவட்டத்தின் வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நடுச் செட்டிக்குளம் பிரதேச சபைக்குட்பட்டதுமான சாளம்பைக்குளம் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த சோனக சாளம்பைக் குளம் கிராமம் தினச் சிறப்பு வாய்ந்ததாகும்.

வடக்கே பெரிய கட்டு கிராமமும் கிழக்கே பம்பை மடுச் சந்தியையும் மேற்கே பூவரசங்குளமும் தெற்கே இயங்கராவூர் கிராமத்தையும் எல்லையாகக் கொண்ட மிகப்பரந்த நிலப்பரப்பையுடையது. இக்கிராமத்தைச் சூழ பூவரங்குளம், இயங்கராவூர் செக்கடிப்பிலவு, பம்பைமடு, பெரியகட்டு, புலவனார் போன்ற பழைய கிராமங்கள் அமைந்துள்ளன.

இது வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் மிகப்பழமைவாய்ந்ததும் பெரிய கிராமமுமாகும். இக்கிராமத்தில் 1880ம் ஆண்டளவில் மக்கள் குடியேறியதாக முதியோர்களிடமிருந்து அறியக்கூடிய சான்றுகள் உள்ளன. இவர்கள் சாளம்பைக்குளத்தை அண்டிய பிரதேசத்தில் சாதாரண வீடுகளில் வாழ்ந்திருக்கிறார்கள். இக்கிராமத்தைச் சூழ தமிழ் கிராமங்களில் இந்துக்கள் அதிகமாக வாழ்ந்திருக்கிறார்கள். இக்கிராமத்தில் முற்றிலும் முஸ்லிம்கள் வசித்ததால் சோனக என்ற சொல்லால் அழைத்தனர். இக்கிராமத்தின் குளத்தில் இரு மருங்கிலும் சாளம்பை மரங்கள் அதிகமாக காணப்பட்டதனால் சாளம்பைக்குளம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இலங்கை நில அளவைப் படத்திலும் வவுனியா மாவட்ட நில அளவைப்படத்திலும் இப்பெயரினால் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதை நன்கு அவதானிக்கலாம்.

இக்கிராமத்திலுள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் பின்பற்றும் பிரதான சமயம் இஸ்லாம். தாய் மொழி தமிழ். இவர்களின் பரம்பரை மன்னாரிலிருந்தே வந்ததாக அறிய முடிகிறது. இப்பிரதேசத்தைச் சூழ அடர்ந்த காடுகள் காணப்பட்டிருக்கின்றன. இதில் யானைகள் அதிகளவில் கரணாலயங்கள் இருந்ததால் மன்னாரிலுள்ள முஸ்லிம்கள் யானைகளைச் சுரக்கிட்டு பிடிப்பதில் வல்லவர்களாய் இருந்தனர். இவர்கள் இக்கிராமத்தில் தங்கு விடுதியமைத்து யானைகளைப் பிடித்து பள்ளிவாசலுக்கு அண்மையிலுள்ள புளியமரத்தில் கட்டியதனால் அதனை யானைகட்டும் புளியமரம் என மிக நீண்ட காலமாக மக்கள் அழைத்ததை ஆதாரமாக கொள்ளலாம். இவ்வாறு வந்தவர்களின் பரம்பரையிலிருந்தே இக்கிராம குடியிருப்புகள் உருவாகி இருக்கின்றன.

வவுனியா, மன்னார் பிரதான வீதியின் இரு மருங்கிலும் 7வது மைலுக்கும் 8வது மைலுக்கும் இடைப்பட்ட ஒரு மையில் பிரதேசத்தில் குடி நிலங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மஸ்ஜித் றகுமானியா பள்ளியை அண்டிய பிரதேசத்தில் பழைய குடியிருப்பு அமைந்திருந்தது. வயல் வெளிகளும் வீட்டுத் தோட்டங்களும் கிராமத்தை செலிப்புட்டின. கிராமத்தைச் சூழ அடர்ந்த காடுகளும் செழிப்புட்டும் குளங்களும் கிராமத்திற்கே மெருகூட்டின. பிரதான வீதியில் அல் அக்ஸா மத்திய வித்தியாளயமும், அதன் விளையாட்டு மைதானமும் மத்தியில் அமைந்து காணப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம் பாடசாலைக் கெதிரே பலநோக்கு கூட்டுரவு சங்கம் 8வது மைல் சந்தியில் காணப்பட்ட சனசமூக நிலையமும் பொது விளையாட்டு மைதானமும் 7 வது மைலுக்கு அப்பால் காணப்பட்ட 30 ஏக்கர் ஹிஜ்ரா குடியேற்றத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட காணியும் சாளம்பைக்குளத்தின் குளமும், இக்கிராமத்தை நன்கு அடையாளப்படுத்தின. அத்துடன் இக்கிராமத் தினூடாக இயங்கராவூர், பெரிய கட்டு, கிடாச்சூரி, பாவற்குளம் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் பிரதான சந்திகள் அமைந்திருந்த தினால் பிரபல்யம் அடைந்து வரும் சிறு நகரம் போல் காட்சியளித்தன. எப்போதும் மக்கள் நடமாட்டமும் செறிந்து காணப்பட்டது.

### சனத்தொகை

இங்கு சுமார் 385 குடும்பங்களில் 3000க்கு மேற்பட்ட மக்களும் 1000 க்கு மேற்பட்ட வாக்காளர்களும் உள்ளனர்.

### தொழில்

இக்கிராமம் முற்றிலும் விவசாயிகளைக் கொண்டது. சிறுகுளங்களில் மழை நீரை நம்பி கால போகப் சிறு போகம் என இரு போகங் களிலும் விவசாயம் செய்திருக்கிறார்கள் . காடுகளை வெட்டி எரித்து குரக்கன், நெல். எள்ளு பயிரிட்டு வந்தனர்.

மேட்டுநிலங்களில் கிணறுகள் தோண்டி சிறுபயிர் செய்கையிலும் ஈடுபட்டுவந்துள்ளனர். மிளகாய், வெங்காயம், மரக்கறிவகைகள் என்பன பயிரிடப்பட்டு வந்தள்ளன.

வயல் வேலைகளை கூட்டுறவு அடிப்படையில் கூட்டாகச் சேர்ந்து செய்வது இக்கிராமமக்களின் வழக்கமாக இருந்தது. இதனை பரத்தை என்று கூறுவார்கள்.
இக்கிராமத்தில் சாதாரண குளங்கள் 06, சிறிய குளங்கள் 23 உள்ளன. மழைநீரை நம்பியே இக்குளங்களில் நீர் சேகரிக்கப்பட்டு விவசாயம் செய்திருக்கின்றனர்.

## கல்வி

### அல் அக்ஸா ம.வி.

இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கு இவ்வூரில் அமைந்துள்ள பாடசாலை பெரிதும் வழி காட்டியுள்ளது. 1917ம் ஆண்டு சாளம்பைக் குளம். அ.மு. கலவன் பாடசாலை என்ற பெயரில் 17 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதிருந்தே தமிழ் முஸ்லிம் மாணவர்கள் சேர்ந்து கற்றிருக்கின்றனர். திருவாளர் செல்லத்துரை இப் பாடசாலையின் முதல் அதிபராக சேவையாற்றியுள்ளார்.

இயங்கராவூர், செக்கடிப் பிலவு, பூவரசங்குளம் வேலன்குளம், புலவனாவூர் ஆகிய அயல்கிராம மாணவர்கள் ஆரம்ப காலத்தில் கற்றதற்கான சான்றுகள் பாடசாலை பதிவேட்டில் உள்ளன. ஆரம்பப் பிரிவில் தரம் ஐந்து வரை வகுப்புகள் நடைபெற்று வந்தது. படிப்படியாக பாடசாலை வளர்ச்சியடைநடது வந்துள்ளன. உள்ளூர் மாணுவர்கள் பெரும்பாலும் கல்வியில் நாட்டம் கொள்ளவில்லை. பெற்றோர்களும் தமது பிள்ளைகளை கல்வியில் கவனம் செலுத்தவில்லை.

வவுனியா மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் மகாவித்தியாலயம் அமைப்பதற்கான அரசாங்க அனுமதி கிடைத்தது. இம் மகா வித்தியாலயத்தை எந்த முஸ்லிம் கிராமத்தில் அமைப்பது என்ற பிரச்சினை வலுப்பெற்றது. சாளம்பைக்குளம் வாழ் மக்களின் விடா முயற்சியினால் சாளம்பைக்குளம் முஸ்லிம் மகாவித்தியாலயம் என்ற பெயரில் 1963 ம் வருடம் தரம் உயர்த்தப்பட்டது. அதன் பின்னர் வவுனியா மாவட்டத்திலுள்ள பாவற்குளம். சூடுவெந்தபுலவு, புளிதரித்தபுளியங்குளம். பட்டாணிச்சூர் புளியங்குளம், ஆண்டியாபுளியங் குளம், தண்ணீர் ஊற்று, காக்கோயன்குளம் ஆகிய கிராம முஸ்லிம் மாணவர்களும் இயங்கராவூர், பம்பைமடு, பூவரசங்குளம், செக்கடிப்புலவு, பாவற்குளம், பளையனாலிங்குளம், தம்பனை, குரக்கள் புதுக்குளம் ஆகிய தமிழ் கிராம மாணவர்களும் ஒற்றுமையுடன் கல்வி கற்று வந்தனர். 1965ம் ஆண்டு வ/அல் அக்ஸா மகா வித்தியாலயம் என பெயர் மாற்றப்பட்டது. இப்பாடசாலையின் விடுதி வசதியையும் விவசாயத்திற்கான பத்து ஏக்கர் காணியையும் 5 ஏக்கர் விளையாட்டு மைதானத்தையும், நூல் நிலையம், விஞ்ஞான கூடம், மரவேலைப் பிரிவு என்பன போன்ற பல வளங்கள் நிறைந்த, வளர்ச்சியடைந்த ஒரு மகா வித்தியாலயமாக காட்சியளித்தது.

இதன் வளர்ச்சிக் காலம் சென்ற முன்னாள் அதிபர் A.S. செய்யது முஹம்மது பெரும் பங்காற்றினார். பேற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி மேலோங்க வேண்டும் என்ற நன் நோக்குடன் செயற்பாட்டாலும் எதிர்பார்த்த பலன் கிட்ட வில்லை. காரணம் 1968ம் வருடம் க.பொ.த. சாதாரண தர வகுப்பில் 30 மாணவர்கள் கல்வி கற்றனர். இதில் ஒரே ஒரு மாணவன் மட்டும் (உள்ளூர் மாணவன்) இவ்வூரில் இருந்து இப்பாடசாலையில் கல்வி கற்று க.பொ.த. சாதாரணதர பரீட்சையில்

சித்தியடைந்த பெருமை முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது என்பவரையே சாரும்.

இக்கிராம மாணவர்கள் வறுமை, விவசாயத்தில் ஈடுபடல், பெற்றோருக்கு விவசாயத்தில் உதவுதல், கல்வியில் நாட்டமின்மை, பெற்றோரின் கவனயீனம் போன்ற காரணங்களால் பாடசாலைக்கு வராமலிருக்கும் மாணவர்களுக்கு அப்போதைய பள்ளி வாசல் பரிபாலனசபையினர் ஒரு மாணவன் ஒரு நாளைக்கு பாடசாலைக்கு வரா விட்டால் குறிப்பிட் பெற்றோரிடமிருந்து ஐம்பது சதம் தெண்டமாக அறவிடமுடிவு செய்தனர். இதனால் பயன் கிடைக்கவில்லை. 1967ம் வருட க.பொ.த சாதாரண வகுப்பில் ஒரே ஒரு மாணவன் சித்தியெய் தியது இதற்கு இருந்தது இதற்கு சான்றாக உள்ளது.

1980ம் வருட உள்ளூர் ஆசிரியர்களின் முயற்சியால் கல்வியில் உள்ளூர் மாணவர்கள் ஓரளவு முன்னேற்றம் அடைந்தனர். எது எவ்வாறிருந்தும் இக்கலாசாலையில் கற்றுத் தேறியவர்கள் பலர் அதிபர்களாக, ஆசிரியர்களாக, கணக்காளர்களாக, இலிகிதர்களாக வேறு அரசாங்க திணைக்களங்களில் வேலை செய்பவர்களாக இருப்பதை அவதானிக்கலாம்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பெற்றோர்கள் இலவசமாக மாணவர் விடுதியை அமைத்து உதவியும், விளையாட்டு மைதானத்தை சிரமதானம் மூலம் செப்பனிட்டும், காலம் சென்ற மதார்பிச்சை உசன் தம்பி, JP ஹாஜியார் அவர்கள் தனது சொந்த பணத்தில் 50 X 20 அளவு நிரந்தர கட்டிடத்தை அன்பளிப்பு செய்தும் உதவினார்கள். இது வவுனியா மாவட்ட பிரபல பாடசாலைகளில் ஒன்றாக விளங்கிய வரலாற்றை மறைக்க மடியாது.

**முதல் ஆசான்**

இவ்வூரைப்பிறப்பிடமாகவும் இப்பாடசாலையின் பழைய மாணவருமான முகம்மது ராசா அக்பர் 1963ம் வருடம் ஆசிரியர் நியமனம் பெற்று இக்கிராமத்திற்கு பெயரையும் புகழையும் தேடித்தந்தார். பின்னர் அதிபராகவும் இப்பாடசாலையின் சில காலம் சேவையாற்றியுள்ளார்.

வேறு பாடசாலைகளிலும் அதிபராக சேவைபுரிந்து தற்போது இளைப்பாரியுள்ளார்.

**க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த முதல் மாணவன்.**

இப்பாடசாலை ஆரம்பித்த பின்னர் சாளம்பைக்குளத்தில் பிறந்து வளர்ந்து இப்பாடசாலையிலேயே ஆரம்பம் முதல் இறுதிவரை கற்றுத் தேர்ந்த முஹம்மது இஸ்மாயில் முத்துமுஹம்மது அவர்கள் 1968ம் வருடம் க.பொ.த சாதாரண தரத்தில் முதன்முதல் சித்தியடைந்த பெருமையை தேடிக் கொண்டார். இவர் பயிற்றப்பட்ட சமூகக்கல்வி ஆசிரியரும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவருமாவார் இவர் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சியில் விசேட சித்தியடைந்து வவுனியா மதீனா வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றினார். தற்போது வவுனியா மாவட்ட சமூர்த்தி இணைப்பு அதிகாரியாக கடமையாற்றுகின்றார். அத்துடன் அகில இலங்கை சமாதான நீதிபதியாகவும் கடமையாற்றுகிறார்.

**மூத்த உலமாக்கள்**

சீனி முகம்மது அப்துல் மஜீது மௌலவி அவர்கள் புத்தளம் காஸிமிய்யா அரபுக் கலா சாலையில் கற்றுத் தேர்ந்து மௌலவி பட்டம் பெற்று ஆசிரியராக நியமனம் பெற்று வவுனியா மாவட்ட இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகராக வேவையாற்றுகின்றார். அத்துடன் வவுனியா மாவட்ட குவாசி நீதிபதியாகவும் சேவை யாற்றுகின்றார்.

முஹம்மது சரிபு செயினுலாப்தீன் மௌலவி அவர்கள் புத்தளம் காஸிமிய்யா அரபிக் கலாசாலையிலும், மாதம்பை மதரஸதுல் ஹியாதிய்யாவிலும் பயின்று பட்டம் பெற்று ஆசிரியராக சேவையாற்றி தற்போது இளைப்பாறியுள்ளார்.

**புலமை பரிசில் பெற்ற முதல் மௌலவி**

நாகூர் பிச்சை ஜுனைத் மௌலவி புத்தளம் காஸிமிய்யா அரபுக்கலாசாலையில் பயின்று மதீனா பல்கலைக்கழக புலமைப்பரிசில்

பெற்று 5 வருடங்கள் கற்றுத் தேர்ந்து மதனி என்ற பட்டத்துடன் வெளியேறியுள்ளார். புகழ்பெற்ற பேச்சாளரும், பத்திரிகைகளில் இஸ்லாமிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதியும் வருகிறார்.

**முதல் பட்டதாரி**

கொழும்பு நுகேகொடை பல்கலைக்கழகத்தில் சமூகவிஞ்ஞானப் பட்டதாரியாக முத்து முஹம்மது றிபாய்தீன், இவர் சமுர்த்தி வங்கியில் உதவி முகாமையாளராக சேவையாற்றுகின்றார். அத்துடன் சமூகப்பணியில் டிப்ளோமாப் பட்டமும் பெற்றுள்ளார்.

**குர்அன் மத்ரஸாவின் ஆரம்பகர்த்தா**

மதார் சாகிபு சுலைமான் லெப்பை அவர்கள் 30 வருடகாலம் சம்பளமின்றி குர்ஆன் மத்ரஸாவில் குர்ஆன் ஓதிக் கொடுத்திருக் கின்றார். அத்துடன் வருடச் சம்பளத்திற்கு பள்ளிவாசலில் முஅத்தினாகவும் சேவையாற்றியுள்ளார். இவருக்குப்பின்னர் முஹம்மது இஸ்மாயில் லெப்பை முத்து மரைக்காயர், சாகுல் ஹமீது ஆகியோர் சேவையாற்றியுள்ளனர்.

இக்கிராமத்தில் மஸ்ஜித் ரகுமானிய்யா ஜும்ஆப்பள்ளிவாசல் பழமைவாய்ந்த பள்ளியாகும். 1990ம் வருடம் மஸ்ஜித்துல் ஹுதா எனும் பெயரில் தற்காலிக கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

**சமூக சேவையாளர்கள்**

அசனார் முகைதீன் ஹாஜியார் வவுனியாவில் முதன்முதல் ஹாஜியாராக வவுனியா, முல்லைத் தீவு மாவட்ட குவாசியகவும் சேவையாற்றியுள்ளார்.

நாகூர் அப்துல் ஹமீது முஸ்லிம் விவாகப் பதிவுகாரறாக 20 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். இவரது மறைவுக்குப்பின் மீரா சாஹிபு முகைதீன் பிச்சை சேவையாற்றியுள்ளார்.

மதார் பிச்சை உசன் தம்பி 50' X 20' கட்டிடம் அல் அக்ஸா ம.வி. இற்கு நன்கொடையாக கட்டிக் கொடுத்துள்ளார்.

**மௌலவிப்பட்டம் பெற்றோர்**

| | | |
|---|---|---|
| அல்ஹாஜ் மௌலவி S.M. அப்துல் மஜீத் | - | காஸிமி |
| அல்ஹாஜ் மௌலவி M.S. செயினுலாப்தீன் | - | ஹியாதி |
| அல்ஹாஜ் மௌலவி M.A.C. வகாப்தீன் | - | ஹஸனி |
| அல்ஹாஜ் மௌலவி N.P. ஜுனைத் | - | காஸிமி, மதனி |
| அல்ஹாஜ் மௌலவி M.S. அசீர் | - | ஸஹ்தி |
| அல்ஹாஜ் மௌலவி K. இஸ்ஸதீன் | - | ஸர்கி |
| அல்ஹாஜ் மௌலவி M.M. அஸ்கர்தீன் | - | மனாரி |
| அல்ஹாஜ் மௌலவி S. அப்துல் ஹலீம் | - | ஸர்கி |
| மௌலவி M.M. இக்பால் | - | ஸஹ்தி |
| மௌலவி S. நவாஸ் | - | ஸர்கி |
| மௌலவி A. பினூஸ் | - | மனாரி |
| மௌலவி U. தஸ்லீம் | - | மனாரி |
| மௌலவி U. எக்கீன் | - | தீனி |
| மௌலவி M.T. ரஜ்புதீன் | - | ரஹ்மானி |
| மௌலவி S.M. ஸவாஹிர் | - | காஸிமி |
| மௌலவி S. சத்தார் | - | பத்தாஹி |
| மௌலவி M. முனவ்வர் | - | கபூரி |
| மௌலவி S.M. றிசான் | - | காஸிமி |
| மௌலவி S.M. சுஹைர் | - | இஹ்சானி |
| மௌலவி B. கஸ்ஸாலி | - | நிலாமி |
| மௌலவி A. அரபாத் | - | |
| மௌலவி K. ரபியுதீன் | - | |
| மௌலவியா M. ரஹீமுன்நிசா | - | கள் எளியா |

அரசாங்க சேவையில் உள்ளோர்

1. அல்ஹாஜ் M.R. அக்பர்,
   இளைப்பாறி அதிபர்
2. அல்ஹாஜ் M.S. செயினுலாப்தீன்,
   மௌலவி (இளைப்பாறிய ஆசிரியர்)

3. அல்ஹாஜ் M.I. முத்து முகம்மது, J.P (அதிபர்)
வவுனியா மாவட்ட சமுர்த்தி இணைப்பு அதிகாரி
4. அல்ஹாஜ் S.M. அப்துல் மஜீது
மௌலவி – ஆசிரிய ஆலோசகர்
(வவுனியா மாவட்ட காதி நீதிபதி)
5. ஜனாப் S.M. மன்சூர்
கால்நடை வளர்ப்பு உத்தியோகத்தர்
6. ஜனாப் M.I. அப்துல் சமது
காரியாலய உதவியாளர் - வவுனியா வளாகம்
7. ஜனாப் S.M.M. இக்பால்
அதிபர் - வ/அல் அக்ஸா ம.வி
8. ஜனாப் M.I. வஹாப்
அதிபர் - அ/சாளம்பைபுர மு.வி
9. ஜனாப் S. தாஜு தீன்
ஆசிரியர் - வ/மதினா வித்தியாலயம்
10. ஜனாப் M.I. அபூதாகிர்
ஆசிரியர் - வ/அல் இக்பால் மு.வி
11. ஜனாபா S.M. ஆரிபா
ஆசிரியை – அ/சாளம்பைபுர மு.வி
12. ஜனாப் A தீப்கான்
ஆசிரியர் - வ/அல் அமீன் மு.வி
13. ஜனாப் A.R.M. கன்சூல்
இலிகிதர் வவுனியா நகரசபை
14. ஜனாப். S.M. ஜவாத்
இலிகிதர் வவுனியா கல்வித்திணைக்களம்
15. ஜனாப் M.M. றிபாய்தீன்
உதவி முகாமையாளர் - சமுர்த்திவங்கி
16. திருமதி R. சக்கீனா
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
17. ஜனாப் S.M. அப்துல் காதர்
தாதிப் பயிற்சி நிலையம் - அனுராதபுரம்
18. ஜனாப் S.M. மதார் சாகிபு
சிற்றூழிர் - வவுனியா முஸ்லிம் ம.வி
19. ஜனாப் N. உவைஸ்
சிற்றூழியர் வவுனியா வைத்தியசலை

| | விவசாயக் குளங்கள் | ஏக்கர் |
|---|---|---|
| 1. | இலுப்பைக்குளம் | 150 |
| 2. | சோபாலபுளியங்குளம் | 145 |
| 3. | சாளம்பைக்குளம் | 80 |
| 4. | வோப்பர்புளியங்குளம் | 75 |
| 5. | புதுக்குளம் | 60 |
| 6. | மூன்று முறிப்பு | 80 |
| 7. | கற்குளம் | 20 |
| 8. | விளாத்திக்குளம் | 60 |
| 9. | குருந்தங்குளம் | 12 |
| 10. | வண்ணா புளியங்குளம் | 80 |
| 11. | வேப்பங்குளம் | 30 |
| 12. | நெல்லிக்குளம் | 30 |
| 13. | வீராஞ்சிக்குளம் | 60 |
| 14. | நொச்சிமடுக்குளம் | 50 |
| 15. | கருணாச்சிக்குளம் | 15 |
| 16. | உலுவிந்தன் குளம் | 45 |
| 17. | இலவன்குளம் | 65 |
| 18. | துவரங்குளம் | 65 |
| 19. | பாலைப்பாணிகுளம் | 45 |
| 20. | அதிரியான் சின்னக்குளம் | 35 |
| 21. | கோயிற்கற்குளம் | 30 |
| 22. | கருக்காகுளம் | 50 |
| 23. | தரணிக்குளம் | 30 |
| 24. | ஈச்சங்குளம் | 30 |
| 25. | ஆலங்குளம் | 35 |
| 26. | சின்னப் புளியங்குளம் | 30 |
| 27 | ஒலுமடுக்குளம் | 25 |

# பட்டாணிச்சூர் வரலாறும் வவுனியா மாவட்ட முஸ்லிம்களின் பாரம்பரியங்களும்

இலங்கையின் வட மாகாணத்தைச் சார்ந்துள்ள் மாவட்டங்களில் ஒன்று வன்னி மாவட்டமாகும். இது முல்லை மருதம் நெய்தல் ஆகிய நிலங்களைக் கொண்டது. மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று தேர்தற் தொகுதிகளைக் கொண்ட வன்னி மாவட்டத்தில் வவுனியா தேர்தற் தொகுதிகளைக் கொண்ட வன்னி மாவட்டத்தில் வவுனியா தேர்தற்தொகுதி காடும் காடு சார்ந்த நிலமுமான முல்லையை யும் வயலும் வயல் சார்ந்த நிலமுமான முல்லையையும், வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருதம் என்பதனையும் கொண்டதாகும்.

வவுனியா மாவட்டத்தில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களின் பாரம்பரியங்களும் வரலாறும் ஆய்வு செய்யப்பட வேண்டியதாகும். வுவுனியாவில் பெரும்பான்மையானோர் தமிழ்ச் சமூகமாகும். சிங்கள, முஸ்லிம் சமூகத்தினர் சிறுபாண்மையோராகும். இன்று இலங்கைக்கு அவசியப்படுகின்ற இன நல்லுறவு இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, விட்டக்கொடுப்புகள் என்பவைகட்கு வவுனியா மாவட்டமும் இங்கு வாழும் இனங்களும் ஓர் எடுத்தக்காட்டாகும்.

வுவுனியா மாவட்டத்தில் 18 முஸ்லிம் கிராமங்கள் உள்ளன. இவைகள் சிறிய குக்கிராமங்களாகும். முஸ்லிம் கலாசாரத்தோடு ஒட்டிய கிராமங்களுக்கேயுரித்தான சில அம்சங்களைக் கொண்ட எளிய கிராமங்களாகும்.

இக்கிராமங்கள் அமைந்துள்ளஅமைவிடத்தை அவதானித்தால் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் எவ்வளவு அன்யோன்யமாக வாழ்ந்துள்ளார்கள், வாழ்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ளலாம். நுகருக்கு அண்மையில் உள்ளது பட்டானிச்சூர் எனம் முஸ்லிம் கிராமமாகும். அதற்கு அடுத்ததாக உள்ளது நெளுங்குளம் எனும் தமிழ்க் கிராமமாகும். வேப்பங்குளம் என்பது தமிழ் முஸ்லிம் இருவரும் கலந்த கிராமமாகும். அதற்கு அரகில் பட்டகாடு முஸ்லிம் கிராமமாகும். ராசேந்திரன் குளம் தமிழ்க் கிராமமாகும். அதற்கடுத்த சூடு வெந்த புலவு முஸ்லிம் கிராமமாகும். பாவற்குளம் கிராமத்தின் முற்பகுதிகள் தமிழ்பிரதேசங்கள். அடுத்த பகுதிய முஸ்லிம் பகுதிகலாகும். நேரிய குயம் தமிழ்கிராமம் மாங்குளம் முஸ்லிம் கிராமமாகும். இலுப்பைக்குளம் தமிழ்க் கிராமம் சிப்பிக்குளம் முஸ்லிம் பகுதியாகும். சேட்டிக்குளம் தமிழ்கிராமம் ஆண்டியாபுளியங்குளம் முஸ்லிம் கிராமமாகும். பம்பைமடு தமிழ் கிராமம், சாளம்பைக்குளம் முஸ்லிம் கிராமங்கள் அருகருகாக அமைந்தள்ளதைக் காணலாம்.



பட்டாணிச்சூர் மத்ரஸா.

இந்தக் கிராமங்களில் எந்த இரு கிராமத்திற்கிடையிலும் கிராமச் சண்டைகளோ, கோஷ்டி மோதல்களோ, மதச் சண்டைகளோ ஏற்பட்ட வரலாறே கிடையாது. இந்தளவுக்க இங்கு இனங்களுக்கிடையே இறுக்கமான நல்லுறவுகள் ஆரம்பகாலத்தில் இரந்தே இருந்து வந்தள்ளன. இவை ஆரம்பகாலத்தில் இருந்தே இப்படித்தான் நடக்கவேண்டுமென திட்டமிட்டு எழுதப்பட்ட யாப்பல்ல. இது தொன்று தொட்டு இக்கிராமங்களிலே ஊறிப்போனவைகள். இக்கிராமங் களுக்கேயுரிய மண்ணோடு ஒட்டிப் பிறந்த சில அம்சங்களாகும்.

தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களின் பெயரை எழுத்துப்பிசகாமல் உச்சரிக்கும் பாங்கும் அவர்களை உரிமையோடு "காக்கா" என்றும் "தம்பி" என்றும் அழைப்பதும் இக்கிராமங்களுக்கே உரித்தான பாணியாகும். ஆதெபோல "அண்ணா" என தமிழ்மக்களை முஸ்லிம்கள் அழைப்பதும் ஒர தாய் பெற்ற பிள்ளைகள் போல பழகுவதும் வவுனியா மாவட்ட முஸ்லிம் கிராமங்களுக்குரிய சிறப்பம்சமாகும்.

தமிழ் முஸ்லிம் மக்கள் தங்கள் குடும்பப் பிரச்சினைகளை பற்றிக் கதைத்துக்கொவதும், கொடுக்கல் வாங்கள்களை நம்பிக்கையோடு மேற்கொள்வதும் தொழில்களில் உதவுதல், நன்மை தீமைகளில் கலந்து கொள்ளுதல் என்பவைகளை இக்கிராமங்களில் தாராளமாகக் காணலாம். துமிழ் திருமணவீடுகளில் முஸ்லிம்களும் முஸ்லிம்களின் திருமண வீடுகளில் தமிழ் மக்களும் உரிமையோடு பங்கு பற்றி தமது வீட்டுச் சடங்குபொல நடாத்துகின்ற சந்தோஷ நிலைமைகளை இக்கிராமங்களில் காணலாம்.

நேளுங்குளம், பம்பைமடு போன்ற கிராமங்கிளல் இருந்து நகருக்கு வருபவர்கள் பட்டாணிச்சூரினூடாகச் செல்லும் போது முஸ்லிம் வீடுகளில் தேநீர் அருந்திச் செல்வது இன் நல்லுறவுக்குக் கட்டியம் கூறுவதாகும்.

கிராம மக்களது நடத்தைகளையும் அவர்களோடு தொடர்பான பொருட்கள் பற்றியும் 1998ம் ஆண்டு கவீச்சரம் நூலில் வெளிவந்த எனது கவிதை வரிகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

"செயின்காக்கா வீட்டினுடைய செம்மண் நிறக் குந்தி நாகலிங்கத்தார் வந்து நலம்கேட்டுக் கதைக்கையிலே கவலைகளே தெரியாமற் கலகலப்பாய்ச் சிரிப்பார்கள். கடுகளவும் உள்ளத்திலே கபடங்களும் இருக்காது. பட்டாணிச்சூர் விதை நெல்லு கம்பை மடுவிற் கையிறாகி பட்டணத்துத் தந்தைகளில் பச்சரிசியாய் விலை போகும். விதை நெல்லுக் காசு கேட்டு விவாதங்களே காணாத வரலாற்றுப் புனிதர்களேயெம் பழங்கிராம மனிதர்கள்.

மாலை நேரங்களில் மடிநிறைந்த பாலுடனே
சாலை நெடுகினையம் தமதாக்கி வருகின்ற
கறவைக் கூட்டங்களின் கத்தும் சத்தங்களில்
கலவைகளே மறந்து போன கனிவான நாட்கள்
சுரைக்காய் குடவைகளை, தூண்டிற் கம்புகளை
குறக்கன் கதிர்களினை குறிசுடும் கோள்களினை
குயிற்றுக் கட்டில்களை கலப்புகளை, கதியால்களை
குண்முன்னே நினைக்கையிலே கண்ணீரே நிறைகிறது.

மேற்குறிப்பிட்டவாறு வவுனியாவின் முஸ்லிம் கிராம மக்கள் ஏனைய இனங்களோடு புரிந்துணர்வோடு நடந்த பல விடயங்கள் இருந்தாலும் இவைக்கெல்லாம் சிகரமாக அமைந்த சம்பவம் ஒன்றுண்டு. குறுமன்காடு காளிபோயில் பாதையோரமாக அமைக்கப்பட்டு விட்டது. அது விஸ்தரிப்பதற்கான நிலமை இல்லை. அருகில் பட்டானிச்சூர் முஸ்லிம்களின் மையவாடி கோயில் நிருவாகத்தினர் நிலம் தொடர்பாக கதைத்தபோது கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான ஒரு பகுதி நிலத்தை முஸ்லிம்கள் கோயிலுக்கு இலவசமாக வழங்கியதால் இன்று மிகப் பெரிய தேவஸ்தானமாக அது மாறியுள்ளது. இதற்குக் காரணமே முஸ்லிம்களின் இன உறவு தொடர்பான நடவடிக்கைகளே என்றால் மிகையாகாது.

இங்குள்ள முஸ்லிம் கிராமங்கள் ஒவ்வொன்றும் சிறிய குளத்தையும் விவசாயத்தையும் மையமாகக் கொண்டவையாகும். குளம்தான் பிரதான சொத்து. குளக்கட்டு தான் பிரதான பாதை. குளங்களைக் கொண்டே ஊரக்கும் பெயர்கள் இருக்கும். உதாரணம் சாளம்பைக்குளம், புளியங்குளம், மாங்குளம், மாரிமழை ஆரம்பித்தால்

இக்கிராமங்களிலுள்ள மக்களின் முகங்கள் பிரகாசிக்கும். இவர்களது எதிர்பார்ப்புக்கு ஏற்ப வயல்களும் பச்சைப் பசேல் எனக் காட்சியளிக்கும். விவசாயம் தொடர்பாக தொன்றுதொட்டுப் பயன்படுத்தும் சொற்கள் முக்கியமானவையாகும். வுக்கடை, உமை அலைவைப்பது, பேரளை, சிற்றளை, பலகடிப்பு, தப்புக்கொட்டுவது, தாக்கத்தி, மாவக்க, உப்பட்டி, கதிர்கட்டு, மூட்டுப்புட்டி, கட்டக்கத்து, வேலகாரன்கம்பு, பொலிக்கொடி, பொலி, குல்லம், முக்காலி, போர்க்கோள்போடுதல், பரத்த, கதியாள் போன்ற சொற்கள் இன்றும் பயன்படுத்தப்படுகிறது.

விவசாய காலங்களில் களைப்பைப் போக்குவதற்காக ஏதேனும் விவசாயப் பாடல்கள் நாட்டார் பாடல்கள் பாடப்பட்டனவா என ஆராய்ந்தால் குறிப்பாக எழுதக் கூடிய பாடல்கள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் உழவடிக்கும் போது மாடுகளின் அசைவுக்கு ஏற்ப "ஓஹோ ஹோ" என குறல கொடுத்து நடப்பது இன்றும் வழக்கத்தில் உள்ளது.

உழவு இயந்திரங்களின் வருகைக்கு முன்னர் மாடுகளைக் கட்டி சூடடிக்கப்படும். சூட்டுக்களத்தின் மையத்தில் உறுதியான கப்பு நாட்டப்பட்டு அதில் மாடுகள் வரிசையாகக் கட்டப்பட்டு வறைக்கப்படும். மாடுகள் சுற்றிச் சுற்றி வரும்போது பின்வரும் பாடலை பாடுவதாக வயதான விவசாயிகள் கூறுவார்கள்.

"வெள்ள வைத்திலையாம் கைப்பூரமாம்
விரிந்த பாக்குடன் பன்னீரும்
அழியாற் சந்தனம் மிகத் தெளித்து
அழகாய் களந்தனில் வாரிகாணவே
பொலியே பொலியே பொலியம்மா"

மேற்குறித்த அடிகளில் வரும் வெற்றிலை, பாக்கு, பன்னீர், சந்தனம் போன்ற பொருட்களைக் கவனிக்கும் இடத்தில் இது தமிழ் பகுதிகளில் இருந்து கொண்டுவரப் பட்டிருக்கலாம் என உணர முடிகிறது. உழவு இயந்திரங்கள் அறிமுகமாகிய பின் மாடுகளால் சூடடிக்கும் நிலை அருகிப்போய்விட்டது.

வவுனியா மாவட்ட முஸ்லிம் கிராமங்களில் முக்கிய இடத்தை மந்தை வளர்ப்பு பெறுகின்றது. அனேகமாக எல்லா வீடுகளிலும் மாட்டுப் பட்டிகள் இருக்கும். பால் தேவைக்கும், இறைச்சிக்கும், விவசாயத் தேவைக்கும் இவை பயன்படுகிறது.

வவுனியா முஸ்லிம்களின் பாரம்பரியங்களில் ஒன்று கூட்டான செயற்பாடுகளாகும். ஒரு குடும்பத்தின் பிரதான வேலையை மற்றவர் களும் சேர்ந்து முடித்துக் கொடுத்தல் ஆகும். விவசாய அறுவடையின் போது கூட்டாக அறுவடை செய்வது பரத்த எனப்படும். திருமண வீடுகளில் முன்னர் பெண்களின் குரவை ஒலிகளைக் கேட்கலாம். தற்பொழுது சமய வளர்ச்சி காரணமாக அது அருகிப்போய்விட்டது.

இங்குள்ள கிராமங்களில் முக்கிய பாரம்பரியாக இருந்தது கோலாட்டலாகும். திருமண வீடுகள், பெருநாற் தினங்கள், விஷேட தினங்கள் குறிப்பாக நிலாக் காலங்களில் கோலாட்டம் இடம்பெறும். வுவுனியா மாவட்டத்துக்கு வருகை தரும் அரசியல்வாதிகள், முக்கியஸ்தர்கள் வரவேற்கப்படும் போது முஸ்லிம்களின் நிகழ்ச்சியாக இது இடம்பெறும். ஒரு அடி நீளமான இரு தடிகளை ஒவ்வொருவரும் பயன்படுத்தி குழுவாக இந் நிகழ்ச்சியைச் செய்வார்கள். மிக நிதானமாகவும் வேகமாகவம் இதில் செயற்படுவார்கள்.

பெருநாள் போன்ற விஷேட தினங்களில் கிளித்தட்டு, கரப்பந்தாட்டம் என்பவை முக்கிய நிகழ்ச்சியாக இடம்பெறும்.

இனி வவுனியா முஸ்லிம்களின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் மன்னார் மாவட்டத்தோடு வரலாற்றுத் தொடர்பு இருப்பதை காண முடியும். மன்னாரிலுள்ள பெரிய மடு என்ற பகுதியில் இருந்து இங்கு வந்ததாக அறிய முடிகிறது. வவுனியாவில் முதலாவது முஸ்லிம் பள்ளிவாசல் சூடுவெந்தபுலவு பழைய குடிமனைப் பள்ளிவாசலாகும். இங்கு தான் ஆரம்பத்தில் ஜும்மாக் கிரியைகள் நிறைவேற்றப்பட்டது. ஏனைய கிராமங்களில் இருந்து வண்டில்கள் மூலம் வெள்ளிக் கிழமை தொழுகைக்காக இங்கு வருவார்கள். சூடுவெந்தபுலவில் இருந்து ஒற்றையடிப் பாதை வவுனியா நகருக்கு இருந்தது.

சூடுவெந்தபுலவில் ஆசூரா தினத்தில் பாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். நேர்ச்சைகள், சமயக்கிரியைகள் இடம்பெற்று திருவிழாக்கோலமாக இருக்கும். ஆனால் பின்னர் முஸ்லிம் கிராமங்களில் ஏற்பட்ட சமய விழிப்புணர்ச்சி காரணமாக இவ்வகையான நூதன அநுஷ்டானங்கள் படிப்படியாக இல்லாமல் போய்விட்டது.

ஆய்வின்படி சூடுவெந்தபுலவே முதலாவது கிராமமாகும். வெளிநாட் டவரது ஆட்சிக் காலத்தில் அதிகாரிகள் இப்பகுதிக்கு வந்தபோது அறுவடை செய்து எங்கும் சூடுகள் வைக்கப்பட்டிருந்தது. ஒரு சூடு வெந்து போனதால் அதிகாரிகள் இப் பகுதியை சூடுவெந்தபுலவு எனக் குறிப்பிட்டதால் இப் பெயர் வந்ததாகக் காரணம் கூறப்படுகிறது.

இதே போல இக்கிராமங்களுக்கு முஸ்லிம் வணிகக் கூட்டத்தினர் வருவார்கள். இந்தியாவின் 'பட்டான்" பிரதேசத்தைச் சேர்ந்த பட்டாணிகள் எனும் முஸ்லிம் வர்த்தகர்கள் வியாபாரத்திற்கு வந்தபோது அவர்களில் ஒரு பெண் இறந்ததாகவும் அப்பெண் அடக்கப்பட்ட இடத்திற்கு பட்டாணிச்சி புளியங்குளம் எனப் பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

1881 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின் படி வவுனியா மாவட்டத்தில் பின்வருமாறு அமைகிறது.

| | |
|---|---|
| தமிழர் | 13164 |
| சிங்களவர் | 1157 |
| முஸ்லிம்கள் | 1133 |

இதன் படி நூறு வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றுச் சான்றுகள் வவுனியா முஸ்லிகளுக்கு உண்டு.

வவுனியா மாவட்டத்தில் உள்ள அத்தனை முஸ்லிம் கிராமங்களும் விவசாயத்தைப் பின்புலமாகக் கொண்ட கிராமங்களாகும். குளம் தான் இங்கு பிரதான பொருளாதாரக் காரணி. வான்மழை நம்பிய விவசாயம் தான் இங்கு முக்கிய தொழில். கிராமிய சூழலையம் சமய விழுமியங்களையும் கொண்ட எழிமையான வாழ்க்கை தான்

இக் கிராமங்களில் காணக்கூடிய பிரதான அம்சங்கள்.


ஆரம்ப அறிவைப் பெற்றுக் கொள்ள ஒரு பாடசாலை, சமயக் கிரியைக்கான ஒரு பள்ளிவாசல் இவைகளே இங்குள்ள பிரதான கட்டடங்கள். அரசியல்வாதிகள் ஊடாக கிராமங்களை முன்னேற்றிக் கொள்வதற்கும் பக்கபலமான அரசியல் வாய்ப்புக்கள் கிடைக்க வில்லை. ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்வதும் முயற் கொம்பாகவே இருந்தது.

வன்னி மாவட்டம் உருவாகி விகிதாசாரத் தேர்தல் முறை அறிமுகமாகிய பின்னரே வன்னி மாவட்டத்திற்கான முதலாவது முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைப் பெற முடிந்தது. வன்னி மாவட்டத்திற்கான முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதி அல்ஹாஜ் S.S.M. அபூபக்கர் அவர்களாகும்.

இதன் பின்னர் நடந்த தேர்தல்களில் தொடர்ந்தும் முஸ்லிம் பிரதிநிதித்துவங்கள் பெறப்பட்டன. அதனால் அரசியல் விழிப்புணர்ச்சியும், கிராமங்களின் முன்னேற்றமும் ஏற்படத் தொடங்கியது. அபூபக்கர், மசூர் ஆகியோர் அமைச்சர்களாக இருந்து தமது பங்களிப்புகளை மேற்கொண்டனர். சகல கிராமங்களிலும் கல்வி, சமய, கலாசார மறுமலர்ச்சிகள் வேகமாக ஏற்பட்டன.

இந்த வகையில் வன்னி புனர்வாழ்வு அமைச்சராக சேவையாற்றும் அல்ஹாஜ் ரிஷாட் அவர்களது அயராத முயற்சியால் இவ்வருட தேசிய மீலாத் விழா வன்னி மாவட்டத்தில் நடைபெற ஏற்பாடாகி யிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தொடர்ந்தும் வவுனியா மாவட்ட முஸ்லிம் கிராமங்கள் கல்வி, சமய, கலாசார, அரசியல், பொருளாதார விடயங்களில் முன்னேற்றம் காணக்கூடிய வாய்ப்பு களைப் பெறுவதற்கு மென்மேலும் இறைவன் துணைசெய்வானாக.

இக் கிராமத்திலிருந்து காலப்போக்கில் பட்டகாடு, வேப்பங்குளம் ஆகிய கிராமங்களில் மக்கள் குடியேறியுள்ளனர். பட்டகாட்டுக் கிராமத்தில் தற்போது ஜும்மாப் பள்ளி கட்டப்பட்டு ஜும்மா நடைபெறுகின்றது.



பட்டகாடு ஜும்ஆப்பள்ளி.

இக் கிராமத்தில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று வைத்தியத் துறையில் தேர்ச்சி பெற்றோர் விபரம்

| | |
|---|---|
| DR. மீராப் பிள்ளை | - (காலம் சென்ற) |
| DR. M.S. முஹைதீன் | - VOG |
| DR. K. ஜெலீஸ் | - MBBS |
| DR. A.G, ஜவாஹிர் | - MBBS |
| DR. M. அனஸ் | - MBBS |
| DR. M.J. ஜெஸ்லி | - DENTAL |

தொகுப்பு
மேளலவி S. அப்துல் சமது
(DIP – MED)

# ஆண்டியாபுளியங்குளம்
# வாழவைத்தகுளம் வரலாறு
# புதுக்குளம்

ஆண்டியா புளியங்குளத்திலிருந்து
பிரிந்து சென்று வாழவைத்தகுளம்,
புதுக்குளம் ஆகிய
தொடர்கிராமங்களின் வரலாறு.
இவர்களின் தாய்க்கிராமம்
ஆண்டியாபுளியங்குளம் ஆகும்.

தொகுப்பு

S.M. சியாத் மௌலவி
ஆசிரியர்

## ஆண்டியாபுளியங்குளம் கிராமத்தின் தொடக்க வரலாறு

இக் கிராமமானது சுமார் 3 நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த கிராம மாகும். இது சுமார் 4 Km. புரப்பளவு கொண்ட ஒரு கிராமமாகும். மதவச்சி மன்னார் பிரதான வீதிக்கும், வவுனியா மன்னார் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட முக்கோண அமைப்புக்குள் அமைந்து காணப் படுகின்ற ஒரு கிராமம் என அடையாளப்படுத்திக் கொள்ள முடியும்.

வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபை பிரிவுக்குள் அடங்குகின்ற 207 குடும்பங்களைக் கொண்ட இரு சிறு குக்கிராமங்களான வாழவைத்தகுளம், புதுக்குளம் ஆகியவைகளை உள்ளடக்கியதான ஒரு பெரிய கிராமமாகவும் இக் கிராமம் திகழ்கின்றது.

இங்கு குறிப்பிடப்பட்ட பிரதான கிராமமான ஆண்டியாபுளியங்குளம் கிராமத்திற்கும், குக்கிராமங்கள் என்று குறிப்பிடப்பட்ட வாழவைத்த குளம், புதுக்குளம் ஆகிய கிராமங்களுக்கும் என்று தனித்தனியான பெரிய குளங்கள் காணப்படுகின்றன என்பதனை அக்கிராமங்கிளனது பெயரின் இறுதியில் "குளம்" என்ற சொல் உணர்த்தி நிற்கின்றது.`.


இங்கு வாழுகின்ற மக்களினது பிரதான ஜீவனோபாயத் தொழிலாக அமைவது விவசாயமாகும். இக் கிராமத்தில் வாழையடி வாழையாக வசித்து வருகின்ற மக்களது ஆரம்ப குடிகளை எடுத்து நோக்கினால், ஆரம்பத்தில் இங்கு வாழ்ந்த மக்களாக மன்னார், எருக்கலம்பிட்டி, சாளம்பைக்குளம், ரசூல்புதுவெளி, கண்டி, கட்டுகஸ்தொட்டை போன்ற பகுதிகளிலிருந்த வியாபார நோக்கமாக வந்து திருமண பந்தத்தில் இணைந்து குடிபதியாக இருந்திருக்கிறார்கள் என்பதை வயது முதிர்ந்தவர்களிடம் அறிந்து கொள்ளக் கூடிய விடயமாக உள்ளது.`.

மேலும் பூர்வீகக் காலத்தில் இம் 3 கிராமத்திற்குமாக பொதுவான ஒரு ஜும்மாப் பள்ளியே காணப்பட்டது. இது 1954 ஆம் ஆண்டு கொழும்பைச் சேர்ந்த ஆ.னு.ர். அப்துல் கபூர் (MP) அவர்களால் கட்டிட அமைப்பில் அமைக்கப்பட்டு தொழுதுவந்தனர்.

பிற்பட்ட காலங்களில் இக்கிராமத்திற்குள் ஏற்பட்ட சில முரண்பாடுகள் காரணமாக ஒவ்வொரு ஊரக்கும் என்று தனியான பள்ளிவாயில் அமைக்கப்பட்டு தமது நாளாந்த கடமைகளை இன்று வரையும் நிறைவேற்றி வருகிறார்கள்.

ஏற்கனவே இருந்த பொதுவான பள்ளிவாயில் 1990 ஆம் ஆண்டு நிகழ்ந்த புலம்பெயர்வு காரணமாக கடுமையாக சேதமுற்று பாவனைக்கு உதவாத முறையில் காணப்படுகின்றது. இப் பள்ளியின் அமைவிடமானது ஆண்டியாபுளியங்குளக் கிராமத்திற்கும், வாழவைத்தகுளம் கிராமத்திற்கும் இடையில் காணப்படுகின்ற எல்லைப்பகுதியின் மத்தியில் இன்றும் சிதைவடைந்த நிலையில் காட்சியளித்துக் கொண்டிருப்பதை காணலாம்.

1994ம் ஆண்டு மேற்கொண்ட மீழ்குடியேற்றத்தின் பின்னர் பலர் தமது சொந்த அடங்களுக்கு வந்து பார்ந்த போது அணைத்துமே சேதமுற்ற நிலையில் காணப்பட்டது. எனவே அவைகளை புனர்நிர்மானம் செய்யும் வேலையின் முதற்கட்டடாக அவ்வக் கிராமங்களில் பல தனவந்தர்களினதும், ஊர்மக்களினதும்



ஆண்டியாபுளியங்குளம் ஜும்ஆபள்ளி.

உதவியோடு தற்காலிகமாகத் தொழுவதற்கு என்று தனித்தனியாக ஒவ்வொரு ஊரினையும் பிரதிபலிக்கும் முகமாக ஜும்ஆப்பள்ளிகளை அமைத்துக்கொண்டார்கள்.

இதில் வாழவைத்தகுளக் கிராமமக்கள் தமது ஊருக்கென்று தனித்தனியான ஒரு ஜும்ஆப்பள்ளியொன்றை நிறந்தரமாகக் கட்டிக்கொள்ள முயற்சித்தபோது அதனை கொழும்பிலுள்ள ஜமிய்யதுல் சபாப் (Jamiyyathul Sabab) நிறுவனத்தின் அனுசரனையில் சுமார் 8 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 2004ம் ஆண்டு திறந்து வைக்கப்ட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆண்டியாபுளியங்குளம் கிராமக்களும் ஒரு நிரந்தரமான பள்ளியொன்றை நிர்மானிக்கும் முயற்சிகள் மேற்கொண்ட போது பல முயற்சிகளின் பின்னர் கடந்த ஆண்டு இறுதியில் மேசிலங்கா நிறுவனத்தின் அனுசரனையில் சுமார் 7 ½ இலட்சம் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்டு இவ்ாண்டு 4 ஆம் மாதம் 13 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

ஆதே போன்று புதுக்குளம் கிராம மக்கள் தமது ஊரில் முன்பு இருந்த அதே பள்ளியேயே மீண்டும் புனர்நிர்மாணம் செய்து அதிலே தமது கடமைகளைச் செய்து வருகின்றார்கள் என்பதும் இங்கு தெளிவான உண்மையாகும்.

மேலும் பொதுவாக அல்குர்ஆன் கல்வியிலும் மாணவர்கள் தத்தமது கிராமங்களில் உள்ள ஜும்மாப் பள்ளியோடு இணைந்து காணப்படுகின்ற குர்ஆன் மத்ரசாக்களிலேயே பயின்றுவருகின்றார்கள். அதுமாத்திரமன்றி 3 கிராமத்திற்கும் பொதுவாக அரசினர் கலவன் பாடசாலையொன்று 1925 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு அதன் முதல் அதிபராக இ. பாவேலுப்பிள்ளை என்பவர் அதிபராகக் கடமையாற்றியிருக்கின்றார். ஆதன் பின்னர் 1990 இல் புலம்பெயர்வு ஏற்பட்டுள்ளது. அதன் விளைவாக முற்றாகச் சேதடைந்தது. இப் பாடசாலையானது S.S.C. தரமுடைய ஒரு பாடசாலையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதே வேளை 1994

ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்பு அம்மக்களின் அயராத முயற்சியின் பயனாக UNFCR அமைப்பின் மூலம் 1997 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 22 ஆம் திகதி முன்னர் இருந்த இடத்தை ஆண்டியாபுளியங்குளம் ஜும்மாப்பள்ளிக்கு ஒதுக்கப்பட்டதால் இப்புதிய பாடசாலைக்கான காணி தொண்டுதொட்டு 3 கிராமத்திற்கும் பொதுவாக பயன்படுத்தப்பட்டு வந்த மையவாடியினை பயன்படுத்தி அதிலே நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இது 2 பிரதான கட்டிடங்களையும் ஒரு விஞ்ஞான கூடத்தினையும் கொண்டதாக இப்போது காட்சிதருகிறது. ஆதன் தற்போதைய அதிபராக திரு. S.M. ஜாபிர் அவர்கள் கடமையாற்றுகிரார்கள். சுமார் 275 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். அத்தோடு சுமார் நீண்ட காலங்களுக்குப் பின்னர் மேற்கொண்ட அயராத முயற்சியின் பயனாக 1 தொடக்கம் 9 வரை இருந்த இப் பாடசாலையானது 1 தொடக்கம் 11 வரை தரப்படுத்தப்பட்டு 2004 ஆம் ஆண்டு முதல் தடவையாக க.பொ.த. சா.த. பரீட்சையில் 6 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினார்கள். அவர்களுள் ஒரு மாணவி எல்லாப் பாடங்களிலும் சித்தி பெற்று ஏஎல் தரத்திற்குத் தகுதி பெற்றமையானது பாடசாலைக்குப் பெறுமை ஈட்டித் தந்த செயலாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இக்கிராமங்களது கல்வித்தரத்தைப் பொறுத்தவரையில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகின்றது. இக் கிராமமானது இதுவரைக் காலமும் ஈண்டெடுத்த கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் பின்வருமாறு பட்டியல் படுத்தலாம்.

1. மௌலவி எம்.எம். சிஹாப்தீன் - ஓய்வு பெற்ற அரபு ஆசிரியர்
2. ஜனாப் எச்.எம். ஹம்ஸா - தபால் அதிபர்
3. ஜனாப் கே.எம்.அரப்தீன் - GSO
4. ஜனாப் சீ.எம்.எஸ். ஆப்துல்லா – GSO
5. ஜனாப் எஸ்.எம். ஜாபிர் - அதிபர் ஆண்டியாபுளியங்குளம் மு.வி
6. எஸ்.எம். சேகுராஜித் - உப அதிபர் - அல்ஹாமியா- மாங்குளம் மு.வி.
7. மௌலவி எஸ.எம்.சியாத் - B.A. Hon (Cey) M.A ஆசிரியர் - ஆண்டியாபுளியங்குளம் மு.வி.
8. ஜனாப் எச்.எம்.நஜீம் - ஆசிரியர் சின்னசிப்பிக்குளம்

9. ஜனாபா ஆர். றசூலியா – ஆசிரியை
ஆண்டியாபுளியங்குளம் மு.வி.
10. ஜனாப் கே.எம். அஜ்மல் - சமூர்த்தி உத்தியோகத்தர்
11. ஜனாப் ஏ.எம். அப்துல் அஸீஸ் -
ஓய்வு பெற்ற வங்கிப் பாதுகாவலன்
12. திருமதி கே. நஸீமா - ஆசிரியை முஸ்லிம் வித்தியாலயம்.
13. ஜனாப் ஏ.டப்லியு முபீன் -
கல்வியியற் கல்லூரி – அட்டாளைச்சேனை
14. ஜனாப் எஸ்எம். ஹஸீர் - வவுனியா
15. மௌலவி எம்.எஸ். மிஸ்பாஹ்
16. மௌலவி எஸ்எம். முனாஸித் (செய்லானி)
17. மௌலவி எஸ் தஸீர்

மேலும் சிலர் இப்பொழுது பல மத்ரசாக்களில் கல்வி கற்று வருகிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சமூக சேவையாளர்கள் என்ற வரிசையில் வவுனியா முஸ்லிம் விவாகப் பதிவாளராக மர்ஹூம் யூ.எம். முஸ்தபா என்பவர் கடமைபுரிந்தார். இவரின் பின்னர் இவரது மகன் எம்.எம். சாஜிதீன் என்பவர் தற்போது இக்கடமையினைச் செய்து வருகிறார் எனபதும் குறிப்பிடத்தக்கது.

தொழில்

இம்மக்களினது பிரதான தொழில் வேளான்மை விவசாயம் ஆகும். சிலபோது குறிப்பிட்ட காலத்தில் மிளகாய் செய்கையை மேற்கொள்வதுமாகும். கால்நடை வளர்ப்பபு குறிப்பிடத்தக்கது.

1994ம் ஆண்டு ஒரு புதிய குடியெற்றம் ஒன்றும் நிகழ்ந்துள்ளது. அதுதான்செட்டிக்குளம் பிரதேசசபைக்குட்பட்ட முதலியார்குளம் கிராமமாகும். இது 1990ம் ஆண்டு ஏற்பட்ட புலம்பெயர்வின்பின்பு மீண்டும் 1994ம் ஈண்டு மீளக்குடியமரந்த போது அவர்கள் அணைவருமே செட்டிக்குளம் பொலீஸ் நிலையத்திற்கு அருகாமையில் முகாம்களில் தங்கிவாழ்ந்தனர். அப்போது முதலியார்குளம் வீட்டுத்திட்டம் 275 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. இதில் தமிழ் மக்களுக்கும் வீடுகள் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட வீடுகளில்

சிலர் அதனைப் பெற்றுக்கொள்ள முன்வரவில்லை. அவர்கள் தமது சொந்த ஊருக்குப் போவதையே நோக்காகக் கொண்டனர். எனவே முஸ்லிம்களினல் சுமார் 40 பேர் மட்டுமே வீட்டுத்திட்டத்தில் குடியமர்ந் தார்கள். அவர்கள் ஆண்டியாபுளியங்குளக் கிராமத்தைச் சேர்ந்தவர் களும், முல்லைத்தீவுப் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் குடியேரிய போது தொழுவதற்கு பள்ளிவாயல் இல்லாத நிலையிருந்தது. எனவே ஆரம்பத்தில் ராவுத்தர் என்பவரது காணியிலேயே தற்காலிகமாக த் தொழுமிடம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் ஜனாப் C.M.S. சஹாப்தீன் (ஹிஸாபு) என்பவர் நன்கொடையாக வழங்கிய காணியில் சுமார் 11 இலட்சம் ரூபா செலவில் I.I.R.O (International Islamic Relief Organization) என்ற நிறுவனத்தின் அனுசரனையால் 2001.02.01 நிரந்தரக் கட்டிடம் ஒன்று நிறுவப்பட்டு இப்போது மக்களின் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது எ்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. அப்போது பள்ளிவாயில் இமாமாக M.M. சஹாப்தீன் எனபவரே கடமையாற்றினர்.



ஆண்டியாபுளியங்குளம் மு.வி.

மேலும், ஆண்டியாபுளியங்குளம் கிராமத்தின் பூர்வீகத்தைப் பற்றி தீ லூயிஸ் (The menual of Vanni) என்ற நூலில் 1881ஆம் ஆண்டு "இக்கிராமமானது ஒரு பெரிய கிராமமாகும். அப்போது 76 குடும்பங்கள் இருந்தன என்றும் 1891ல் இக்குடும்பம் 26க்கக் குறைந்து வந்தது. இவர்கள் ஒரு தனித்துவமான சமூகமாக வாழ்ந்தனர். இங்கு இரண்டு கூடாரங்கள் காணப்பட்டது என்றும் குறிப்பிடுகின்றார். ஏனவே இவரின் கூற்றை வைத்து நோக்கும் கோது இக்கிராமமானது சுமார் 3 நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய ஒரு கிராமம் என்பது புலனாகின்றது."

(The Manual of the Vanni District ) (Vavuniya and Mullaitivu) of the Nothern Province, Ceylon Govt. Print 1895 Page No. 51)

முதலியாகுளம் குடியேற்றத்தின் வரலாறு :

வுவனியா மாவட்த்திலுள்ள செட்டி களம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு குடியேற்ற கிராமமாகும். இங்கு 1995ம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் தமிழ் மக்களும் முஸ்லிமகளும் சேர்ந்து வாழ்கின்றனர்.

இங்கு சுமார் 80 குடும்பங்களுக்கு மேல் முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

ஜும்ஆப்பள்ளி ஒன்று கட்டப்பட்டு ஜும்ஆ நடைபெறுகின்றது. இங்குள்ள மாணவர்கள் செட்டிக்குளம் தமிழ் மகா வித்தியாலளத்தில் கற்கின்றனர். குர்ஆன் மதுரஸா பாலர் பாடசாழல முதலியன இயங்குகின்றன.

முதலியாகுளம் ஜும்ஆபள்ளி.

# சின்னச்சிப்பிக்குளம் கிராமமும் அதன் பின்னணியும்

எழில் மிகுந்த இந்தக்கிராமம் வவுனியா மாவட்டத்தில் இருக்கும் ஒரு பழமையான கிராமங்களுள் ஒன்றாகும். வயலும், வயல்சார்ந்த மருதநிலத்திற்கரிய சிறப்புக்களைக் கொண்டிருக்கும். சுமார் 160 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த நூறு வீத முஸ்லிம்களைக் கொண்ட ஒரு கிராமம்.

வவுனியா நகரத்தில் சுமார் 30 கி.மீ. தொலைவில் மதவச்சி - மன்னார் வீதியில் கஜசிங்க புர சந்தியில் இருந்து தந்திரி மலைவீதியில் இக்கிராமம் வரை பரந்திருக்கின்றது. வடக்குத்தெற்காக நறுவிலி என்ற சிற்றருவி ஓடி முகத்தார் குளம் என்ற பெருநீர்ப்பானக்குளத்தில் சங்கமமாகும். இவ்வருவி இக்கிராமத்திற்கு அழகு சேர்க்கின்றது.

வடக்கே முகத்தார்குளம் என்னும் இடத்தையும் தெற்கே குணவாய் என்ற தமிழர் பிரதேசத்தையும், கிழக்கே நறுவலி ஆற்றையும், மேற்கே அருவி ஆற்றையும் எல்லைகளாகக் கொண்டு இக்கிராமம் காணப்படுகிறது.

சுமார் 400 முஸ்லிம் குடும்பங்கள் வாழுகின்ற இக்கிராமத்தின் ஆரம்ப காலம் கி.பி. 1860 க்குப் பிற்பட்ட காலமாகும். ஆதிக்குடிகள் அயல் கிராமமான ஆனைவிழுந்தான் கிராமத்தைப் போன்றே மன்னார் - முசலிப்பகுதயில் இருந்தே குடியேறி இருக்கிறார்கள். யானை பிடிக்கும் தொழிலை மையமாகக் கொண்டே இக்குடியேற்றம் நிகழ்ந்திருக்கின்றது.

மன்னார் - முசலிப்பகுதியில் இருந்து இருவர் வந்து ஒருவர் ஆனைவிழுந்தான் கிராமத்திலும் மற்றவர் சின்னச் சிப்பிக்குளம் கிராமத்திலும் தங்கள் குடிமனைகளை அமைத்து அங்கிருந்த நீர் குட்டைகளை குளங்களாக அமைத்து குளத்துக்கு பின்னால் உள்ள நிலப்பரப்பை வயல்களாகத் திருத்தி ஒரு விவசாயக் குடியிருப்பை அமைத்துக் கொண்டார்கள்.

அக்கால வேளையில் இக்கிராமத்தில் அல்லாபிச்சையர் குடும்பம், உதுமான் குடும்பம், முத்துமரைக்கார் குடும்பம் என்று விரல் விட்டு எண்ணக் கூடிய குடும்பத்தினர்தான் சீவித்திருக்கின்றார்கள் என்பதை அறிய முடிகிறது. இக்குடும்பத்தினரின் இனபந்துகளே இன்றுவரை அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

சின்னச்சிப்பிக்குளம் என்ற நீர்ப்பாசனக்குளம் கிராமத்தின் தெற்கே காணப்படுகிறது. இக்கிராமத்திற்கு சின்னச்சிப்பிக்குளம் என்ற பெயர் வந்ததற்குரிய காரணத்தை அறியும் போது ஒன்று இக்காலத்தில் ஆரம்ப காலங்களில், சுண்ணாம்ப சுடுவதற்குரிய சிறு, சிறு சிப்பிகள் நிறைந்து காணப்பட்டதாலும் அப்பெயர் வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மற்றொரு காரணம் ஆனைவிழுந்தான் கிராமத்தைச் சார்ந்த பெரிய சிப்பிக்குளம் என்ற விவசாயக் குளம் இருக்கின்றதால் இப்பெயர் வந்தது என்றும் அறிய முடிகிறது.


ஆரம்ப காலங்களில் சுமார் பத்து குடும்பம் அளவில் தான் இக்கிராமத்தில் வாழ்ந்திருக்கின்றார்கள். "பழை குடியிருப்பு" (தற்போது சிதைவுகளை காணமுடியும்) குளத்தின் இடக்கரைப்பக்கத்தில் இக்குடியிருப்புகள் அமைந்திருக்கின்றன. களி மண்ணால் சுவர்களும் வைக் கோலினால் கூரைகளையும் கொண்ட மண்குடிசைகளாகவும் இவர்களின் வீடுகள் காணப்பட்டன.

களிமண் சுவர்களைக் கொண்டதும், வைக்கோல் கூரையைக் கொண்டதுமான பள்ளிவாசல் ஒன்றும் இருந்துள்ளது. அது ஒரு ஜும்ஆப்பள்ளி அன்றாடம் தொழுகையை நிறை வேற்றும் ஒரு பள்ளியாகவே இருந்தது. ஜும்ஆக்கடமையை நிறைவேற்றுவதற்காக வேண்டி இம்மக்கள் சுமார் 10 மைல்களுக்கப்பால் உள்ள கல்லூர்

என்ற கிராமத்திற்குச் (அனுராதபுர மாவட்டத்தில் உள்ள எல்லைக்கிராமம்) சென்றுவந்துள்ளன. செல்லும் அப்பாதை பெரும் வனாந்தரத்திக்கூட்டாகவே அமைந்துள்ளது.

இக்கால மக்கள் ஜிவனோபாயத்திற்காக விவசாயம், சேனைப்பயிர்ச் செய்கை, வேட்டையாடுதல், தேன் சேகரித்தல், யானை பிடித்தல், குளங்களில், மன்பிடித்தல், போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக் கின்றார்கள். அத்துடன் கால்நடை வளர்ப்பையும் ஒரு தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.

இக்கால மக்களின் கல்வி அறிவு என்பது மிக மிக குறைவாகவே காணப்பட்டது. பள்ளிவாசலில் மாத்திரம் குர்ஆன் கற்றுக் கொடுக்கப்பட்டது. பக்கத்து கிராமங்களில் இருந்து லெப்பைமார் வந்து இந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். இதற்கு வேதனமாக அக்கால வேளையில் ஒவ்வொரு குடும்பமும் மாத மொன்றுக்கு ஐம்பது சதம் பணமும் எட்டுக் கொத்து (8 கிலே) அரிசியும் கொடுக்க வேண்டும்.



சின்னச்சிப்பிக்குளம் ஜும்ஆபள்ளி.

பாடசாலைக் கல்வி என்பது இவர்களுக்கு கிடைக்கவில்லை. அக்கால வேளையில் இக்கிராமத்திலோ இதனைச் சூழவுள்ள கிராமங்களிலோ பாடசாலைகள் இல்லை. ஐந்து கிலோ மீற்றருக்குள் அப்பால் உள்ள முதலியார் குளம் என்ற கிராமத்தில் 1930ம் அண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் கிறிஸ்தவ பாதிரிமாரால் தனியார் பாடசாலைகள் ஒன்று நடாத்தப்பட்டு வந்திருக்கின்றது. அதில் இரண்டொருவர் சென்று கல்வி கற்று வந்திருக்கின்றார்கள்.

குளத்தின் அருகில் குடிமனை அமைத்துக் கொண்டதால் மலேரிய, நிமோனியா போன்ற பல்வேறு நோய்களுக்கும் ஆளாகியுள்ளனர். அத்துடன் இருந்த குடிநிலமும் சதுப்பு நிலமாக மாற்றமடைந்ததால் இவர் தற்போது பிரதான வீதி அமைந்திருக்கும் இடத்திற்கு இடம் பெயர்ந்திருக்கிறார்கள். இது 1940ம் ஆண்டளவில் ஏற்பட்டிருக்கின்றது.

தற்போது இங்கு முகைதீன் ஜும்ஆப்பள்ளிவாயல் ஒன்று காணப் படுகிறது. இதே காணியில் தான் ஏற்கனவே மூன்று பள்ளிவாயல்கள் கட்டப்பட்டுள்ளன. முதற்பள்ளி 1940ம் ஆண்டளவில் கட்டப்பட்டுள்ளது. அது ஒரு ஜும்ஆப்பள்ளியாக இருந்திருக்கின்றது. சாகுல் ஹமீது லெப்பை (கௌரவ அமைச்சர் றிசாத் பதியுதீன் அவர்களின் இணைப்பாளர் மௌலவி ஞ.ர். தாஹிர் அவர்களின் தந்தையாகும்.) நாகூர்ப்பிச்சை போன்றவர்களும் கதீபாக கடமை புரிந்திருக்கிறார்கள்.

வெறும் களிமண்சுவர்களாலும் காட்டுத்தடிகளாலும் வைக்கோல் கூரையினாலும் ஆக்கப்பட்ட அப்பள்ளி 1950ஆம் ஆண்டளவில் அழிவுக்குட்பட்டுள்ளது. அதன்பின்னர் தகரக்கூரையைக் கொண்ட ஒர பள்ளி அதே இடத்தில் கட்டப்பட்டள்ளது. 1953ம் ஆண்டிலிருந்து ஆனைவிழுந்தான் கிராமத்தைச் சேர்ந்த நாகூரான் லெப்பை என்பவர் மிக நீண்ட நாட்களாக சுமார் 20 வருடங்களாக கதீப் ஆக கடமையாற்றியுள்ளார். ஆனைவிழுந்தான் கிராம மக்களுக்கு தங்களுடைய ஜும்ஆக் கடமையை நிறைவேற்றுவதற்கு இப்பள்ளிக்கு வந்திருக்கின்றார்கள்.

இம்மக்களுடை அக்கால வாழ்கைமுறை ஒர் அழகிய வாழ்க்கை முறையாகவே காணப்படுகிறது. ஒற்றுமை, ஒத்துழைப்பு, கட்டுப்பாடு,

கூட்டுறவு, பரஸ்பரம், உதவிபுரிதல், மூத்தோரை மதித்தல், விருந்தினரை உபசரித்தல் போன்ற பண்புகள் இவர்களிடம் மேலோங்கியிருப்பதை அறிய முடிகிறது.

இவர்களின் வாழ்வியல் போக்குக் கூடங்களிலும் சமயச் சடங்குகளிலும் இதன் பிரதிபலிப்புகளை அறிய முடிகிறது.

குறிப்பிட்ட அளவு குடும்பங்களே வாழ்ந்துவந்ததால் திருமணச் சடங்குகள் பெற்றோர் பார்த்து நிச்சயிக்கும் திருமணங்களாகவே காணப்பட்டன. தற்கால முறைகளை விட சற்று வித்தியாசமாக அவற்றை நாம் காணலாம். திருமணத்தில் இரு வீட்டாரும் கலந்து பேசி உறவாடுவதுடன் கிராமத்தில் உள்ள அத்தனை குடும்பங்களும் தங்கள் வீட்டுத் திருமணமாகவே எண்ணி விடுவதுண்டு.

திருமணத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னரே ஊரில் உள்ள எல்லாக் குடும்பத்தினரும் மாப்பிள்ளை, பெண் வீட்டு வேலைகளில் ஈடுபடத் தொடங்கிவிடுவார்கள். ஆண்கள் பந்தல் போன்றவை கட்டுவதிலும் உணவு ஆயத்தம் செய்வதிலும் ஈடுபட, பெண்கள் நெல்லுகையை அவித்து காயவைத்து அரிசியாக்குவதிலும் மாவு இடிப்பதிலும் பலவித பலகாரங்கள் செய்வதிலும் ஈடுபடுவார்கள்.

இரவு வேளைகளில் கலிகம்பு (கோலாட்டம்) விளையாட்டு ஆண்கள் விளையாட பெண்கள் அதைக் பார்த்து மகிழ்ந்திருப்பார்கள்.

பந்தல் அமைக்கும்போது காட்டுக்கம்புகளை கொண்டுவந்து கப்புகளாக நட்டி மேலே படங்கு அல்லது தென்னோலைகளால் வேய்ந்து விடுவார்கள் இப்பந்தலின் சிறப்பு என்ன வென்றால் “மாப்பிள்ளை கப்பு” நடுவதுதான் அப்பொழுது சிறப்பான விடயமாக இருக்கும்.

பால்மரங்களையே இதற்குப்பயன்படுத்துவார்கள் அதனை நட்டி அக்கப்புக்கு மஞ்சள்பூசி அதனைச்சுற்றி அதாவது கப்பைச்சுற்றி பட்டுச்சேனையால் கட்டுவார்கள். மாப்பிள்ளையை அவ்விடத்திலே உட்கார வைப்பார்கள். அவ்விடத்தில் வைத்தே மாப்பிள்ளைக்கு

காவின் பால் (தேங்காய்ப்பால்) மணமகளின் தந்தையால் கொடுக்கப்படும். மணமகன் அதில் மூன்று மிடர் குடிப்பார் பின்னர் மணமகள் அதில் மூன்று மிடர் குடிப்பார்.

மணமகன் வீட்டிலிருந்து வரும் பொழுதே அவருடைய சுற்றத்தார் பள்ளிவாசல் மரைக்கார் மத்திசம் போன்றோருடன் நடையாக அழைத்துவரப்படுவார். அண்கள் மௌலூதுகள் ஓதிவர, பெண்கள் குரவை ஒலித்துவர அழைத்துவருவார்கள். வீதியல் வரும்போது மணமகனுக்கு உறவுமுறையானவர்களின் வீடுகள் இருந்தால் ஒவ்வொரு வீடுகளிலும் ஆரத்தி எடுப்பார்கள். ஆரத்தி முடிந்தபின்னர் மாப்பிள்ளைத் தோழன் ஆராத்திப் பணம் போடவேண்டம் பத்துறுபா, ஐந்து ருபா அக்காலத்தில் பணயம் போடப்பட்டுள்ளது.

மணமகளின் இல்லத்தில் மணமகளின் தங்கையாலோ அல்லது உறவினர்கலோ தலைவாசலில் வைத்து ஆரத்தி எடுக்கும்முறை இருந்துள்ளது. அத்துடன் சலவைத் தொழிலாளிகள் வந்து மணமகள் வீட்டின் வாசலில் இருந்து பந்தல் வரை வெள்ளை விரித்திருப்பார்கள். (இவை சில வீடுகளில்தான் இடம் பெற்றிருக்கிறது) அதில் தான் மாப்பிள்ளை கடந்து செல்வார். வெள்ளை விரிக்காவிட்டால் மணமகன் வீட்டார் மறுத்துரைப்பதும் உண்டு. மணமகனின் உறவினர்களையும் மணமகனையும் குரவை ஒலியுடன் மணமகளின் வீட்டார் அழைத்துச் செல்வார்கள்.

அதுமட்டமல்ல இத்திருமணங்கள் பெரும்பாலும் இரவு வேளைகளில் தான் நடைபெறும். மணமகனுக்கு குடை பிடித்து மாலை போட்ட தலையில் துருக்கித் தொப்பி அணிந்து, அழைத்து வரும் காட்சியைக் காண ஆயிரம் கண் வேண்டும் என்று சொல்வார்கள்.

மாப்பிள்ளை பெண்வீட்டாரிடம் சீதனம் வாங்கும் முறை அக்காலத்தில் இருக்கவில்லை மகர் தொகையாக 51 ருபாய் அல்லது 101 ருபாய் வழங்கியிருக்கிறார்கள்.

திருமண வீட்டில் கூறைப்பெட்டியும் பலகாரப் பெட்டியும் தான் முக்கிய இடத்தைப் பெறும், கூறைப் பெட்டியில் பெண்ணுக்கு மணமகனால்

அன்பளிப்புச் செய்யப்படும் உடைகளும், சப்பாத்துகளும் காணப்படும்.

பலகாலரப்பெட்டி பலமுறை பரிமாரப்படுவதுண்ட. அதற்குள் வால்பன் பணியாரம், தட்டிப்போட்ட பணியாரம், முறுக்கு, வாழைப்பழம், ஈத்தம் பழம் என்பன இருக்கும் சில வேளைகளில் கற்கண்டும் இருக்கும்.

தேன்பால் நெய், தயிர், மோர் இவைகள் அக்காலத்தில் ஏராளமாகக் கிடைப்பதுண்டு. தேன், நெய் போன்றவற்றைக் கொண்டுதான் பலகாரம் தயாரிப்பர். இன்றும் பலமுதியவர்கள் இருக்கிறார்கள். (80 வயதைத் தாண்டியோர்) அவர்களுக்கு சக்கரைவியாதியோ, இரத்த அழுத்தமோ, கொலஸ்ரோலோ எதுவும் காணப்படுவதில்லை.

வீட்டிற்கு வரும் விருந்தினரையும் இவற்றைக் கொண்டு உபசரித் துள்ளார்கள்.தூர இடத்திலிருந்து வருவோருக்கும் தேன்போத்தல், நெய்போத்தல் கொடுத்தே வழி அனுப்பிவைத் திருக்கின்றார்கள். தேன், நெய் என்னவிலை என்று கேட்டால் யாருமே விற்பதுமில்லை, யாருமே விலைக்கு வாங்குவதுமில்லை.

பள்ளிவாசல்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் மரைக்கார், மத்திசம் என்ற அமைப்பில் இடம்பெற்றுள்ளது. இன்றுள்ளதைப்போல் நிர்வாக சபை முறை அக்காலத்தில் இல்லை. இவர்களே கிராமத்தில் உள்ள சகல பிரச்சினைகளையும் தீர்க்க கூடியவர்களாக இருந் துள்ளனர்.

தாருல் உலூம்
மு.ம.வி.,
சின்னச்சிப்பிக்குளம்.

ஆக்கால வேளையில் வைத்திய சலைகள் இக்கிராமத்திலோ அயல் கிராமங்களிலோ இல்லாததால் பெரும்பாலும் வைத்தியங்களும் பரியாரி வைத்தியங்களும் கைகொடுத்திருக்கின்றது. வவுனியா நகருக்குள் மாத்திரம் வைத்திய சாலை இருந்ததால் மக்கள் சிரமங்களை எதிர் நொக்கியிருக்கின்றார்கள்.

இதனால் பிறப்பு வீதத்தை விட இறப்பு வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. மூட நம்பிக்கைகளும், பேயோட்டும் முறைகளும் இக்கால வேளையில் அதிகரித்திருக்கின்றது. 50ம் அண்டுக்குப் பிற்பட்ட காலத்திலே செட்டிக்குளம் வைத்தியசாலை அமைக்கப்பட்ட பின்னர் ஓரளவு வைத்திய வசதி இவர்களுக்கு கிட்டியிருக்கின்றது.

போக்குவரத்தும் மிகவும் இக்கட்டான நிலையிலே இருந்திருக்கின்றது. கால்நடையாக நீண்ட தூரங்களுக்குச் சென்று வந்துள்ளார்கள். மன்னார் வீதி அமைக்கப்பட்ட பின்னரே மாட்டு வண்டி அறிமுகமாகியிருக்கின்றது. அதன் வருகையின் பின்னர் போக்குரத்து இலகுவானது.

துவிச்சக்கர வண்டி 50 க்குப்பிற்பட்ட காலத்தில் இக்கிராமத்தில் இரண்டு முன்று அளவில் இரந்ததாக அறியமுடிகிறது. இவ்வாறு பல இன்னல்களுக்க முகம் கொடுத்து இம்மக்கள் வாழ்ந்திருக்கின் றார்கள் என்பது பெரு வியப்பாக இருக்கின்றது.

திருமணச்சடங்குகளைத் தவிர கத்னா வைபவங்கள், சாமத்திய வைபவங்கள் என்பன சிறப்புற நடந்திருக்கின்றன.

இதுதவிர சமயச்சடங்குகளாக சுபுஹான மௌலூது நபிகள் நாயகம் (ஸல்) பிறந்த றபியுல் அவ்வல் மாதத்தில் தலைப்பிறையிலிருந்து பிறை 12 வரை பள்ளிவாசலில் மௌலூது ஓதி ஒவ்வொரு வீட்டிலிருந்து நெய்சோறு சமைத்து காணிக்கை கொடுப்பார்கள். அதே போல் றபியுல் ஆகிர் மாதம் முகைதீன் அப்துல் காதர் ஜீலானி (ரஹ்) அவர்களின் பெயரில் ஓதப்படும் மௌலூது 11 நாட்களுக்கு ஓதப்பட்டு இறுதி நாள் ஊர்மக்கள் செர்ந்து பள்ளிவாயலில் நெய்சோறு ஆக்கி, கிடாய் அறுத்து கறி சமைத்து எல்லாமக்களுக்கும் பகிர்ந்தளித்து உண்பதுமுண்டு. அத்துடன் ஆசரா மாதத்தில் பிறையும் நட்சத்திரமும்

கொண்ட கொடியேற்றப்பட்டு ஊரைச்சுற்றி வருவதும் உண்டு. இவைதவிர இறந்தவர்கள் போல் 3ம், 7ம், 15ம், 30ம், 40ம், வருடக் கத்தமுல் குர்ஆன் ஓதப்பட்டு ஏழை எழியவர்களுக்கும் உறவினர்களுக்கும் உணவு சமைத்து பரிமாறப்படுவதுண்டு.

இவை தவிர இன்னும் ஒரு முக்கிய நிகழ்வாக மன்னார் கொண்டச்சி சரீபுப்புலவரை அழைத்து சீறாப்புராணம் முகைதீன் புராணம் என்பன படித்து அதற்கு விளக்கவுரை கூறப்படுவதுமுண்டு. இந்நிகழ்விற்கு ஊர்மக்கள் ஒன்றுதிரண்டு பள்ளிவாசலில் கூடி இந்நிகழ்வை கண்டு களித்திருக்கின்றார்கள். அத்துடன் மன்னார் சிலாவத்துறை ஹபீபு முகம்மதுப்புலவர் போன்றவர்களும் இங்கு வருகை தந்ததுண்டு.

1958ம் அண்டு ஊரவர்களின் முயற்சியைக் கொண்டு ஒரு ஆரம்பப் பாடசாலை அமைக்கப்பட்டது. இக்கிராமத்தவர்களே இதற்குப் பெரும் பங்களிப்பும் செய்துள்ளார்கள். மண் சுவரையும் கிடுகால் வேயப்பட்ட கூரையும் அமைப்பதற்கு ஆரம்பகாலங்களில் வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சி. சுந்தரலிங்கம் அவர்கள் அனுமதி பெற்றுக் கொடுத்திருக்கின்றார். இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு ளு. சிவக்கொழுந்து என்பவர் நியமிக்கப்பட்டார். இப்பாடசாலையின் முதல் மாணவராக ஆனைவிழுந்தான் கிராமத்தைச் நேர்ந்த மு. முத்தலிப் என்பவரே அனுமதிக்கப்பட்டார். இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியை கற்ற பல மாணவர்கள் இன்று பல துறைகளிலும் முன்னணியில் திகழ்கின்றார்கள்.

இன்று இப்பாடசாலையில் 14 ஆசிரியர்களுடன் க.பொ.த. சாதாரண தரம் வரை 250 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றார்கள். ஜனாப் ஆ.டீ. சம்சுதீன் அவர்கள் இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக கடமையாற்றுகின்றார். இவர் இப்பாடசாலையின் பழைய மாணவரும் இக்கிராமத்தைப் பிறப்பிடமாகவும் கொண்டவர் ஆவார். இவருடைய மகன் ளு. அஸ்கர் என்பவர் சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தின் 3வது வருட மாணவராக கல்வி கற்று வருகின்றார். இவை தவிர இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியை கற்றவர்கள் 15ற்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் பல உலமாக்களையும் வேறு பல அரச நிறுவனங்களில் தொழில் புரிகின்றவர்களையும் இக் கிராமம்

கொண்டுள்ளது.

மௌலவி S.H. தாஹிர் B.A. (கௌரவ அமைச்சர் ரிஸாட் பதியுதீன் அவர்களின் இணைப்புச் செயளாலர் கவிஞர் வன்னி மைந்தன் (S.K. ஆப்தீன்) அதிபர் A.C. ஜுனைதீன், கணித ஆசிரியர் K.M. அனீஸ், S.H. சுபியான் (நம்பிக்கையாளர் சபை தலைவர்) ஆகியோர்களும் இக்கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்களும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களும் ஆவர்.

இது தவிர மு.ஆ. ஹாஜா மொகிடீன் போன்ற கோலாட்ட அண்ணாவி மார்களையும் S. நௌபர், S.H. முஜீப் போன்ற இளங்கவிஞர்களையும், S.M. அனீபா போன்ற வைத்தியர்களை இக்கிராமம் கொண்டுள்ளதுடன் M. நௌபான் மௌலவி, M. சஹீத் மௌலவி போன்ற பிரபல உலமாக்களையும் இக்கிராமம் கொண்டுள்ளது.

1990ம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் மீண்டும் இக்கிராமத்தில் இம்மக்கள் குடியேறி விவசாயம், கால்நடை வளர்ப்பு, நன்னீர் மீன் வளர்ப்பு, சிறு வர்த்தகம் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். 2004ம் ஆண்டு கௌரவ அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களின் பண்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து பிரதான வீதி தார் இட்டு செப்பனிடப்பட்டது. அத்துடன் முன்னைனாள் அமைச்சர் நூர்தீன் மசூர் அவர்களினால் ஒரு பாடசாலை கட்டிடமும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டது.

எதிர்காலத்திலும் இக்கிராமத்திற்கு பல அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. குறிபாக சுகாதார வசதி, வீடில்லாப் பிரச்சினை, போக்குவரத்து வசதி, வேலையில்லாப் பிரச்சினை என்பன தீர்க்கப்படலாமென இம்மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர்.

இக்கிராமத்தில் இன்று விவசாய நீர்ப்பாசணக் குளங்களாக சின்னச் சிப்பிக்குளம், புளியங்குளம், புளிச்சக்குளம், நொச்சிக்குளம், சோனகசாலம்பைக்குளம், குமலமோட்டை களம், துட்டுவாகை, முதலைக்குத்தி, கப்பச்சி புளிய மோட்டை குளம், சின்னக்குளம் போன்ற குளங்களில் விவசாய செய்கை பண்ணப் படுகிறது. இன்னும் பல பாலடைந்த குளங்கள் இப்பிரதேசத்தை சூழவும் காணப்படுகின்றது.

இவற்றை புனரமைப்பு செய்யப்படும் போது இம்மக்களின் காணிப்பற்றாக் குறைகள் தீர்க்கப்படும்.

அடுத்து இப்பிரதேசத்தில் அரச நிறுவனங்களில் தொழில் புரிகின்றவர்கள் M.N.P. சம்சுதீன் (அதிபர்) K.M.M. அனீஸ் (ஆசிரியர்), A.C. ஜுனைதீன் (அதிபர்) ஆசிரியர்களாக N. சலீம், K.M. ஆரிஸ், M. றயிஸ்தீன், T. நிசார்தீன், N. சலாகுதீன், திருமதி F. மாஜிலா, திருமதி J. சாஜினா ஆகியோர்களும், S.H. முஜிபுர் ரஹ்மான் தபால் அதிபர், S.K. றசாக் (மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சபை, வவுனியா), A.C. நிசார் (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் செட்டிக்குளம்), M. அப்துல் ஸலாம் (புதை பொருள் ஆராய்ச்சி நிலையம் - வவுனியா) நௌபர் (சமுர்த்தி உதவியாளர்) ஆகியோரும் அடங்குவர்.

மௌலவி மார்களாக M. நௌபான், M. சஹீது, ஹாபீஸ் மௌலவி, M. ஆமுஸ்தீன், A.H. சுபைர், H. நலீபர், U. இர்பான், M. ஹன்பஸ், R. அஜ்மல், R. சப்ரி கான், ஆகியோர்களும்பல்வேறு பகுதிகளில் மார்க்கக் கடமை புரிகின்றனர்.

அத்துடன் இக்கிராமத்தின் 1985ம் ஆண்டிலிருந்து சுந்திரி மலை சந்தி என்ற பகுதியில் புதிய குடியேற்றம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு சுமார் 25 குடும்ப அளவில் இங்கு வாழ்கின்றன. இங்கு தக்கியா பள்ளியொன்று அமைக்கப்பட்டுள்ளது. கௌரவ அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்களின் உதவியுடன் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டமொன்று அமைக்கப்பட்டது மக்கள் பல இதனால் நன்மைகளைப் பெறுகின்றனர்.

இவை தவிர தந்திரி மலை சந்தியிலிருந்து புதிய வீடமைப்புத் திட்டமொன்று வவுனியா மாவட்டத்தில் இடம்பெறும் தேசிய மீலாத் விழாவின் ஞாபகார்த்தமாக நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

தொகுப்பு: சு.க. ஆப்தின்
ஆசிரியர்

# ஆனைவிழுந்தான் கிராமத்தின் வரலாறு

அழகிய இக்கிராமத்தின் வயலும், வயல் சார்ந்த நிலங்களும் மருத நிலத்திற்குரிய சிறப்பைக் காட்டுவனவாக உள்ளது.

வவுனியா நகரத்திலிருந்து சுமார் 32 கிலோ மீற்றர் தூரத்தில் அதாவது மதவாச்சி மன்னார் வீதியில் கஜசிங்கபுர சந்தியில் இருந்து தந்திரிமலை வீதியால் சென்று சின்னச் சிப்பிக் குளத்திற் கூடாக இக்கிராமத்தைச் சென்றடைய முடியும். செட்டிக்குளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இக்கிராமம் சின்னச்சிப்பிக்குளம் கிராம சேவகர் பிரிவுக்குள் அடங்குகின்றது.

குளத்தை அடிப்படையாகக் கொண்ட குடியிருப்புகளைக் உடைய இக்கிராமம் "ஆனைவிழுந்தான்" என்று அழைக்கப்படுகிறது. யானைக்கும் இக்கிராமத்திற்கும் இடையில் தொடர்பு உள்ளதா என ஆராயும் போது யானை பிடிப்பதற்காகவே மக்கள் இங்கு குடியேறியுள்ளார்கள்.


1860ம் ஆண்டளவில் மன்னார் முசலிப்பகுதியில் இருந்து வந்து யானை பிடிக்கும் தொழிலைச் செய்து வந்த முகம்மது மீராசாகிபு என்பவரே இக்கிராமத்தின் முதல் குடிமகன் என அறிய முடிகிறது.

அக்காலவேளையில் பெருங்காடுகளாகவும், வனாந்தரங்களாகவும் காட்சியளித்த இப்பிரதேசம் யானைகள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களாக காணப்பட்டன.

இக்கால வேளையில் முசலிப்பகுதி யானைபிடிக்கும் தொழில் முக்கிய இடத்தை வகித்ததால் இப்பகுதியை நோக்கி அவர்கள் வந்திருக்கலாம் என அறிய முடிகிறது. அக்கால வேளையில் பெரும் குளங்களோ அல்லது விவசாய நிலங்களோ காணப்பட்டதற்கான ஆதாரங்கள் ஏதுமில்லை. கண்ணுக்குத் தென்பட்ட ஒரு நீர் குட்டையைக் கொண்டே குளமாக அதை உருவாக்கி குடியிருப்புக்களை உருவாக்கி இருப்பார்கள். இங்கு முகம்மது மீராசாகிபு என்பவருடைய சந்ததிகளே இன்றுவரை வாழ்கின்றார்கள்.

வடக்கே மருதமடு காட்டுப் பகுதியையும், தெற்கே புளிய மோட்டைக்குள பழங்கிராமத்தையும் கிழக்கே வாடிவளை புளியங்குளம், கிராமத்தையும் மேற்கே சின்னச்சிப்பிக்குளம் கிராமத்தையும் எல்லைகளாகக் கொண்ட இக்கிராமம் மூதாதையரின் வீரத்தை பறை சாற்றும் ஒருகிராமமாக இது காணப்படுகிறது.

இந்த மண்ணின் மகத்துவத்தைப் பறை சாற்றும் ஒரு மனிதராக வாழ்ந்து கொண்டிருக்கும் அலிஉதுமான் நாகூரான் லெப்பை (85 வயது) அவர்களை நாம் காணமுடியும். இவர் இக்கிராமத்தின் முதல் குடிமகன் முஹம்மது மீராசாகிபு அவர்களின் வழித்தோன்றலில் வந்தவர் இறைபக்தியும் பணிவும் சேவைசெய்யும் உள்ளமும் கொண்ட இவர் 1935ம் அண்டளவில் மன்னார் - எருக்கலம்பிட்டியில், மார்க்கக் கல்வி கற்றுவிட்டு வந்து கடந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இக்கிராமத்திலும் இதனைச் சூழ உள்ள கிராமங்களிலும் உள்ள பள்ளி வாசல்களில் கதீப் ஆக கடமை புரிந்து வருகின்றார். இக் கிராமங்களில் இடம் பெறும் சகல நிகழ்வுகளிலும் இவரை காண முடியும். அதிகாலைமுதல் அல்குர்ஆனை ஓதுவது மற்றும் ஏனைய நல்லமல்களிலும் இவர் இறுதிக் காலத்தை செலவு செய்கின்றார்.



ஆனைவிழுந்தான் ஜும்ஆபள்ளி

முன்னேற்றத்தின் படிகளில் நகர்ந்து கொண்டிருக்கும் இக்கிராமத்தில் தற்போது விவசாயமே பிரதான தொழிலாகக் காணப்படுகிறது. இக்கிராமத்தைச் சூழவும் ஆனைவிழுந்தான் குளம், பெரியசிப்பிக்குளம், கொக்கு மொட்டைக் குளம் போன்ற நீர்ப்பாசனக் குளங்களின் மூலம் விவசாயச் செய்கை நடை பெறுகிறது.

இக்கிராமத்தின் மூதாதையரின் வரலாற்றில் மதார்சாகிபு காதர் முகைதீன் என்பவர் சிறப்பிடம் பெறுகிறார். 1960 களில் இறையடியெய்தி இவர் இக்கிராமத்தின் மரைக்காராகவும், ஊரில் பிரபலமான ஒரு மனிதராகவும் திகழ்ந்து வந்துள்ளார். 1960 களுக்குப்பிற்பட்ட காலத்தில் கல்வி அறிலும் இப்பகுதி ஓர் அளவு விருத்தி கண்டுவந்துள்ளது. கே. கப்ப மரைக்கார், நா. முகைதின் பிச்சை, எஸ். நூாகூரான், எஸ் கச்சு மரைக்கார் போன்ற இளைஞர்கள் கல்வி கற்று (அயல் கிராமங்களுக்குச் சென்று) தற்போது அரச பதவிகளில் உள்ளனர்.

இவைதவிர கோ. முகம்மதுக்காசிம், கே. மதார்சாகிபு, எம். முஹம்மது சாலி, எஸ். ஆசனார் லெப்பை, பொன்றவர்களும் கல்வி கற்று இக்கிராமத்திற்கு சிறப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

1990க்குப் பிற்பட்ட காலத்தில் இடம்பெயர்ந்து அனுராதபுர மாவட்டத்தில் அகதிகளாகி குடியேறி தற்போது மீண்டும் இக்கிராமத்தில் குடியேறியுள்ளனர். கணிசமான ஆசிரியர்களையும் உலமாக்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் மதரசாக்களின் மாணவர்களையும் கொண்ட இக்கிராமம் கல்விச் சமூகம் ஒன்றை உருவாக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

1973 அளவில் இக்கிராமத்தில் வவுனியா கல்வித் திணைக்களத்தால் ஸ்தாபிக்கப்பட்ட ஒர் ஆரம்பப்பாடசாலை இன்றுவரையும் ஆரம்பப் பாடசாலையாகவே இருக்கின்றது. இப்பாடசாலையின் முதல் அதிபராக வவுனியா சாலம்பைக்குளத்தை சேர்ந்த ஜனாப் M.R. அக்பர் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். தற்போது இப்பாடசாலை அதிபராக சின்னச் சிப்பிக்குளத்தை சேர்ந்த ஜனாப் A.C.M. ஜுனைதீன் அவர்கள் கடமை புரிந்து வருகிறார். சுமார் 35 மாணவர்களை கொண்ட இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரைக்கும் எதுவித முன்னேற்ற

நிலைக்கும் செல்லவில்லை என்பது வேதனைக்குறிய விடயமாகும்.

1970 க்கு முற்பட்ட காலத்தில் இக்கிராமத்தில் ஜும்ஆப் பள்ளிவாசல் இல்லாதிருந்திருக்கிறது. சின்னச்சிப்பிக்குளம் கிராமத்தில் இவர்கள் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றி வந்துள்ளார்கள்.

1973ல் தற்போதுள்ள ஜும்ஆப்பள்ளிவாசல் கட்டப்பட்டு நிர்வகிக்கப் பட்டுவருகிறது.

இக்கிராமத்தைப் பொருத்தவரை கீழ்வரும் நீர்ப்பாசன குளங்களின் மூலம் விவசாய முயற்சிகள் நடைபெறுகின்றன. அவை ஆனைவிழுந்தான் குளம், பெரிய சிப்பிக்குளம், கொக்குமோட்டை குளம், சின்னக்குளம் என்பனவாகும்.

இங்கு அரச கடமைகளில் K.M. பைசர் ஆசிரியர், A.L. மலிக் ஆசிரியர், A.L. தௌபீக் ஆசிரியர், S. அமான் ஆசிரியர், S.M. நளீம் ஆசிரியர், A.M. பாரிஸ் ஆசிரியர் ஆகியோர்களும் மௌலவி மார்களான S.H. ஜகூர் , A.M. பாரிஸ், A.M. நௌபான், M. நௌபர் ஆகியோர்களும் உள்ளனர். K.K. கப்ப மரைக்கார் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் முகாமையாளராக கடமை புரிகின்றார்.

ஆனைவிழுந்தான் முந்தாள்பள்ளி.

இக்கிராமத்திலிருந்து 1 மைல் தொலைவில் வாடிவளை புளியங்குளம் எனும் ஒரு முஸ்லிம் சிற்றூரில் சுமார் 10 குடும்பங்கள் வாழ்கின்றன. விவசாயத்தை தொழிலாக கொண்ட இம்மக்களுக்கு ஒரு இறை இல்லமோ, பாடசாலையோ இல்லாததுதான் பெருங்குறையாக உள்ளது. ஆனைவிழுந்தான் ஜமாஆத்திற்கு உட்பட்டதாகவே இக்கிராமம் காணப்படுகிறது.

தொகுப்பு
சு.க. ஆப்தீன்
(ஆசிரியர்)


# பாவற்குளம் கிராமத்தின் வரலாறு

தொகுப்பு – செய்யது இப்றாஹிம் முஹம்மது சமீம் (ஆசிரியர்)

**கிராமத்திற்கு பெயரிட்ட வரலாறும் காரணிகளும்**

1950ம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் பாகவரசன் எனும் மன்னன் இப்பகுதியை ஆண்டு வந்ததாகவும் அவனுக்கு 2 பிள்ளைகள் இருந்ததாகவும் முதல் பிள்ளைக்கு பாகம் என பிரிக்கப்பட்டு அது பாவற்குளம் என திரிபடைந்ததாகவும் 2ஆவது பிள்ளைக்கு உள்குளம் வழங்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது.

இன்னுமொரு சான்றில் குளத்தை அண்டிய பகுதிகளில் கூடுதலான பாகற்கொடி காணப்பட்டதன் காரணமாக பாவற்குளம் என பெயரிடப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது.



ஜும்ஆப்பள்ளி பாவற்குளம்.

#### கிராமத்தில் மக்கள் குடியேறிய காலம்

வவுனியா மாவட்டத்தின் பூர்வீகக் கிராமங்களான சூடுவெந்தபுலவு, பட்டானிச்சூர் புளியங்குளம், புளிதறித்த புளியங்குளம், சாளம்பைக் குளம் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் அரசாங்கத்தினால் 1956ம் ஆண்டு குடியேற்ற திட்டத்திற்கமைய பாவற்குளத்திலும் மக்கள் குடியேற்றப்பட்டனர்.
சூடுவெந்தபுலவு கிராமத்திலிருந்து முகைதீன் சாஹுல் ஹமீட், மீராசாகிப் அகமது லெப்பை, மு. சேகு அப்துல் ஹமீட் லெப்பை, சின்னமரைக்கார், நாகூர் கனி, புளிதரித்த புளியங்குளம் கிராமத்து சேகுஅப்துல் காதர் சாளம்பைக் குளத்திலிரந்து முகைதீன் கனி, சாஹுல் ஹமீட் அசனார் கண்டு, நாகூர் கனி போன்றோர் குடியேறியதாகவும் இன்னும் பல இடங்களிலிருந்தும் குடியேறிய தாகவும் தகவல்கள் மூலம் அறியக்கிடைக்கின்றது.

#### கிராமம் அமைப்பதற்கு ஏதுவான காரணிகள்

இங்கு மக்கள் அரசாங்கத்தினால் 1950ம் ஆண்டு குடியேற்றத் திட்டத்துக்கமைய (கொலனி திட்டத்துக்கமைய, இங்கு காணிகள் பிரிக்கப்பட்டு பாவற்குளம் 1ம் யுனிட் தமிழ் மக்களுக்கும் 2ம் யுனிட் முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட்டது. இதில் 2ம் யுனிட் கிராம வீட்டு இலக்கம் 111ல் இருந்து ஆரம்பமாகிறது. இங்கு 2ம் யுனிட் பாவற்குள்த்தில் குடியேறிய மக்களுக்கு அரசாங்கத்தினால் மேட்டுநிலக்காணி 1 ½ ஏக்கரும் வயற்காணி 3 ஏக்கரும் வழங்கப்பட்டது. இங்க குடியேறிய ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் 1 மலசலகூடமும் கட்டிக்கொடுக்கப்பட்டது. கிணறு வெட்டியவர் களுக்கு பணமும் வழங்கப்பட்டது. அதுமட்டுமின்றி ஒவ்வொரு சந்திகளிலும் பிரதான இடங்களிலும் அரசாங்கத்தினால் பொதுக் கிணறு கட்டிக்கொடுக்கப்பட்டது.

அதுமட்டுமின்றி ஒரு கிராமத்திற்கு அத்தியவசிய தேவைகளான பாடசாலை மற்றும் வைத்தியசாலை, தபால் அலுவலகம், கூட்டுறவுச்சங்கம், கிராமசேவகர் அலுவலகம், ஆசிரியர் விடுதி என்பன கட்டப்பட்டு சிறந்த வளர்ச்சியடைந்த கிராமமாக இருந்த இக்கிராமம்

1983ம் ஆண்டு இனப்பிரச்சினையின் பின் அனைத்தும் செயலிழந்து தற்போது பலகட்டிடங்கள் இருந்த இடமும் இல்லாமல் இருக்கிறது.

### கிராமம் அமைந்துள்ள எல்லைகள்

பாவற்குளம் கிராமத்தின் வடக்கு திசையாக 4ம் யுனிட், பாவற்குள தமிழ் கிராமமும் கிழக்கு திசையாக சூடுவெந்தபுலவு கிராமமும் தெற்கு திசையாக பாவற்குள வாய்க்கால் வயல்வெளி பிரதேசமும் மேற்கு திசையாக தக்கெத்த சிங்களக் கிராமமும் அமைந்துள்ளது.

### கிராம மக்களின் தொழிலும் பண்பாடும்

பாவற்குளம் கிராமமக்களின் தொழிலினை பொருத்தவரையில் திட்டமிட்ட விவசாய குடியேற்றத்திட்டம் காரணமாக இங்கு குடியேறிய மக்கள் விவசாய செய்கை மேற்கொண்டனர். வருடத்திற்கு 2 முறை நெற்செய்கை மேற்கொண்டனர். அதுமட்டுமின்றி சேனைப் பயிர்ச்செய்கையும் மேற்கொண்டனர். ஆரம்பத்தில் வயல் வேலை களுக்கு மாட்டினைக் கொண்டு உழுது பண்படுத்தி விவசாய செய்கையை மேற்கொண்டனர். பிற்பட்ட காலங்களில் தொழில்நுட்ப முன்னோற்றம் காரணமாக விவசாய செய்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

அதுமட்டுமின்றி இம்மக்கள் குளத்தை அண்டிய பகுதிகளில் குடியேற்றப்பட்டதன் காரணமாக மீன்பிடி தொழிலையும் மேற்கொண் டனர். ஆரம்பத்தில் தூண்டில்கள் மூலம் தங்களது தேவைக்கு மீன்களை பிடித்தனர். பின்னர் 1980 ஆம் அண்டுகளுக்கு பிறபட்ட காலப்பகுதியில் மீன்பிடித்தல் தொழில் ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப்பிறகு வலைகள் பயன்பாட்டக்கு வந்தன. பலரின் ஜீவனோபாயத் தொழிலாக மீன்பிடித்தொழில் மாறியது. இதன்போது குளத்திற்கு சென்று அங்கேயே தங்கி மீன்பிடித்து விட்டு மறுநாள் காலையில் வீடு திரும்புகின்ற பழக்கம் தற்போழுதும் தொடர்கிறது. இதன்பின் வள்ளங்கள், தோணிகள் என்பன பயன்படுத்தப்பட்டு வந்தன.

அதுமட்டுமின்றி பாவற்குளம் கிராமத்தில் 100க்கும் மேற்பட்டவர்கள்

இந்த மீன்பிடித்தொழிலை மேற்கொள்கின்றனர். இவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக நன்னீர் மீன்பிடிச்சங்கம் உருவாக்கம்பெற்று திறம்பட தங்களது தொழிலை மேற்கொண்டாலும் தொழில் ரீதியாக பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இவர்களின் மீன்பிடிச்சங்கத்தலைவராக தெரிவு செய்யப்பட்டவரும் சங்கத்தை தோற்று விப்பதில் உழைத்தவருமாகிய மீரா முகைதீன் அப்துல் கரீம் சங்க வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவர்.

**கிராமத்தைச் சூழவுள்ள குளங்கள், காணிகள்**

பாவற்குளம் விவசாய குடியேற்றத்திட்டமாக இருந்தாலும் இதற்கு பல ஏக்கர் காணிகள் உள்ளன. இக்குளத்தை அண்டியும் எமது கிராமத்தை சூழவும் பலகுளங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அவரந்துலாவ குளம், பூமடுகுளம், தட்டான்குளம், ஓட்டைச்சாளம்பைக்குளம், கஞ்சுக்குளம், உலுக்குளம், மதவுவைத்தகுளம், கருனாந்திக்குளம், குஞ்சுக்குளம், மேல்குளம், குரட்டையர்குளம், புதூர்குளம் போன்ற குளங்களும் இதற்குரிய சிறிய அளவிலான காணிகளும் உள்ளன.

இம்மக்களின் பொருளாதாரத்தைப் பொருத்தவரையில் விவசாயத்தை அண்டியதாகவும் மந்தைகளை வளர்ப்பதிலும் ஈடுபடுகின்றனர். இதில் ஆடு, மாடு முக்கியத்துவம் வகிக்கின்றது. இதன் மூலம் தங்களது பொருளாதார தேவைகளையும் உணவு தேவைகளையும் நிறைவு செய்கின்றனர்.

**கலாச்சாரப் பண்பாடும் பாரம்பரிய விழுமியங்களும்**

1956ம் ஆண்டு குடியேறிய காலம் தொடக்கம் சில பாரம்பரிய கலாச்சார பண்புகளை உடையவர்களாக இம்மக்கள் காணப்படுகின்றனர். இம்மக்களின் ஜீவனோபாய தொழிலாக விவசாயம் இருந்ததால் வயல் விதைப்பின் போது கூலியை எதிர்பாராது ஒற்றுமையாக ஒவ்வொருவரும் தங்களது பயிர்களுக்கு சக்கரகஞ்சி வயலில் காய்ச்சி தாங்களும் அருகில் உள்ள ஏனைய வயற்காரர்களும் குடித்த பிறகு வயலுக்கு பால் தெளித்தல் எனும் வழக்கமும் இருந்தது.

வயலில் கதிர் வரும்போது பால்சோறு சமைத்து சாப்பிட்டுள்ளார்கள். மேலும் வயல் அறுவடை காலத்தில் சூடுவைத்து சூடு அடுப்பின் போது ஆடு அறுத்து வயலில் மவ்லூது ஓதுவார்கள். இவ்வாறான சந்தர்ப்பத்தில் பக்கத்திலுள்ள வயல் சொந்தக்காரர்கள் பங்கு கொள்வதுடன் கூலியை எதிர்பாராது உதவிசெய்வார்கள்.

மேலும் வீட்டில் மவ்லூது வைபவம் என்ற ஒரு நடைமுறையும் இருந்தது. பராஅத் இரவின்போதும் ஏனைய முக்கிய தினங்களிலும் ஒவ்வொருவரினதும் வசதிக்கேற்ப அவர் அவர் வீடுகளில் மௌலூது வைபவம் நடைபெறும். மேலும் நபி (ஸல்) அவர்கள் பிறந்ததினத்திலும் இது நடைபெறும். இது ஒவ்வொருவரினதும் வசதிக்கேற்ப கொண்டாடினர். மௌலூது ஓதும் அறை சுத்திகரிக்கப்பட்டு வெள்ளை சீலைகளால் அலங்கரிக்கப்பட்டு பல மௌலூதுகள் ஓதப்படும் பிரதான மௌலூது பள்ளிவாசலில் வெகுவிமர்சையாக நடைபெறும். அத்துடன் பிள்ளை பிறக்கவிருக்கும் தாய்மார்களுக்கு தலைப்பாத்திகா ஓதும் நடைமுறையும் பிள்ளைபிறந்து பிள்ளைக்கு பல்லு முளைப்பதற்கு பல்லு கொளுக்கட்டை அவிக்கும் நடைமுறையும் அத்துடன்



வ/அல் அமீன் மு.வி. பாவற்குளம்

ஆண்பிள்ளைகளுக்கான கத்னாவைபவமும் வெகுவிமர்சையாக திருமண வைபவங்கள் போல் நடைபெறும். அந்த வீடுகளில் இரவில் மேளதாளம் இசைக்கப்பட்டு பாட்டுப் பாடுவார்கள். அதே போன்று பெண்பிள்ளைகள் பருவமடைவதையும் பெரும் நிகழ்வாக வீடுகளில் அலங்கரிக்கப்பட்டு வெகு விமர்சையாக நடைபெறும்.

மேலும் ஒருவீட்டில் ஒரு வேலை என்றால் அனைவரும் ஒன்று சேர்ந்து (அயலில் உள்ளவர்கள்) வேலைகளை செய்வாரகள்.

மேலும் கர்பலா சம்பவத்தை நினைவுகூறும் முகமாக ஆசரா தினம் அன்று வைபவம் ஒன்று கொண்டாடப்பட்டது. இது பாவற்குளம் ஜும்ஆப்பள்ளியின் மைதானப் பகுதியில் நடைபெறும். இவ்வைபவம் 10 நாட்களுக்கு நடைபெறும். இது ஆரம்பமாக மன்னார் (கொண்டச்சி) கிராமத்திலிருந்து முஹம்மது சரீப் புலவர் வரவழைக்கப்பட்டு சீராப்புறாணம், முகைதின் புராணம் இசைக்கப்பட்டு பெரும் கொண்டாட்டமாக நடபெறும் இறுதி நிகழ்வின் பின்னர் அனைவருக்கும் உணவு வழங்கப்படும்.

மேலும் ஆசரா தினத்தன்று அதற்கு முன் நேர்ச்சை வைப்பவர்கள் சிறு குடிசை அமைத்து அதில் தங்குவார்கள். பின்னர் ஆசரா நிகழ்வு தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும். இரவில் முதல் கொடிமரம் உருவாக்கி நட்டுவார்கள். பின்னர் இரவில் திக்குளித்தல் புலிவேசம் போல், பஞ்சா எடுத்தல், வாள்வெட்டு, புலிவேட்டையிடல் போன்ற நிகழ்வுகளும் சிலம்பு விச்சும் நடைபெறும். இறுதிநாளில் ஆட்டு கிடாய் அறுத்து உணவு சமைக்கப்படும். இவ்வைபவம் கிராமமக்கள் ஒன்று கூடும் நிகழ்வாக காணப்படும்.

*இவ் ஆசரா தினங்களில் முக்கிய பங்கு வகத்தவர்களாக*

| | | |
|---|---|---|
| தீக்குளிப்பில் ஈடுபட்டவர் | - | அஹமது லெப்பை |
| புலிவேசம் போடுபவர்கள் | - | முஹம்மட் அலி, மீராமுகைதீன் |
| றபான் அடித்தல் | - | மரிக்கார் தம்பி, மதார்சாகிபு, மிராசாஹிப். |
| வாள்வெட்டு | - | மதார்சாஹிபு, காதர் முகைதீன் |

சிலம்பு வீச்சு - சாலி, செட்டிக்குளம்
பாவற்குளத்திற்கு -
வைப்பத்தான் சாஹிபு
கச்சு முகைதீன் -
ஆண்டியாபுளியங்குளம் -
அஸ்ரப் அலி -
சூடுவெந்தபுலவு
சாகுல் ஹமீட் - பாவற்குளம்

மேலும் இம்மக்களிடம் கோலாட்ட நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இதில்,

1. சேகு அப்துல் காதர்
2. சேகு முஹம்மது
3. M. மீராமுகைதீன்
4. இஸ்மாயில் சுலைமான லெப்பை
5. இஸ்மாயில் தாவுதுக்கனி
6. இஸ்மாயில் சேகுமுகம்மது
7. S. ஹம்து லெப்பை - கவியிற்றும் திறன்

கொண்டவர்களாக காணப்பட்டனர்

மேலும் இக்கிராமத்தில் திருமணவீடு, கத்னாவைபவம், போன்ற நிகழ்வகளில் மேளவாத்தியம் பாட்டுப் பாடும் நடைமுறை காணப்பட்டது. இதில் பக்கீர் முகைதீன் சீனி முஹம்மது, ஹமீது லெப்பை அப்துல் காதர் றஹ்மான், A.L.S. முஹம்மட், ஆதம்பாவா றாசீக், ஆதம்பாவா ஜப்பார், K. மீராமுகைதின், ஆதம்பாவா குறிப்பிடத்தக்கவர்கள்.

**திருமண சம்பிரதாயங்கள் :**

பருவவயதை அடைந்த திருமணம் முடிக்க தகுதியான ஆண்கள் இருக்கும் இடத்திற்கு பெண்வீட்டார் விருப்பம் கேட்க வருவர் இதன் போது பலகார பெட்டி பரிமாறப்படும். மாப்பிள்ளை வீட்டாருக்கு மேலும் திருமணத்தன்று மணமகன் பெண் வீடு அண்மையில் என்றால் கால்

நடையாகவும் அயல் கிராமம் என்றால் வண்டி பூட்டி அதில் கொண்டு செல்லப்படுவர். இதன் போது மாப்பிள்ளை பைத் ஓதப்பட்டு, மாப்பிள்ளைக்கு குடைபிடித்து மாப்பிள்ளை குஞ்சத்தொப்பி அணிந்துவருவார். மேலும் வீதிகளில் கோலாட்டம் சிலம்பு வீச்சு, கைவிளையாட்டு போன்றன நடைபெறுவதுடன் நட்டு முட்டுமேள தாளம் இசைக்கப்பட்டு மாப்பிள்ளை பெண்வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பெண்ணின் சகோதரர் மாப்பிள்ளையின் கால்கழுவி வரவேற்க பெண்ணின் சகோதரி மாப்பிள்ளை ஆலாத்துதல் என்ற நடைமுறையும் இருந்ததுடன் இதன் போது மாப்பிள்ளை இவர்களுக்கு சந்தோசமாக ஏதாவது கொடுக்க வேண்டும். மேலும் திருமணம் முடிந்தபிறகு கணவன் மனைவி தங்கும் அறை அருகில் இருந்து பெண்கள் குரவை பாடுதல் என்ற நடைமறையும் இருந்தது. இதில் ஆசியா உம்மா, ஆமினா உம்மா ராவியத்தும்மா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். பின்னர் 7ம் நாள் பெண்வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டுக்க 101 பலகாரம் 7 வண்டில்களில் கொண்டு செல்வார்கள். இவ்வாறான நடைமுறை காணப்பட்டது.

**இக்கிராமத்தின் மத்ரசா, பள்ளிவாயல் பற்றிய தகவல்கள்.**

இக்கிராமம் 1956ம் ஆண்டுக்கு பிறகு குடியேற்றப்பட்ட பிறகு இம்மக்களின் வணக்க வழிபாடுகளை மேற்கொள்வதற்கு பள்ளிவாசல் தேவை என்ற உணர்வு மக்களிடம் மேலோங்கி ஆரம்பகட்டமாக பொதுமக்களின் பங்களிப்புடன் இக்கிராமத்தில் வீட்டுத் தோட்டம் கட்டியவர்கள் பயன்படுத்திய கொட்டிலை பெரிதாக்கி அதில் தங்களது மார்க்க கடமைகளை நிறைவேற்றினர். பிறகு 1965ம் ஆண்டளவில் பள்ளிவாசல் கட்டப்பட வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி அத்திவாரமிடப்பட்டு தற்பொழுது இருக்கும் பள்ளிவாசல் கட்டப்பட்டது. இதற்கு முக்கிய பங்களிப்பு வழங்கியவர்களில் மரணித்த காதர்முகைதீன் மம்மலியார், S. நாகூர்கனி, மீராசாஹிப் அஹமது லெப்பை, ஆ. சாஹீல் ஹமீட் (ஹாஜியார்), முஹம்மது லெபடபை அப்துல் காதர், முகம்மட் அலி, முகைதீன் கனி, அபுசாலிகு, சேகுமுஹம்மது, முஹம்மது லெப்பை, அப்துல் காதர், இஸ்மாயில் தாவுத்கனி, மிலார்முகைதீன், M. சாஹுல் ஹமீட், ஹாஜியார் இப்றாகீம்

(GS) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாகவும் ஏனையோரும் பங்களிப்பு செய்துள்ளனர்.

மேலும் முதல் பள்ளிபரிபாலன சபையின் தலைவராக செயற்பட்டவர்கள்

1. மிலார்முகைதீன்
2. முஹம்மது அலி
3. அபுசாலிகு
4. அப்துல் ஹமீட்
5. சேகுமுஹம்மது
6. M. சாகுல் ஹமீட்
7. S.M. கனி
8. S.H. சாகுல் ஹமீட்
9. S.A.C. அஸீஸ்என்பவர் தற்பொழுது பள்ளிபரிபாலன சபையின் தலைவராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். மேலுள்ளவர்களின் வழிகாட்டலுடன் பெயர் குறிப்பிடாத பலர் பள்ளியின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளனர்.

அத்துடன் கிராமம் வளர்ச்சியடைய மக்கள் பெருக சிறிய தைக்காப்பள்ளி ஒன்று கட்டப்பட்டது. இது 1980ம் ஆண்டளவில் கட்டப்பட்டது. இது உருவாவதற்கு பெரிய பள்ளிவாசலின் தலைவரை மர்ஹூம் அபுசாலிகு என்பவருடைய காலத்தில் அனுமதி வழங்கப்பட்டு பள்ளிவாசல் ஓலையால் கட்டப்பட்டு பின்னர் விரிவுபடுத்தி செங்கற்களால் கட்டப்பட்டது.

இதற்கு முக்கிய பங்களிப்பு வழங்கியவர்களில்

1. S.M. கனி
2. சதகதுல்லா
3. S.H. சாஹு"ல் ஹமீட்
4. இவர்களுள் முகம்மது காசிம், உதுமான் லெப்பை அலியார் , அப்துல் ஹமீட் இன்னும் பலர் முக்கிய பங்கு வகித்ததுடன்

கிராம இளைஞர்கள் பல உதவிகளை செய்துள்ளனர். மேலும் நிதிப் பங்களிப்பு செய்தவர்களில் முக்கியமானவராக மதார்முகைதீன் (ஹாஜியார்) குறிப்பிடத்தக்கவர்.

மேலும் இப்பள்ளி 2000ம் ஆண்டு மீள்புனரமைப்பு செய்யப்பட்டு வேலை 100மூ பூர்த்தியாகாமல் உள்ளது மிவும் கவலை தருகின்ற விடயமாகும். குர்ஆன் மத்ரஸா இப்பள்ளியுடன் அண்டியதாக நடைபெற்று வந்தது. 2000ம் ஆண்டு தனியாக புதிய மத்ரஸா கட்டப்பட்டது.

**பாடசாலை :**

இக்கிராமம் உருவாக்கப்பட்டவுடன் பாடசாலையும் கட்டப்பட்டது. ஆரம்பத்தில் 1956ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. முதல் அதிபராக திரு அந்தோனிப்பிள்ளை கடமையாற்றியுள்ளார். ஆரம்பத்தில் இப்பாடசாலையின் பெயர் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையாக இருந்தது. ஆரம்பத்தில் காலையில் முஸ்லிம் பிள்ளைகளும் மாலையில் சிங்கள மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இருநெர பாடசாலையாக இயங்டகியது. ஆரம்பத்தில் SSC வரை இடம்பெற்றது.

தற்பொழுது பாடசாலையின் பெயர் மாற்றம் 01.01.1998 இருந்து அல்.அமின் முஸ்லிம் வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்குகின்றது. தற்போது பாடசாலையின் அதிபராக ஆ.மு. ஜகுபர்தீன் (மௌலவி) கடந்த 15 வருடங்களாக அதிபராக கடமையாற்றுவதுடன் இவருக்குக் கீழ் 15 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறனர். இவருடைய காலத்தில் பாடசாலை பல சாதனைகளை நிலைநாட்டியதுடன் தற்போது க.பொ.த. உயர்தர வகுப்பு ஆரம்பமாகி உயர்தரப்பாடசாலையாக விளங்குகின்றது. ஒவ்வொரு வருடமும் பரீட்சை பெறுபேறுகளிலும் விளையாட்டுப்போட்டி ஏனைய தமிழ்தினப்போட்டி, சிங்கள மொழிப்போட்டி, ஆங்கிலதினப்போட்டி இஸ்லாமிய அறிவுப்போட்டி போன்ற போட்டிகளில் ஏனைய பாடசாலைக்கு சவால் மிகுந்த போட்டியாக இப்பாடசாலை திகழ்கின்றது. 400 மாணவமாணவிகள் கல்விகற்கின்றனர். இங்கு

4 கட்டிடம் மாத்திரம் காணப்படுவதால் வகுப்பறைப்பற்றாக்குறை, தளபாடப்பற்றாக்குறை, நூலகவசதி, மின்சாரவசதி, தொலைபேசி வசதி, அய்வுகூட வசதி போன்றன இன்மையால் மாணவர்கள் ஆசிரியர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போழுது அல் அமீன் முஸ்லிம் வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள்.

1. M.K. ஜகுபர்தீன் (அதிபர்)
2. T. ஜலால்தீன் - உப அதிபர்
3. S.H. றாசீக் - ஆசிரியர்
4. S.M. நவாஸ் - ஆசிரியர்
5. K.M.M. அனீஸ் - ஆசிரியர்
6. A தரீப்கான் - ஆசிரியர்
7. M.M.M. சகாப்தீன் - ஆசிரியர்
8. M.S. நிஸார் - ஆசிரியர்
9. S.T.M. சமீம் - ஆசிரியர்
10. U. உபைதுல்லா - ஆசிரியர்
11. N. சலாஹு"தீன் - ஆசிரியர்
12. V.M. நஜீம் - மௌலவி
13. M. பமீலா - ஆசிரியை
14. M.M. காசீன் ஆசிரியர்

**கிராமத்தின் கல்விநிலை:**

இக்கிராமத்தின பாடசாலையின் அண்மைக்கால வளர்ச்சிக்கு முன் 1990ம் ஆண்டு இடப்பெயர்வின் காரணமாக மாணவர்கள் வெளியிடங்களுக்கு சென்று கல்வி கற்று தங்களை வளப்படுத்தியவர்களாக காணப்பட்டனர்.

இக்கிராமத்தின் கல்வி மூலம் முன்னேறியவர்களாக

1. கலாநிதி M.S. அனீஸ்
2. M.K. ஜகுபர்தீன் - அதிபர் (மௌலவி)
3. S.H.M. காசிம் (JP) - அதிபர்

4. M.M. மீரா முகைதீன் - அதிபர்
5. T. ஜலால்தீன் - ஆசிரியர்
6. S.H. றாசிக் - ஆசிரியர்
7. S.M. நவாஸ் - ஆசிரியர்
8. M.M. சஹறாப்தீன் - ஆசிரியர்
9. S.I.M. சமீம் - ஆசிரியர்
10. M.S. நிஸார் (B.A) - ஆசிரியர்
11. V.M. நஜீம் (B.A) – மௌலவி ஆசிரியர்
12. M.S. அனாப் (BA)
13. M.C. உவைஸ் (மௌலவி) – மதீனா பல்கலைக்கழகம்
14. M.S. அசீஸ் (B.A)
15. R. மர்ஹூம் கபீர் - GS
16. M.S.A மஜீட் - தபால் ஊழியர்
17. I. சுரீப் - ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்
18. M.M. சியாம் - தபால் ஊழியர்
19. M.M. சாஜஹான் - RDF
20. M. பமீலா – ஆசிரியை
21. J. பரீட் - சமுர்தி ஊழியர்
22. M.M. இஸ்மாயில் - தபால் ஊழியர்
23. M. நஹறாக் - தபால் ஊழியர்
24. S.A. றமீஸ் - அல் கரீமியா அரபுக் கல்லூரி

இன்னும் பலர் உயர்கல்வி கற்றுவருவதுடன் பல மாணவர்கள் உயர்தரம் கல்வி கற்று தொழில் வாய்ப்புக்காக ஏங்கிக்கொண்டிருக்கின்றனர்.

மேலும் பல மத்ரஸாக்கள் மூலம் கல்வி கற்று மௌலவிகளாக இருக்கின்றார்கள். இவர்களில்

1. M.K. ஜகுபர்தீன் மௌலவி - அதிபர்
2. M.S. அனாப் மௌலவி
3. M.S. நிஸாக் மௌலவி
4. M. அமீர் மௌலவி
5. M.C. உவைஸ் மௌலவி

6. V.M. நஜீம் மௌலவி
7. S. கைஸ்தீன் மௌலவி
8. J. றபியுதீன் மௌலவி
9. A. அசீம் மௌலவி
10. M. வாஜித் மௌலவி
11. S. வதூத் மௌலவி
12. A. நசுறுதீன் மௌலவி
13. A. நபாஸ் மௌலவி
14. S. மஜிதீன் மௌலவி
15. A. கபீர் மௌலவி
16. I. முர்லியா மௌலவியப
17. A. கைருன் நிஸா மௌலவியா போன்றோர் அடங்குகின்றனர்.

**பாவற்குள கிராம மக்களின் அயல்கிராமங்களுடனான தொடர்பு**

பாவற்குள பிராமத்தைச் சூழ தமிழ், சிங்கள மக்கள் வாழ்வதால் ஓர் சுமுகமான உறவு காணப்பட்டது. இம்மக்கள் இன மத பேதமின்றி தமிழ் மக்கள் சிங்களமக்களிடம் சிங்கள தமிழ் மக்ள் முஸ்லிம் மக்களிடம் தொடர்பு காணப்பட்டது. முஸ்லிம்களின் முக்கிய வைபவங்களில் தமிழ் சிங்கள மக்கள் இனமத பேதமின்றி கலந்து கொள்வர். இவர்கள் அவர்கள் வீடுகளுக்கு செல்வார்கள். அத்துடன் விளையாட்டுத் தொடர்புகள் மணவீடுகளுக்குச் செல்லல் போன்ற தொடர்பும் காணப்பட்டது.

மேலும் ஆரம்ப காலப்பகுதியில் எமது கிராமங்களில் வாழ்ந்தவர்கள் வீரம் மிக்கவர்களாகக் காணப்பட்டனர். முஸ்லிம் கடைகளில் சிங்களவர்களின் அத்துமீறல்கள் தொல்லைகள் காரணமாக ஒருவரை வதை செய்து அதற்குரிய சிறந்த தண்டனையை வழங்கினர். இதன்மூலம் அவன் இறந்தான்.

இதில் ஆதம்பாவா என்பவர் இம்மக்களின் வரலாற்றில் பேசப்பட வேண்டியவர். இவருக்கு உடந்தையாக செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவர் சமூகத்திற்காக சிறைவாசம் சென்றனர்.

இதில் ஏ. காதர், ஆதம் லெப்பை, S.H.M. காசிம் என்பவர் குறிப்பிடத் தக்கவர். இவர்கள் சமூக சிந்தனையாளராக் காணப்பட்டார்கள்.

மேலும் பாவற்குள கிராமத்தின் துக்கதிளமாக ஆகஸ்டிக்கப்பட வேண்டிய நாளாகவும் வரலாற்றில் மறக்கமுடியாத நாளாகவும் 1990ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 13ம் திகதி அக்காலப்பகுதியில் வாழ்ந்தவர்களால் அவர்கள் உயிர் இருக்கும் வரைக்கும் மறக்கமாட்டார்கள். இம்மக்களின் உறவுகளில் 9 பேரை இழந்ததுடன் இம்மக்கள் அகதியாக வெளியேறிய நாளாகவும் இருக்கின்றது. இதன் போது தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையிலான போராட்டத்தின் பின் அப்பாவிகளான 09 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

1. S.H. சம்சுதீன்
2. M பசாலிகு றஹீம்
3. அப்துல் ஹமீது அமீர்
4. அப்துல் ஹமீது கலீல்
5. உசன் தம்பி அப்துல் ஜப்பார்
6. சேகு மதார் காலிதீன்
7. S. முஹம்மதும்மா
8. காதர் சாஹிபு ஜெகியாக்கான்

இதன்பின் இம்மக்கள் அகதிகளாக அனுராதபுரம் (இக்கிரிகொல்லாவ, நாச்சியாதுவ, கனேவல்பொல, தெலும்புகல்ல, பானகமுவ, குருமட்ட போன்ற இடங்களிலும் வாழ்ந்து சொல்லொனாத் துயரங்களுக்கள்ளாகி வாழ்வில் படாத கஷ்டங்களை அனுபவித்து மீண்டும் 1993ம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் குடியேறியுள்ளார்கள்.

மேலும் இங்கு 400 குடும்பங்கள் வசிக்கின்றன. 3000 க்கும் மேற்பட்டோர் வாழ்வதுடன் 1300 வாக்காளர்களைக் கொண்ட வவுனியாவின் பெரும் கிராமமாக இக்கிராமம் விளங்குகின்றது.

இருந்தபோதும் இங்கு பல சங்கங்கள் காணப்படுகின்றன. இதில் கிராம அபிவிருத்தி சங்கம் தோற்றுவிப்பதில் ஆரம்பத்தில்

பங்காற்றியவர்களாக S.H.M. காசிம், M.S.A. மஜீட், K. கபீர் குறிப்பிடத்தக்கவர்.

பாவற்குளத்தின் விளையாட்டுக் கழகத்தை தோற்றுவிப்பதில் முன்னிலை வகித்தவராக K. கபீர், G.S. மற்றும் M.S. அமீர் குறிப்பிடத்தக்கவர்.

இளைஞர் கழகத்தை தோற்றுவிப்பதில் முன்னிலை வகித்தவர்களாக செய்யது இப்றாகிம் முகம்மது சமீம் A.K. நளீம், J. பளீல் போன்றோர் அடங்குகின்றனர். மேலும் மாதர்சங்கம், கமக்காரர் அமைப்பு போன்ற பல அமைப்புக்களும் இக்கிராமத்தில் காணப்படுகின்றது.

மேலும் இக்கிராமத்திற்கு பல அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளது மிகவும் கவலையளிக்கின்ற விடயமாகும்.

வரண்ட பிரதேசத்தில் இக்கிராமம் அமைந்துள்ளதால் வருடத்தில் 6 மாதம் தண்ணீர் எடுப்பதற்கு இம்மக்கள் பல மைல் தூரம் செல்ல வேண்டியுள்ளது. இப்பிரச்சினையை தீர்க்கும்படி பலரிடம் கூறியும் தீர்ந்தபாடில்லை.

மேலும் வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டாலும் மண்வீதிகளாகவும் குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இன்றைய நவீன உலகத்தில் தொடர்பாடல் மிக அவசியமாக காணப்படுகின்ற வேளையில் அதற்குரிய எந்த வசதியும் இல்லை.

மேலும் ஆரம்பத்தில் வைத்தியவசதி காணப்பட்ட இக்கிராமத்தில் இன்று அதற்கு பலமைல்கள் செல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறு பல குறைபாடுகளும் காணப்படுகின்றது.

*தொகுப்பு*

செய்யது இப்றாஹீம் முஹம்மது சமீம்
ஆசிரியர்

# வவுனியா (வன்னி) கலாசாரம் - முஸ்லிம்கள் ஒரு நோக்கு

A.K. கசைமத் (மௌலவி)

வளமிக்க வன்னியின் வரலாற்றிலே, காலத்தின் கண்ணோட்டத்திலே மறைந்து விட்ட எத்தனையோ பண்பாடுகள் அவற்றின் கண் பொதிந்து விட்ட புதுமைகள் புத்தியின் நுட்பத்தைக் காட்டும் கருத்துக்கள் வளம் கெடாத வாழ்க்கை முறைகள் காலத்தின் கண்ணாடி முன் பசுமை நினைவுகளாக கண் முன் மலர்கின்றன.

வன்னியின் எல்லைகளாக வடக்கே யாழ் தீபகற்பக் கருங்கடல், பல்லோர் புகழருவி தெற்கெல்லையாகவும், நல்ல திருமலை கீழ் பால்கேதீச்சரம், மேற்கில் மாணத்திகம் வன்னி நாடு என வகுத்துக் கொண்ட வன்னி நாடாகும். வன்னியில் மாவட்டங்களாக முல்லைத் தீவு, மன்னார், வவுனியா (கிளிநொச்சி) இன்று காணப்படுகின்றன.

குயில் பாட மயில் ஆடும்
குளிர் தரும் வனச் சோலைகளும்
மானும் மரையும் தாவிப்பாயும் அடர்ந்த அடவிகளும்
கொக்கும் நாரையும்
குளித்து விளையாடம் குளங்களும்
நீர் வடித்து வாய்க்காலில் செல்ல
அவற்றை வாங்கி வளம் செழிக்கும் வயல்களும்
ஓன்று சேர்ந்த முல்லையும்
மருதமுமாகிய மரோரம்மியமாக
விளங்கு... [illegible]

வயல் நிலங்களையடுத்து மக்கள் வாழும் மேட்டு நிலங்கள். அம்மேட்டு நிலங்களால் ஓலைகளால் அல்லது வைக்கோல்களால் கூரையமைத்து மண்ணைக் குலைத்து மன்னர் கட்டும் மாளிகை போல் வீடுகள். முன்னே திண்ணையும் மாலும், வெளியே மாம்மரம், பலாமரம். ஒற்றைக்காலில் தவங்கிடக்கும் தென்னை அதில் குந்தி விளையடும் குருவிக் கூட்டங்கள். கதை பேசும் அத்தனையும் இரசித்து இறைவனை ஐவேளை தொழுது இனங்களுக்கிடையே இன்புற்று வாழந்த வன்னிமக்கள் முஸ்லிம்களின் வரலாறு என்றும் வரலாற்றில் பதியும் பழையதோர் அத்தியாயம் என்றால் மிகையில்லை.

1980 க்கு முன்பு தழிலர் கலாசாரம் ஊடுருவியிருந்தமையைக் கோடிட்டுக் காட்டலாம். திருமண வைபவமென்றில் மாப்பிள்ளை பெண் வீட்டார் தங்களின் கலியாணப் பேச்சு தொடக்கம் திருமணம் முடியும் வரையில் பல்வேறு கலாசார மரபுகள் பின்பற்றப்பட்டன.

வீட்டுச் சுவர்களில் வெள்ளைக் கோதுமையில் கோலம் போடுவது பெண் வீட்டார் பலகாரம் செய்து மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்புதல், மாப்பிள்ளைக்கு மோதிரம் போடுவது, வரதட்சனையில் காணி, வீடு பணம் வழங்குதல், மாப்பிள்ளையை ஆலாத்தி வரவேற்றல், மாப்பிள்ளைக் கப்பு உட்பட பந்தல் போடுதல் மேலதாளங்களில் திருமணம் நடைபெறும், கோலாட்டமும் நடைபெறும், பிற்காலத்தில் ஸ்பீக்கர் இன்னிசை வழங்கியது குறிப்பிடத்தக்கது. திருமணப் பந்தலில் ஒரு இன்னிசைக் கச்சேரியே நடைபெறும்.

சுன்னத் வீடு ஒரு சிறிய கலியாண வீடு போல நடைபெறும். ஆண்களுக்கு நடைபெறும் விருத்தாசனம் ஏழு நாட்களுக்கு சாப்பாடு சமையலுடன் கொண்டாட்டமாக நடைபெறும். சீன வெடிகள் போட்டு மகிழ்வர். 1975ம் ஆண்டிற்கு முன்பு வவுனிய முஸ்லிம்களிடம் இவ்விடயம் காணப்பட்டது. சமய நெறி நாளுக்கு நாள் முன்னேற்றம் காணப்பட இவ்விடயங்கள் பல ஒழிக்கபட்டு விட்டன.

முஸ்லிம்களின் உடைகளை நோக்கினால் ஆண்கள் சாரம் சேட், பெண்கள் சாரி போன்ற உடைகள் காணப்பட்டது. தற்பொழுது ஜுப்பா, தொப்பி, அபாயா, பர்தா மற்றும் இந்தியா முஸ்லிம்கள் அணியும் உடைகள் தற்பொழுது அறிமுகமாகியுள்ளது. எது

எவ்வாறாயினும் பழைய பாரம்பரிய முறைகள் இன்னும் தொடர்வதை நாம் காணலாம்.

மொழியை நோக்கினால் தமிழ் மொழியைப் பேசுவதை வழமை யாக்கிக் கொண்டாலும் நகரப்புர முஸ்லிம்கள் சிங்கள மொழியையும் தாராளமாகப் பேசினர்.

தமிழ் மொழி பேச்சு வழக்கில், சாளம்பைக்குள மக்களின் பேச்சு சற்று வித்தியாளமானது. ஆனால் சுவையாகவுசம் இனிமையாகவும் காணப்பட்டது. இன்னும் இப்பேச்சு மொழி அவ்வூரில் உள்ளது.

புளிதறித்த புளியங்குளம், சுடுவெந்தபுளவு, பாவற்குளம், சின்னச்சிப்பிக்குளம், ஆனைவிழுந்தான் போன்ற பிரதேசமக்களும் சற்று வித்தியாசமாகப் பேசினாலும் தமிழ் மொழி வளத்தை மேம்படுத்த தங்களால் இயன்றளவு அதன் தொன்மையையும் வளத்தையும் மேம்படுத்த உதவியுள்ளனர்.

பட்டாணிச்சூர் மக்கள் சற்று நகரத்திற்கு அண்மையில் காணப் பட்டபடியால் தமிழர் பேச்சு வடிவம் அதில் புதைந்திருந்தமையைச் சுட்டிக்காட்டலாம். தமிழ் மொழிவளர்ச்சிக்காக பட்டாணிச்சூரைப் பிறப்பிடமாகக் கொண்ட முஹம்மது சரீப் றம்சீன் இஸ்லாமியக் கலைகள் எனும் இஸ்லாமியப் பாரம் பரிய நூலை 2001ம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இது வவுனியா முஸ்லிம் மக்களின் முதல் நூலாகும்.

கவிப்புலமையுடைய பலர் காணப்படனர். பலர் தேசிய பத்திரிகை வானொலி, தொலைக்காட்சி போன்ற வற்றிலும் கவியரங்குகளிலும் தமது திறமையைக் காட்டியள்ளனர். பலர் மெச்சும் வண்ணம் தேசிய போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர். அந்தவகையில் ஆசிரியர்களான அசனார் றகுமதுல்லா, M. ஆப்தீன் (மாங்குளம) அப்துல் சமது, M.S. றம்சீன், M. றஜப்தின் ஆகியோரைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும்.

மேடைப் பேச்சு, சிறுகதை, பாடல் இயற்றல், நாடகம், கட்டுரை போன்றவற்றில் ஈடுடபாடு கொண்டவர்கள் பலரும் காணப்படுகின்றனர். மீடியாத்துறையில் ஈடுபாடு கொண்ட மக்கள் காதரைக் குறிப்பிடலாம்.

நாட்டு வைத்தியத்துறையில் வைத்தியர்களாக M. இஸ்மாயில் (சாளம்பைக்குளம்) முஹம்மது அலியார் பரம்பரையில் முகம்மது சரிபு Ramp (பட்டாணிச்சூர்) சவுக்கலி (சாளம்பைக்குளம்) போன்ற பல்வேறுபட்டவர்கள் (ஆண், பெண்) கை மருத்துவம் செய்வதில் ஈடுபாடு கொண்டவர்கள் வைத்தியர் யூசுப் (சூடுவெந்தபுலவு) பாம்புக்கடி வைத்தியத்தில் பிரசித்தி பெற்றவர். இவ்வாறு மேற்குறிப்பிடப்பட்டவர்கள் நாடறிய வைத்தியம் செய்வதில் வல்லவர்களாக காணப்பட்டனர்.

சிறப்பான சொற்பொழிவு வழங்க வல்ல உலமா பெருமக்களை எல்லாக் கிராமமும் கொண்டிருந்தது. மார்க்க சொற்பொழிவை மிகவும் திறமையாகவும் இனிமையாகவும் நடத்துவர். பள்ளிவாசல்களை நாம் நோக்கினால் அவ்வூரின் கலாசார சின்னமாக திகழ்வதை யாரும் மறுப்பதற்கில்லை. மதீனாப் பள்ளிவாசலின் சாயல்களைக் கொண்டுள்ளபடியால் அழகும் இரம்மியமும் ஒருங்கிணைந்து காணப்படுவதை நாம் அவதானிக்க முடியும்.

அந்தவகையில் ஊரின் முகப்புகளில் பள்ளிவாசல்கள் வரவேற்பதைக் காணமுடிகின்றது. வவுனியா நகரப்பள்ளிவாசலின் அழகியதோற்றம் இதற்கோர் உதாரணமாகும். இவ்வாறு இஸ்லாமியர்கள் வாழும் ஊர்களில் பள்ளிவாசல்களின் அழகிய தோற்றத்தை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

1990ம் ஆண்டு இனப்போர் காரணமாக வெளியேறி முஸ்லிம்களின் கலாசார சின்னமான பள்ளிவால்கள் பல பாதிப்புக்குள்ளாகியதை யாரும் மறுப்பதற்கு இல்லை. இது வரலாற்றில் கரை படிந்ததாயுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் தலைமைப் பள்ளிவாசலாக (மார்கஸ்) பட்டாணிச்சூர் முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் திகழ்கின்றது. இதன் ஆரம்பகால அழகுத்தோற்றம் மதினா மற்றும் தாஜ்மகால் போல் இருந்ததை நாம் காணலாம். இன்று நவீன அமைப்புடன் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு முஸ்லிம் ஊர்களில் மத்ரசாக்கள் கம்பீரமாகக் காணப்படுகின்றது. மாணவர்கள் குர்அன் வகுப்பில் கற்கின்றனர்.

இவ்வாறு கிதாபு மத்ரசாவாக கரீமியா, சூடுவெந்தபுலவும், ஹிப்ளு மத்ரசாவாக பட்மாணிச்சூர் மத்ரசாவும் காணப்படுகன்றது.

அக்காலத்தில்

கலப்பை காக்க அலியாரின் கலப்பையும்
அசனார் காக்காவின் வண்டில்மாடும்
செயின் காக்காவின் விதைநெல்லும்
மீராசாகிபு காக்காவின் ஆலோசனையும்
இருந்தால் போதும்
நெல் விளைச்சலுக்கு
என்று தமிழ்மக்கள் அன்புடன் நினைவு கூறுவார்கள்.

1990ம் ஆண்டிற்கு பின்னர் பட்டாணிச்சூர் கிராமத்தில் பல்வேறு அரசியல் கலாசார மாற்றங்கள் வேரூன்றியுள்ளவை குறிப்பிடத் தக்கதாகும்.

நகரசபை உறுப்பினர்கள்
சுலைமான் அசனார், S. கலீல், நாகூர்க்கனி மீராமுகைதீன், M. யூஸுப் (U.C. குவாட்டஸ், வவுனியா), M.S. ஆரிப்

குவாஸிகள் விபரம்
மர்ஹூம் ஜனாப் மதார் சாஹிப், அல்ஹாஜ் S.M.A. கலீல்

அகில இலங்கை சமாதான நீதவான்கள்
மர்ஹூம் அல்ஹாஜ் S. ஜமால்தீன்,
அல்ஹாஜ் M.A. முகம்மது சரீப்

கிராம சேவையாளர் விபரம்
மர்ஹூம் A. இஸ்மாயீல், Y. நஸார்

பிரதம எழுதுவினைஞர்கள்
M.I. லதீப் (கச்சேரி), கலீல் (கல்வித்திணைக்களம்)

நீண்டகால முகைதீன் ஜீம்மா (பட்டானிச்சூர்) முஅத்தீன்களாக மர்ஹூம் யாஜ்தீன் கடமையாற்றியுள்ளார். அப்துல் ஹமீட் லப்பையாகவும் கடமை புரிந்தள்ளார்.

## 214 B பட்டாணிச்சூர் புளியங்குளம் மௌலவிகள் விபரம்

காஸிம் மௌலவி (மர்ஹூம்), M.A.C.M. ரஸூல்
M.K. சுலைமான் லெப்பை, M.S. சேகுமதார் (மர்ஹூம்)
M.I.A. அஸீஸ், S.A. சமத் - BA Dip. in ED
A. பஸீர், A.H. சித்தீக், M.A.C.M. ஜலீல், M. மஃறூப், A.K. குசைமத்
M.A.C.M. ஜாபீர், A.R.M. ஜெமீல் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
M.S. அமீனதீன் - தஃவா அகடமி சர்வதேச மல்கலைக்கழகளம் இஸ்லாமாத், பாகிஸ்தான், முஸ்லிம் கலாச்சார அமைச்சு மூலம் 1999 புலமைப் பரிசில் பெற்றுள்ளார்.
A. முஸம்மில், A. சஹீர், S. சிப்லி – வெளிநாடு சென்று கிறாஅத் போட்டியில் பங்கு பற்றியுள்ளார்.
F. சாதிகீன், A. தௌபீக், A.H. இம்டியாஸ், I. ரதீம், A.B.M. றிஸ்வான் - சூடு வெந்தர்லவு மத்ரஸா விரிவுரையாளர்
M.A. வஹாப், M.S. ரஸீல் மரைக்கார், S. கலீல் - சமுர்தி
A. நிஃமத்துல்லாஹ், M. முனவ்பர்

## CTB இ.போக்குவரத்துச் சபை

M.H. ஜெஸ்மின், பரிஸ், இல்முதீன், மர்ளீன், இஸ்மத், கியாஸ்

## தபால் கந்தோர்

முனாப், தாஹா, இஸ்மாயில், உபைதுல்லாஹ், ஜப்பார், சுபைர், றாபி, ரிஸ்வான், சஹித், அசாம், முசீன், றம்சீன் - பாவற்குளம் (உ.த.கந்), காமீம், பஸீர் - வவுனியா தபாலகம்

## கல்வித் திணைக்களம்

M.A.J. சஹாப்தீன்

**அரச சார்பற்ற நிறுவனங்கள்**

| | |
|---|---|
| K.M. சியாம் | FSD |
| ரிப்தீன் | FSD |
| லறீப் | epahg |
| ரைசான் | RDF |
| றிஸ்மி | UNHCR |
| சுபைர் | UNHCR |
| சுக்ரி | WUC வூஸ் |
| துவான் மன்சீல் | WUC |
| இர்பான் | CTF |
| அஸ்மிர் | CTF |
| றபீக் | CTF |

**கூட்டுறவுச் சங்கம் (MPCS)**

சுல்தான்
அப்துல் பாரி
M.M. றாஸிக் - வங்கி ஊழியர்
Y. றஸார் - G.S. மகாரம்பைக்குளம்)

**கச்சேரி வவுனியா**

| | |
|---|---|
| லத்தீப் | எழுதுவினைஞர் |
| அமீர் | ,, |
| M.H.M. றாஸீல் | அபிவிருத்தி உதவியாளர் |
| நவாஸ் | சமுர்தி உத்தியோகத்தர் |

கச்சேரி – மன்னார் கடாபி – அபிவிருத்தி உதவியாளர்

**பிரதேச செயலகம் வவுனியா**

ஜரஸ்தீன்
மசூதா அபிவிருத்தி உதவியாளர்
ஜுமானா ,, ,,
பிரதேச செயலகம் (வெ. சேட்டிக்குளம் )
நியாஸ் அபிவிருத்தி உதவியாளர்

**நகர சபை வவுனியா**

சாலிஹ் காவலாலி
M.K.M. நயீம் ,,
M.K.M. நாகூர்கனி ,,
S.M. நளீம் அபிவிருத்தி உதவியாளர்

**வைத்தியசாலை வவுனியா**

சனூர்தீன்
குதூப்
ஹிதாயா
பஸ்ரீன் MLT கண்டி வைத்தியசாலை

**விவசாயத் திணைக்களம்**

அக்பர்

## வவுனியா மாவட்ட
## தேசிய மீலாத் மலர் குழு

1. அல்ஹாஜ் M.I. முத்துமுகம்மது (மாவட்ட சமுர்த்தி இணைப்பு அலுவளர்) - தலைவர்
2. ஜனாப் S.K. ஆப்தீன் (ஆசிரியர்) (வன்னி மைந்தன்) - நூலாசிரியர்
3. ஜனாப் M.H.M. றாசில், B.A. - உறுப்பினர்
4. ஜனாப் S.I.M. சமீன் (ஆசிரியர்) - உறுப்பினர்
5. அல்ஹாஜ் மௌலவி S.A. சமது (ஆசிரியர்) - உறுப்பினர்
6. அல்ஹாஜ் M.S. றம்ஸீன் (அதிபர்) - உறுப்பினர்
7. மௌலவி S.M. சியாத் - உறுப்பினர்
8. ஜனாப் U. உபைதுல்லா - உறுப்பினர்
9. ஜனாப் K.M.M. அனீஸ் - உறுப்பினர்
10. ஜனாப் S. றமீஸ் - உறுப்பினர்
11. ஜனாப் M.S. அனாப் - உறுப்பினர்
12. ஜனாப் N.P. ஜுனைத் மௌலவி (மதீனா) - உறுப்பினர்
13. ஜனாப் M.I. முகைதீன் (ஆசிரிய ஆலோசகர்) - உறுப்பினர்

LIBRARY
25 NOV 2011
*SEUSL*



008537